
# க.பொ.த. சா.தர இஸ்லாம் பரீட்சை வழிகாட்டி



A PROJECT BY THE

ROYAL COLLEGE ISLAMIC SOCIETY

# 1.அகீதா

அகீதா என்பது, நம்பிக்கைளால் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிரந்தரமானதும் இறுதியானதுமான யதார்த்தங்களைக் குறிக்கின்றது. அகீதா மற்றும் அகாஇத் என்ற சொற்பிரயோகங்கள் நம்பிக்கை விசுவாசம் என்பதைக் குறிக்கின்றன. அனைத்து நபிமார்களும் ஏக அகீதாவினையே போதிப்பதற்காக அனுப்பப்பட்டார்கள் என அல்குர்ஆன் கூறுகின்றது. அல்குர்ஆன் சுன்னாவிற்கு அடிப்படையிலே அகீதா கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த விடயங்களின் ஆய்வு இல்முல் அகீதா அல்லது இல்முல் அகாஇத் என்றழைக்கப்படுகின்றது.

ஒரு ஹதீஸின் பிரகாரம் அகீதா 6 அடிப்படை அம்சங்களினடியால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

1. அல்லாஹ் மீதான நம்பிக்கை - அல்லாஹுத் தஆலா இருக்கின்றான். அவன் தன் பண்புகளால், அழகிய திருநாமங்களால் தனித்தவன். அவனது ஆற்றல்கள் வல்லமைகள் சக்தி தொடர்பாக இப்பகுதியில் பேசப்பட்டுள்ளது
2. மலக்குமார்கள் மீதான நம்பிக்கை - இப்பகுதியில் மலக்குமார்கள், ஜின்கள் மற்றும் ரூஹ் பற்றி பேசப்பட்டுள்ளது.
3. வேதங்கள் தொடர்பான நம்பிக்கை - ஸுஹுபுக்களும் மனிதவர்க்கத்தின் நேர்வழிக்காக அனுப்பப்பட்ட மதங்கள், வேத புத்தகங்கள் பற்றி இப் பகுதியில் பேசப்பட்டுள்ளது.
4. நபிமார்கள், ரசூல்மார்கள் மீதான நம்பிக்கை - நபிமார்களின் பண்புகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் மற்றும் அவர்களின் பணி தொடர்பாக இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளது.
5. மறுமை நாள் பற்றிய நம்பிக்கை - கப்ர், பஹ்ஸ், ஹிஸாப், மீஸான், ஸிறாத், ஜன்னா, நார் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.
6. கழா கத்ர் பற்றிய நம்பிக்கை - சர்வ உலகமும் அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரமே இயங்குகின்றது என்ற விடயம் இங்கு பேசப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட அகீதாவின் 6 அம்சங்களும் இஸ்லாமிய அறிஞர்களால் 4 வகைகளாக பிரித்துநோக்கப்படுகின்றன.

- அல் இலாஹிய்யாத்
- அந் நுபுவ்வாத்
- அர் ரூஹானிய்யாத்
- அஸ் ஸம்இய்யாத்

பின்வரும் அம்சங்கள் அகீதாவின் சீரான ஓட்டத்தை சிதைக்கச்செய்தன.

1. முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தோன்றிய அரசியல் பிரச்சினைகள்.
2. ஏனைய நம்பிக்கைகளின் தாக்கம்.
3. எல்லை கடந்த நம்பிக்கை சார் சிந்தனைகள்.
4. இவை போன்ற ஏனைய காரணங்கள்.

ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, மு.ஃ.தஸிலா போன்ற அகீதா பிரிவினர்கள் வித்தியாசமான சிந்தனைகள், கருத்துக்களைக் கொண்ட முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டனவாகும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் என்ற சரியான அகீதாவின் பால் மக்களை வழிநடத்தும் விடயத்தில் அரும்பாடுபட்ட அறிஞர்களாக இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல், இமாம் அபுல் ஹஸன் அல் அஃஅரி, இமாம் அபுல் மன்சூர் அல் மாத்ரூதி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். நபி (ஸல்) அவர்களையும், அன்னாரின் ஸஹாபாக்களையும் பின்பற்றுகின்றவர்களே அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் என்றழைக்கப்படுகின்றனர். எமது ஈமான் இவ்வுலகில் நேர்த்தியாக இருப்பதற்கு நாமும் அவர்களையே பின்பற்ற வேண்டும்.

## 2.ஈமானும் அமலும்

இஸ்லாத்தின் நியதிகளில் நம்பிக்கை வைத்தல் ஈமான் எனப்படும். அந்நியதிகளைப் பின்பற்றுதல், அவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றன அமல் என அழைக்கப்படும். ஈமான் இன்றி மேற்கொள்ளப்படும் எந்த அமலும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வுண்மை புனித அல்குர்ஆனில் 70ற்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதானது ஈமானுடன் சேர்ந்த அமலின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுவதாக உள்ளது. இஸ்லாம் மார்க்கமானது ஈமான் என்ற நம்பிக்கை சார் விடயங்களைக்கொண்டு போதிப்பது போல அவ்வீமானைக்கொண்டு அதற்கேற்றாற்போல் அமல் செய்யுமாறும் போதிக்கின்றது. பின்வரும் ஹதீஸும் இதே விடயத்தை தெளிவுபடுத்துவதாக உள்ளது.

'மு.்.மினுக்கும் காபிருக்குமிடையிலான வித்தியாசம் தொழுகையை விடுவதாகும்' (தபராணி)

அந்தவகையில் ஈமானில்லாத அமலில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பது புலனாகிறது. அல்குர்ஆன் ஈமானில்லாத அமலை காணல் நீரிற்கு ஒப்பானதாக வர்ணிக்கின்றது. அல்குர்ஆன் ஈமானையும் அமலையும் ஒன்றாகவே பார்க்கின்றது.

தூய்மையான நற்செயல்கள் என்றால் உரிய காலப்பகுதியில் உரிய வழிமுறையில் நிறைவேற்றப்படுபவை என வரைவிளக்கணப்படுத்தப்படுகின்றது. மேலும் நற்செயல்கள் என்றால் சரியான நேரத்தில் சரியான முறையில் தனியாக அல்லது கூட்டாக நிறைவேற்றப்படுகின்ற ஆன்மீக ரீதியாக அல்லது லௌகீக ரீதியாக பயனளிக்கின்ற செயல்கள் என விளக்கப்படுகின்றன.

மு.்.மினுக்கும் மு.்.மினல்லாதவனுக்கும் அவர்கள் நிறைவேற்றுகின்ற நற்செயல்களின் அடிப்படையில் முக்கியமான ஒரு வேறுபாடு உள்ளது. ஒரு மு.்.மினால் நிரைவேற்றப்படும் நற்செயல்கள்:

- அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதாக இருக்கும்.
- அல்லாஹ்விடத்தில் சௌபாக்கியத்தை எதிர்ப்பார்ப்பதாக நிரைவேற்றப்படும்.
- அல்லாஹ் ஒருவனிடமிருந்து மாத்திரமே கூலி எதிர்ப்பார்ப்பதாக நிரைவேற்றப்படும்.
- நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலை முற்றிலும் பின்பற்றியதாக நிரைவேற்றப்படும்.

நபி (ஸல்) அவர்களினதும் அவர்களது ஸஹாபாக்களினதும் வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்கள் எமது ஈமானைப் பலப்படுத்துவதாக உள்ளன. எமது வாழ்வில் நாம் வெற்றிபெறுவதற்காக ஸஹாபாக்களின் வாழ்வொழுங்கை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

## 3. ரிஸாலத் மற்றும் ஹிதாயத்

ரிஸாலா என்றால் அல்லாஹு தஆலாவால் அவனது தூதர்களுக்கு கொடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் என சுருக்கமாக குறிப்பிடலாம். ஒருவன் சரியான பாதையில் பயணத்தைத் தொடர்வதற்கு இது மிகமுக்கிய காரணியாக உள்ளது. அல்லாஹு தஆலா தான் விரும்புகின்றவனுக்கு வழங்குகின்ற நேர்வழி ஹிதாயத் எனப்படுகின்றது. அல்லாஹ் வழங்குகின்ற அந்நேர்வழி ஒருவன் சரியான பாதையில் தன் வாழ்வை அமைத்துக்கொள்வதற்கான ஒரே மூலமாகும்.

இது பின்வருகின்ற விடயங்களினால் உறுதிப்படுத்தப்படுகிறது:

- ஒருவன் தன்னுடைய பண்புகளையும் நன்நெறிகளையும் வளர்த்துக்கொள்வதற்கான அடிப்படையாக ரிஸாலத் உள்ளது.
- ரிஸாலத்தானது நாம் உலகில் படைக்கப்பட்டதற்கான காரணத்தை விளங்கி, சரியான முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ள உதவிபுரிகின்றது.
- ரிஸாலத் முழுமனிதவர்க்கத்திற்குமானது மற்றுமன்றி அது சாந்தமான சுற்றுச்சூழலை உருவாக்கவும் துணைசெய்கின்றது.

அல்லாஹு தஆலா மனிதர்கள் வாழ்வதற்கான சரியான பாதையை அவர்களுக்கு காட்டிக்கொடுப்பதற்காக மதங்களையும் ஸுஹுபுகளையும் இறக்கியருளினான். பின்வரும் ஸுஹுபுக்கள் மதங்கள் அனுப்பப்படுவதற்கு முன்னர் இறக்கியருளப்பட்டவையாகும்.:

- நபி ஆதம் (அலை) - 10 ஸுஹுபுகள்
- நபி இத்ரீஸ் (அலை) - 30 ஸுஹுபுகள்
- நபி மூஸா (அலை) - 10 ஸுஹுபுகள்
- நபி ஷீத் (அலை) - 50 ஸுஹுபுகள்
- நபி இப்றாஹீம் (அலை) - 10 ஸுஹுபுகள்

நபி இப்றாஹீம் (அலை), நபி மூஸா (அலை) அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஸுஹுபுகள் பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் இறைதூதர்களுக்கு மதங்கள் கொடுக்கப்பட்டன.

- நபி மூஸா (அலை) - தவ்றாத்
- நபி தாவூத் (அலை) - ஸபூர்
- நபி ஈஸா (அலை) - இன்ஜீல்
- நபி முஹம்மத் (ஸல்) - புர்கான்

# 4.இபாதத்

மூன்று விடயங்களை ஒவ்வொரு முஸ்லிமும் செய்வது அவன் மீதுள்ள பொறுப்பாகும்.

அவையாவன:

1. இபாதத் - அல்லாஹ்ு தஆலாவை வணங்கி வழிபடுதல்.
2. இமாரத் - பூமியை வளப்படுத்துதல்
3. கிலாபத் - அல்லாஹ்வின் பிரதிநிதியாக பூமியில் ஆட்சிபுரிதல்.

இபாதத் என்பது அறபு மொழியில் அபத என்ற மூலச் சொல்லிலிருந்து பிரிந்து வந்த சொல்லாகும். இதன் கருத்தாவது:

1. வணங்குதல்
2. கட்டுப்படுதல்
3. பொறுப்பு சாட்டுதல், பொறுப்புக்களை கையளித்தல்

இஸ்லாத்தின் விதிமுறைகளின் படி இபாதத் என்பது அல்லாஹ்ு தஆலாவின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து நிரைவேற்றப்படும் செயலாகும். அவன் எமக்கு நன்மையை செய்து தீமையை தவிர்க்கவே கட்டளையிட்டுள்ளான். இக்கீழ்படிவும் கட்டுப்படுதலும் நாம் அல்லாஹ்வின் மீது வைத்துள்ள அன்பின் வெளிப்பாடுகளாக உள்ளன. அந்தவகையில் இபாதாவானது அல்லாஹ் மீது வைத்துள்ள மொத்த அன்பும் பூரணமான அடிமைத்தனமும் என்று குறிப்பிடலாம்.

அல்குர்ஆனின் 51:56 பின்வருமாறு கூறுகிறது:

'இன்னும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை'

இவ்வாறு நாம் இபாதத்தை ஆராய்ந்தால், அது நம் வாழ்நாள் முழுவதையும் உள்ளடக்கியது. இபாதா என்பது வழிபாட்டைக்குறிப்பது போலவே, அது நம்முடைய அன்றாட செயல்களுடனும் தொடர்புடையது. எல்லா செயல்களும் 'ரீஅத்தின் அடிப்படையில் நிரைவேற்றப்பட வேண்டும். அப்பொழுது தான் நாம் எம் படைப்பாளனின் எதிர்ப்பார்ப்புகளுக்கேற்ப வெற்றியை அடைந்து கொண்டவர்களாக மாறுவோம்.

## இபாதத்தின் நோக்கம்

எவை எமக்கு கடமையாக்கப்பட்டுள்ளனவோ நிச்சயமாக அவை எமக்கு ஈருலகிலும் வெகுமதிகளைப் பெற்றுத்தருபனவாகும். தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற அடிப்படையான கடமைகளைப்பற்றி அல்குர்ஆனில் பின்வரும் முறையில் பேசப்பட்டுள்ளது.

- அவை மனோ இச்சையை கட்டுப்படுத்துவதோடு தக்வாவையும் வளர்க்கிறன.

- அவை அல்லாஹ்விற்கும் அடியானுக்குமிடையிலான பலமான பிணைப்பை ஏற்படுத்துகின்றன.
- அவை தீய கருமங்களில் ஈடுபடுவதைவிட்டும் எம்மைத் தடுக்கின்றன.
- மற்றவர்களுக்கு நன்மை செய்தல், சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளுதல், தியாக உணர்வை வளர்த்தல, மேம்படுத்தல் போன்ற விடயங்களுக்கு உதவுகின்றன.
- அல்லாஹ்வின் நல்லருளைப் பெற்று சுவனம் நுழைய உதவுகின்றன.

**இபாதத்தின் வகைகள்.**

1. வரையறுக்கப்பட்ட அடிப்படையான இபாதத்
2. தினசரி வாழ்வுடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள இபாதத்

**1. வரையறுக்கப்பட்ட அடிப்படையான இபாதத்**

தொழுகை, ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ் போன்றன இவ்வகைக்குள் அடங்குகின்றன.

இபாத்திற்கான 2 அடிப்படைகளாக அவை குர்ஆன் சுன்னாவிற்கு முற்றிலும் அமைவானதாக இருக்கவேண்டிய அதே சமயம் உளத்தூய்மையோடு (இக்லாஸ்) நிரைவேற்றப்பட வேண்டும்.

இவ்விபாதாக்கள் பின்வரும் வகைப்பாடுகளினால் வகைப்படுத்தப்படலாம்.

- உடலையும் செயலையும் வேண்டி நிற்கும் இபாதத்துகள்
    - உ.ம்: தொழுகை, நோன்பு, ஹஜ்
- உள்ளத்தை வேண்டி நிற்கும் இபாதத்துகள்
    - உ.ம்: இக்லாஸ், பொறுமை
- செல்வத்தை வேண்டி நிற்கும் இபாதத்துகள்
    - உ.ம்: ஸகாத், ஸதகா, உழ்ஹியா
- வார்த்தையை வேண்டி நிற்கும் இபாததுகள்
    - உ.ம்: திக்ர், குர்ஆன் பாராயனம்

இவ்வாறு பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்பட்டாலும் சில இபாதத்கள் 2, 3 குழுக்கழுக்குள் உள்வாங்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டுக்காக : ஹஜ் கடமையானது உடல், உள மற்றும் செல்வத்தின் பால் தேவையுடையதாக இருக்கின்றது.

2. அன்றாட வழ்வோடு பிணைக்கப்பட்டுள்ள இபாதத்கள்

உணவருந்துதல், உறங்குதல், தொழில்துரவுகளில் ஈடுபடுதல் போன்றன. இவ்வாறான செயற்பாடுகள் அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் வழிகாட்டல்களுக்கு

அமைவாக நிறைவேற்றப்படுமாயின், அவைகளும் இபாதத்கள் என்ற வட்டத்தினுள் நுழைகின்றன.

உதாரணமாக: அல்லாஹ் தஆலாவின் திருப்பொருத்தத்தை நாடி இபாதத்துக்களை செய்வதற்கு தகுந்தாக தனது உடலை தயாரப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் ஒருவன் உணவுட்கொள்ளுவானேயாயின் இச்சந்தர்ப்பத்தில் அவன் உணவருந்துவதும் ஒரு இபாதத்தாக மாறுகின்றது.

எமது அன்றாட நடவடிக்கைகள் இபாதத்தாக மாற வேண்டுமாயின் பின்வரும் நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

- உதாரணமாக இஸ்லாம் அனுமதித்த அங்கீகாரம் வழங்கிய வியாபார கொடுக்கல் வாங்கல்கள் இபாதத்தாக கொள்ளப்படலாம். எனினும் இஸ்லாத்தின் அங்கீகாரத்தைப்பெறாத இஸ்லாம் தடுத்துள்ள பொருட்களான போதை வஸ்துக்கள், மதுபாணங்களை விற்பனை செய்தல், சூதாட்டம் போன்றன எவ்வகையிலும் எச்சந்தர்ப்பத்திலும் இபாதத்துகளாகக் கருதப்படவே மாட்டாது.
- இக்லாஸுடன் அல்லாஹ் தஆலாவிற்காக என மேற்கொள்ளப்படும் எந்தவொரு நற்காரியமும் இபாதத்துகாளகக் கொள்ளப்படும். உழைத்தலும், செலவு செய்தலும் ஹலாலாக இருக்க வேண்டும். அல்லாஹ் தஆலாவின் பாதையில் உளச்சுத்தியுடன் செலவு செய்தல் மிக உயர்ந்த இபாதத்தாக கருதப்படுகின்றது.
- இஸ்லாமிய ‘ரீஆ வரம்புகளை மீறாமை. இஸ்லாம் எமது அன்றாட நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட சில வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. நாம் இவ்வழிகாட்டல்களுக்கு மாற்றமாக செயற்படுகின்ற போது அவை இபாதத்தாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வியாபாரத்தில் வட்டி, மோசடி போன்ற அம்சங்கள் இடம்பெறுகின்ற போது அவ்வியாபாரம் இபாதத் என்றை வகைக்குள் இடம்பெற மாட்டாது.
- இஸ்லாத்தின் அடிப்படையான கடமைகளுக்கு தடையாக இருக்காத செயல்களாக இருத்தல். - ‘ரீஅத்திற்கு இணங்கிய செயலாக இருத்தல். வியாபர கொடுக்கல் வாங்கல்கள் போன்றன பொதுவான சூழ்நிலைகளில் இபாதத்துகளாக அமையும். எனினும் இவ்வியாபாரம் இஸ்லாத்தின் பர்ளான கடமைகளுக்கு (ஐவேளைத் தொழுகை) தடையாக அமைகின்ற போது அச்சந்தர்ப்பத்தில் இவ்வியாபாரம் இபாதத்தாகக் கொள்ளப்பட மாட்டாது. இதற்கு இன்னொரு உதாரணமாக ஜும்மா தொழுகைக்கு செல்ல முன்னர் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம்.
- இஸ்லாம் ஒழுங்கு முறையில் நீதமானதும் சரியானதுமான ஒரு மார்க்கமாகும். இவ்வடிப்படைகளுக்கு முரணாக அமைகின்ற எச்செயலும் இஸ்லாத்தின் பார்வையில் இபாதாவாகாது. உதாரணமாக எவ்விளையாட்டுக்களை எடுத்துக்கொண்டாலும் அவற்றுக்கென சில விதிமுறைகளும் சட்டங்களும் இருக்கின்றன. அவ்விளையாட்டை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமாயின் உரிய முறையில் அதன் சட்டங்களும் விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

இபாதத்துக்கள் அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இரண்டு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1) பர்ளு - இது கட்டாயக் கடமையான இபாதத்துக்கள் எனப்படும். இது மேலும் இரு வகைப்படும்.

   i) பர்ளு அய்ன்
   ii) பர்ளு கிபாயா

### I. பர்ளு ஐன்

இது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் மீது கடமையான கட்டாயக் கடமையாகும். இவற்றை ஒவ்வொருவரும் அவசியம் நிரைவேற்றியே ஆகவேண்டும். இவற்றை நிரைவேற்றாது விடுபவன் பாவியாகின்றான்.

உதாரணமாக : ஐவேளைத் தொழுகை, ரமாழான் மாத நோன்பு, தனது குடும்பத்தைக் கவனித்தல், பெற்றோர்களைக் கவனித்தல் போன்றன.

### II. பர்ளு கிபாயா

இவையும் முஸ்லிம்கள் மீதான கடமைகளாகும். எனினும் முஸ்லிம்களுள் சிலர் இக்கடமைகளை நிரைவேற்றுவதானது ஏனையவர்களின் மீதிருந்து பொறுப்பு நீங்குவதற்கு போதுமானதாகும். அதேநேரம் அவர்களுள் எவரும் இக்கடமையை நிரைவேற்றாவிடின் அதற்காக அனைவரும் பிழை செய்தவர்களாகின்றனர்.

உதாரணமாக : ஜனாஸாக்களின் பாலான கடமைகள், மார்க்க அறிஞர்களை உருவாக்குதல், வைத்தியர்கள் போன்ற சமூகத்திற்கு அவசியமானவர்களை உருவாக்குதல் போன்றன.

## 2. ஸுன்னத்

பர்ளு என்ற வகைக்குள் அடங்காத இபாதத்துக்கள் யாவும் ஸுன்னத் என்ற வட்டத்தினுள் சேர்கின்றன. ஸுன்னத்தான அமல்களை செய்வதன் மூலம் அல்லாஹு தஆலாவிடமிருந்து நற்பாக்கியத்தைப் பெற்றுத்தருவது போல அவனை நெருங்கவும் உதவுகின்றன. பர்ளான கடமைகளில் ஏதாவது குறைநிறைகள் இருந்தால் அவை ஸுன்னத்தான அமலைக்கொண்டு ஈடுசெய்யப்படுகின்றன. ஸுன்னத்தான தொழுகைகள், திக்ருகள், ஸலாத்தைப்பரப்புதல், நோயாளியை சுகம் விசாரிக்கச் செல்லுதல் போன்றன ஸுன்னத்தான அமல்களுக்குறிய உதாரணங்களாகும். எனவே, நாம் இவ்வுலகில் படைக்கப்பட்டதற்கான நோக்கத்தினை பூரணப்படுத்தும் முகமாக எமது முழு வாழ்வையும் ஒரு இபாதத்தாக மாற்றிக்கொள்ளுவோம்.

# 5. அத்தஹாரத் (சுத்தம்)

மனிதன் தனது முழு வாழ்வையும் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. இஸ்லாத்தைப் பின்பற்றுகின்றவர்கள் அந்த வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றுவது அவசியமாகின்றது. அந்த வகையில் இஸ்லாம் சுத்தம் தொடர்பான அதன் விதிமுறைகளைப் பின்பற்றுமாறு எம்மை ஏவுகின்றது. சுத்தமாக இருப்பதை இபாதத்தாக அது அடையாளப்படுத்துகின்றது.

'அல்லாஹ் தம்மை சுத்தப்படுத்திக்கொள்கின்றவர்களை விரும்புகின்றான்' (அல் குர்ஆன் 9:108)

ஆரம்ப கட்டங்களில் இறக்கியருளப்பட்ட ஒரு ஸூறா சுத்தத்தின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தும் முகமாக நபி (ஸல்) அவர்களை நோக்கி பின்வருமாறு கூறுகிறது: 'நபியே! நீங்கள் உமது ஆடைகளை சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள்' (அல் குர்ஆன் 74:4)

இதன் காரணமாகவே நபி (ஸல்) அவர்கள் 'சுத்தம் ஈமானின் பாதியாகும்' என்றார்கள் (முஸ்லிம்).

தொழுகை, இஃதிகாப் போன்ற எமது அன்றாட கடமைகள், நடவடிக்கைகளின் போது நாம் எம்மை சுத்தப்படுத்திக்கொள்வது (வுழு) அவசியமாகும். 'அல்லாஹு தஆலா சுத்தமின்றிய (வுழூ) எந்த தொழுகைகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டான்' (முஸ்லிம்) என்று ஒரு ஹதீஸ் தெளிவாகவே வந்துள்ளது.

இஸ்லாத்தில் சுத்தம் என்பது மிக விசாலமானதாகும். ஒரு முஸ்லிம் தனது அக, புற சுத்தத்தில் அதிகம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஒருவன் வெளிச் சுத்தத்தில் அசிங்கமான அசுத்தமான பொருட்களை விட்டு விலகி நடப்பது போல அக சுத்தத்தை மாசுபடுத்துகின்ற பொறாமை, கர்வம், கெட்ட எண்ணங்கள், வெறுப்பு போன்ற கெட்ட பண்புகளை விட்டும் தன் அகத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

**நீரும் அதன் வகைகளும்.**

சுத்தம் செய்வதற்கு நீர் இன்றியமையாததாகும். எனவே நீரின் வகைகள் மற்றும் நீர் தொடர்பான சட்டவிதிகள் தெளிவாகவே இஸ்லாம் மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அறிஞர்கள் நீரை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

**a. அல் மாஉத் தஹூர் - மிகச்சுத்தமான நீர்**

இவ்வகையான நீர் இயற்கையாகவே எம்மாற்றத்திற்கும் உட்படாத மிகத்தூய்மையன நீராகும். எனவே இது எதனையும் சுத்தப்படுத்தும் திறன் கொண்டது.

இத்தகைய நீர் வகைகளுக்குறிய உதாரணங்கள் வருமாறு:

- மழை நீர், பனித்துளி, பனிக்கட்டி

- கடல் நீர்
- ஆற்று நீர், ஊற்று நீர்

ஏரிகளைப் போன்ற பாரிய அளவு நீரைக்கொண்ட நீர் நிலைகளில் பாசி, இலைகள் போன்றன விழுந்தாலும் அந்நீர் சுத்தமானதாகவே கருதப்படும்.

இந்நீர் பர்ளான குளிப்பிற்காகவும், ஜனாஸாக்களைக் குளிப்பாட்டுதல் போன்ற ஏனைய மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் அதேபோல் நஜீஸ்களை சுத்தம் செய்வதற்காகவும் பயன்படுத்த முடியும்.

**மாஉத் தஹூர் 3 பிரிவுகளாகப் பிரிகின்றன.**

a. அல் மாஉல் கஸீர் (அதிகளவிலான நீர்):

அதிகளவிலான நீர் என்பது குல்லதைன் அளவை விட அதிகமான நீராகும். அதாவது கிட்டத்தட்ட 210 லீற்றர் அளவு நீரை விட அதிக அளவிலான நீராகும். இவ்வளவிலான நீரினுள் ஏதாவது அசுத்தங்கள் வீழுந்தால் அந்நீர் அசுத்தமாகாது. அவ்வாரு விழுகின்ற அசுத்தத்தினால் அந்நீரின் நிறம், மணம், சுவை போன்றன மாற்றமடையுமாயின் அப்பொழுது அந்நீர் அசுத்தமானதாகக் கருதப்படும். இவ்வகையான நீர், மாஉன் முத்லக் என்றும் அழைக்கப்படுகின்றது.

- இவ்வகை நீரை மீண்டும் எவ்வாறு பயன்படுத்த முடியும்?

இந்நீருடன் அதிகளவிலான நீர் சேர்க்கப்பட்டு மாஉன் தஹூர் என்ற அளவை அடைந்தால், இந்நீர் மீண்டும் வுழூ செய்வதற்கும், கடமையான குளிப்பை நிறைவேற்றுவதற்கும், ஏனைய மார்க்க கடமைகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தலாம்.

b. அல் மாஉல் கலீல். (குறைந்த அளவிலான நீர்)

இது குல்லதைன் அளவை விடக்குறைந்த எனினும் சுத்தமான நீராகும். இந்நீரில் ஏதாவது அசுத்தங்கள் கலந்ததன் பின்னரும் நீரின் மணம், சுவை, நிறம் போன்றவற்றில் எது வித மாற்றமும் ஏற்படவில்லையெனின் அந்நீர் சுத்தமான நீராகவேகொள்ளப்படும். எவ்வாறாயினும் இந்நீரினுள் எறும்பு, ஈ போன்ற ஏதாவது பூச்சுவகைகள் விழுந்தால் அப்போது சுத்தமான நீராக கருதப்பட மாட்டாது.

  - இந்நீரை எவ்வாறு மீளப்பயன்படுத்தலாம்?

அசுத்தம் கலந்த இந்நீரினுள் குல்லதைன் அளவை அடையும் வரை தூய்மையான நீரைக்கலந்த பின் அந்நீரின் நிறம், சுவை, மணம் போன்றவற்றில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லையாயின் அந்நீரை வுழூ செய்தல் பர்ளான குளிப்பு போன்ற ஏனைய மார்க்க கடமைகளுக்கா பயன்படுத்தலாம்.

c. அல் மாஉல் முஸ்த.ஃ.மல் (பயன்படுத்திய நீர்)

இது வுழூ செய்தல், பர்ளான குளிப்பை குளித்தல் போன்ற காரணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட, குல்லதைன் அளவை விட குறைந்த சுத்தமான நீராகும். இதனை மீளப்பயன்படுத்த முடியாது. இந்நீர் அல்மாஉல் முஸ்த.ஃ.மல் எனப்படுகிறது.

- இந்நீரை எவ்வாறு மீளப்பயன்படுத்த முடியும்?

இந்நீரை மீளப்பயன்படுத்துவதற்காக தூய நீரை குல்லதைன் அளவை அடையும் வரை நிரப்ப வேண்டும். இதன்போது இது தஹூர் நிலையை அடைவதால் மீண்டும் வுழூ செய்தல் போன்ற கடமைகளுக்கா பயன்படுத்த முடியும்.

**2. அல் மாஉத் தாஹிர் (சுத்தமான நீர்)**

இந்நீர் தன்னளவில் இயல்பாகவே சுத்தமானவையாக இருப்பினும் பிற பொருட்களை சுத்தப்படுத்தாதவையாகும். தூய்மையான நீரிற்கு இன்னொரு பொருள் சேர்க்கப்பட்டதன் பின்னர் அதன் நிறம் மணம் சுவை போன்றன மாற்றத்திற்குட்பட்டால் (உதாரணமாக தேநீர், குளிர்பாணம், ரோஸ் வோடர்) இவை மாஉன் தாஹிர் என்றழைக்கப்படும். இளநீரும் கூட இவ்வகையைச் சேர்ந்த நீராகும். இந் நீர் வகைகள் இயல்பில் தன்னளவில் சுத்தமானவையாக இருப்பினும் வுழூ செய்தல், பர்ளான குளிப்பு போன்ற மார்க்கரீதியான சுத்தப்படுத்தல்களுக்கு பயன்படுத்த முடியாது.

**3. அல் மாஉல் முதநஜ்ஜிஸ் (அசுத்தமான நீர்)**

இவ்வகையான நீர் எந்தவொன்றையும் சுத்தம் செய்வதற்காக உபயோகிக்க முடியாது. இவை தன்னளவில் அசுத்தமாக இருப்பது போலவே ஏனையவற்றையும் அசுத்தப்படுத்தக்கூடியவையாகும். இவ்வகையான நீரிற்கு உதாரணங்களாக சிறு நீர், மதுபாணம், ஏதாவது நஜீஸுடன் கலக்கப்பட்ட நீர்.

எவ்வாறு கடுமையான நஜீஸிலிருந்து எம்மை சுத்தப்படுத்திக்கொள்ளலாம்?

நஜீஸ்களிலிருந்து எம்மை சுத்தப்படுத்திக்கொள்வதற்கு இஸ்லாம் நஜீஸின் தன்மையைப்பொறுத்து 2 வகைகளில் சுத்தப்படுத்திக்கொள்வதற்கான வழிமுறைகளைக் காட்டித்தந்துள்ளது. ஒரு முஸ்லிம் தன்னை சுத்தமாக வைத்திருப்பது ஒரு பொறுப்பாக இருப்பது போல அது இபாதத்துக்களை மேற்கொள்வதற்கான அத்தியாவசிய நிபந்தனையுமாக உள்ளது. ஏன் ஒருவன் தன்னை சுத்தப்படுத்திக்கொள்வதே ஒரு இபாதத் அன்றோ????

1. சிறு தொடக்கிலிருந்து சுத்தமடைதல்

சிறு தொடக்கிலிருந்து ஒருவன் சுத்தமடைவதற்கு வுழூ செய்ய வேண்டும். ஏனெனில் சிறு தொடக்கில் என்பது வுழூவை முறிக்கக்கூடிய காரணங்களாகும். மீளவும் வுழூ செய்வதால் அந்நஜீஸ் நீங்குகிறது.

2. பெருந் தொடக்கிலிருந்து சுத்தமடைதல்.

பெருந் தொடக்கில் ஒருவன் இருக்கும் போது அவன் தூய்மையடைவதற்காக கட்டாயம் பர்ளான குளிப்பைக் குளிக்க வேண்டும். இதன் போது அவனது உடலின் சகல உருப்புக்களும் நீரில் நனைய வேண்டும். பின்வரும் விடயங்கள் நிகழ்ந்த பின் குளிப்பது பர்ளாகின்றது. உடலுறவு கொள்ளுதல், விந்து வெளியேறுதல், மாதவிடாயின் பின் அல்லது குழந்தை பிறந்த பின் வெளியேரும் இரத்தப்போக்கின் பின் (ஹய்ல் மற்றும் நிபாஸின் பின்), புதிதாக இஸ்லாத்தை தழுவிய பின்னர், முஸ்லிமான ஒருவர் மரணித்ததன் பின்னர். வுழூ எடுத்தல் பர்ளான குளிப்பைக் குளித்தல் என்பன உரிய முறையில் நிறைவேற்றப்படும் போது நன்மையளிக்கப்படுகின்ற இரு வேறு இபாதத்களாகும்.

பிரதியுபகார சுத்தப்படுத்தும் முறைகள்

இஸ்லாம் மார்க்கம் நடைமுறைச்சாத்தியமான, இலகுவான மார்க்கம் என்றவகையில் சுத்தப்படுத்துவதற்கான வேறு வழிமுறைகளைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

உதாரணமாக: தயமமும் ஜபீரத்தும் இவை பற்றி அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் பேசப்பட்டுள்ளது.

**தயமம்**

யாருக்கு பர்ளான குளிப்பைக் குளிக்க முடியவில்லையோ அல்லது வுழூ செய்ய முடியவில்லையோ அவர்கள் சுத்தமான புளுதியுள்ள மணலைக்கொண்டு முகத்தையும் கைகளையும் தடவுவதன் மூலம் தயமும் செய்ய முடியும். ஒருவனுக்கு நீரை பயன்படுத்த முடியாது நோயாளியாக இருந்தால் அல்லது குடிப்பதற்கு மாத்திரமே நீர் எஞ்சியுள்ளது என்றிருந்தால் அச்சந்தர்ப்பத்தில் அவருக்கு தயமும் செய்து தொழுகையையும் ஏனைய கிரிகைகளையும் நிறைவேற்ற முடியும்.

**ஜபீரத்**

இது காயங்களின் மீது போடப்படும் கட்டாகும். அக்கட்டானது வுழூ செய்ய வேண்டிய இடமொன்றில் கட்டப்பட்டிருந்தால் அவர் உடலின் ஏனைய பகுதிகளை நீரைக்கொண்டு வுழூ செய்தபின் கட்டு போடப்பட்டுள்ள பகுதியை புளுதியைக்கொண்டு தயமும் செய்துகொள்ள வேண்டும்.

# 6. அந்நஜாஸத் (அசுத்தம்)

ஒரு முஸ்லிம் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்காக வேண்டி அவன் அசுத்தங்களிலிருந்து நீங்கியிருக்க வேண்டும். பல்வேறு வகையான நஜீஸ்கள் மற்றும் அவற்றிலிருந்து எவ்வாறு தூய்மையடைவது பற்றி இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது.

**நஜீஸ்கள் 3 வகைப்படும்.**

1) சாதாரண நஜீஸ்
2) இலகுவான நஜீஸ்
3) கடுமையான நஜீஸ்

சாதாரண நஜீஸிற்கான உதாரணங்கள்:

- சிறுநீர்
- இரத்தம்
- சீழ்
- வாந்தி
- மதுபாணம்
- தூக்கத்தின்போது வெளியேரும் எச்சி
- ஹலாலற்ற விலங்குகளின் பால்
- இரந்த பிராணிகள்
- உயிருள்ள பிராணிகளின் உடலிலிருந்து வேராக்கப்பட்ட உடற்பாகங்கள்

பின்வருகின்ற விடயங்கள் சாதாரண நஜீஸினுள் உள்ளடக்கப்படாதவைகளாகும்.

1. உண்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள இரந்த மீன் மற்றும் வெட்டுக்கிளி
2. இரத்த ஓட்டமற்ற பூச்சு வகைகள், எறும்புகள், தேனீக்கள் போன்றன.
3. உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட இரந்த பிராணிகளின் கொம்புகள், சிறகுகள், மயிர்கள் போன்றன.
4. உடைகளிலோ அல்லது மேனியிலோ பட்டுள்ள சொற்ப அளவிலான இரத்தம்
5. தாய்ப்பால்

சாதாரண நஜீஸிலிருந்து நாம் எவ்வாறு சுத்தமாகலாம்?

உடையிலிருந்து அல்லது மேனியிலிருந்து நஜீஸை அப்புறப்படுத்துதல்.

நிறம், மணம், சுவை போன்றன நீங்குமளவிற்கு கழுவுதல். வெறும் தண்ணீரால் மாத்திரம் நஜீஸ் நீங்கவில்லையாயின் சவர்க்காரம், சலவைத் தூள் போன்றவற்றை பயன்படுத்தலாம். மணம் மற்றும் நிறம் அல்லது சுவை மாத்திரம் நீங்கவில்லையாயின் அது சுத்தமாக கருதப்பட மாட்டாது.

கடுமையான நஜீஸ்

இதற்கான உதாரணங்கள்:

நாய் மற்றும் பன்றியின் இரத்தம் போன்றன இவ்வகைக்குள் அடங்கும்.

சுத்தம் செய்வதற்கான வழிமுறை

இவ்வகை நஜீஸிலிருந்து சுத்தமடைவதற்கு மண்ணையும் நீரையும் கலந்து நஜீஸ் பட்ட இடத்தை ஒரு தடைவ கழுவ வேண்டும். பின்னர் நீரினால் அவ்விடத்தை ஏழு தடவைகள் கழுவ வேண்டும். நிறம் மணம் சுவை போன்றன காணப்படாவிட்டாலும் இவ்வாறு செய்வது கடமையாகும்.

கடலில் அல்லது ஆற்றில் கழுவி சுத்தம் செய்வதாக இருந்தாலும், நீர் மண்ணோடு கலக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அசுத்தம் பட்ட பகுதியை 6 தடவைகள் நீரில் முக்கி கழுவுதல் வேண்டும்.

பிற நஜீஸ்களை சுத்தம் செய்யும் முறைகள்.

- மிருகங்களின் தோல்கள்: நாய் மற்றும் பன்றி போன்றவற்றின் தோல்களன்றி ஏனைய மிருகங்களின் தோல்கள் உரிய முறைப்படி சுத்தம் செய்து பதனிடப்பட்டதன் பின்னர் மனிதர்களின் உணவுத்தேவைகளுக்கல்லாது பல்வேறுபட்ட தேவைகளுக்காக வேண்டி பயன்படுத்தலாம்.
- மதிமயக்கும் பொருள் (கள்): கள்ளிற்கு பிற பொருட்கள் எதனையும் சேர்க்காதவிடத்து அது வினாக்கிரியாக மாறும். அவ்வாறு வினாக்கிறியாக மாறிய கள்ளினை மனிதனின் உணவுத்தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

நீர்த்தன்மையான உணவுப்பொருட்டகளில் விழுந்த நஜீஸ்:

- உதாரணமாக: ஒரு நஜீஸ் தயிர், யோகட், நெய், பட்டர், வெண்ணெய் போன்றவற்றில் விழுந்தால் அந்நஜீஸ் அவ்வுணவுப்பொருட்கள் முழுவதும் கரைந்து விடாது இருப்பின் அச்சந்தர்ப்பத்தில் நஜீஸ் விழுந்த பகுதியை மாத்திரம் நீக்கிவிட்டால் ஏனைய உணவுப்பகுதிகள் சுத்தமாகவே கொள்ளப்படும்.

# 7.தொழுகையின் முக்கியத்துவம்

- ○ தொழுகையானது ஒரு முஸ்லிமிறகும் காபிரிற்குமிடையிலான வித்தியாசத்தைக் காட்டுகின்ற ஒரு கட்டமாகும்.
- ○ (பர்ளுஜன் ஆகிய) ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகிய தொழுகையை நிறைவேற்றுவது அவசியமாகும்.
- ○ தொழுகை ஈமானிற்கான ஒரு அடையாளமாகும்.

- தொழுகையை நிறைவேற்றுவதால் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய சில நன்மைகள்.
    1. அல்லாஹ்வுடன் உரையாடலாம்.
    2. அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதுடன் அவனது அருளைப் பெறலாம்.
    3. அல்லாஹ்வின கருணையை பெற்றுக்கொள்ளலாம்.
    4. தொழுகை சுவர்க்கத்திற்கான திறவுகோலாக உள்ளது.
    5. சுயநலத்தன்மையை தகர்க்கின்றது.
    6. பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.
    7. அக மற்றும் புறச் சுத்தம்.
    8. நரகத்திலிருந்து பாதுகாவல் கிடைக்கின்றது.

- நாளை மறுமையில் முதலாவதாக விசாரிக்கப்படுகின்ற விடயமாக தொழுகை இருப்பதுடன் நபி (ஸல்) அவர்கள் தனது மரணப்படுக்கையிலும் ஞாபகப்படுத்திய இபாதத்தாக தொழுகையே காணப்படுகின்றது.

# 8.தொழும் முறை

- ஐந்து கடமைகளுள் இரண்டாம் கடமையாக தொழுகையே உள்ளது.
- மி.்.ராஜ் பயணத்தின்போதே தொழுகை கடமையாக்கப்பட்டது.

தொழுகையை நிறைவேற்றுகின்ற படிமுறை பின்வருமாறு:

**1) க.்.பாவை முன்னோக்கி நிற்றல்**

க.்.பாவை முன்னோக்கி நிற்கும் போது ஆண்கள் தம் இரு பாதங்களுக்கு மத்தியிலும் ஒரு இடைவெளியைப் பேணுவதுடன் பெண்கள் தம் இரு பாதங்களையும் ஒன்றோடொன்று சேர்த்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

**2) நிய்யத்து வைத்தல்**

நிய்யத்து என்பது நாம் தொழுகையை நிறைவேற்ற முன்னர் எம் மனதில் கொள்ளும் எண்ணமாகும்.

**3) கைகளை தக்பீருக்காக உயர்த்துதல்.**

நிய்யத்தினை மொழிந்த பின்னர், தக்பீரினை உச்சரிக்கும் முன்னர் இரு கைகளின் உட்பகுதியை கிப்லா திசையை முன்னோக்கி உயர்த்த வேண்டும். இவ்வாறு உயர்த்தும் போது பெரு விரல்கள் இரண்டும் காதுச்சோணைகளைத் தொட வேண்டும் அல்லது அவை புயம் வரை உயர்த்தப்பட வேண்டும்.

**4) துஆஉல் இப்திதா**

தக்பீர் தஹ்ரீமா மொழியப்பட்டு கைகளும் உரிய இடங்களில் கட்டப்பட்ட பின்னர், முதலாவது துஆவினை மொழிய வேண்டும். இத் துஆ துஆஉல் இப்திதா.். எனப்படும்.

**5) ருகூஉ செய்தல்**

தக்பீரைக் கூறி ருகூஉ செய்வதற்காக குனிய வேண்டும். அவ்வாறு வலைந்து குனியும் பொழுது ஒருவரின் கழுத்தும் முதுகும் நேராக ஒரே நேர்கோடு போல் இருக்க வேண்டும். அவர் தம் இரு கைகளையும் தம் இரு முழங்கால்களில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**6) இ.்.திதால்**

ருகூஉவிலிருந்து நேராக எழும்பி நிற்பது இ.்.திதால் எனப்படும்.

**7) சுஜூத்**

இ:.திதால் அமைப்பிலிருந்து கைகளை காதுச் சோனை வரை உயர்தாது அல்லாஹு அக்பர் என தக்பீரை மொழிந்துகொண்டு சுஜூத் செய்வதற்காக கீழே செல்ல வேண்டும்.

**8) இரு சுஜூதுகளுக்கு மத்தியில் அமர்தல்.**

சுஜூத் செய்து சில நொடிகளின் பின்னர் நிலைக்கு வரும்போது அல்லாஹு அக்பர் என்ற தக்பீருடன் இரு கைகளையும் காதுச்சோனை வரை உயர்த்தி இரு கைகளையும் கிப்லா பக்கம் திருப்பி தக்பீரைக் கட்ட வேண்டும்.

**9) 2ம் சுஜூத்**

பின்னர் அல்லாஹு அக்பர் எனக்கூறியவாறு இரண்டாம் சுஜூதிற்கு செல்லவேண்டும். முதலாம் சுஜூதில் கைக்கொண்ட விடயங்களை மீளவும் செய்ய வேண்டும்.

**10) குனூத்**

குனூத் சுபஹுத் தொழுகையின் இரண்டாவது ரக்அத்தில் இ:.திதால் நிலையில் இருக்கும் போது ஓதப்படுகிறது.

**11) அத்தஹிய்யாத்து**

அத்தஹிய்யாத்து கட்டாயம் இரண்டாம் ரக்அத்திலும் இறுதி ரக்அத்திலும் ஓதப்பட வேண்டும். இரண்டான் சுஜூதின் பின்னர் நாம் தவர்ருக் இருப்பில் அமர்ந்து நாம் முதலாவது அத்தஹிய்யாத்தை ஓத வேண்டும்.

## 9.தொழுகைக்கு பின்னர் உள்ள ஓதல்கள் (துஆக்கள்)

- வணக்க வழிபாடுகளின் முக்கியமான அங்கமாக தொழுகை உள்ளது. ஸலாத் (தொழுகை) என்பதன் கருத்தே வேண்டுதல் என்பதாகும்.
- நபி (ஸல்) அவர்கள் தொழுகை முடிந்த பின் வழமையாகவே துஆக்களை ஓதுவார்கள். அதே போல் இவ்வழக்கத்தை தனது ஸஹாபாக்களுக்கும் கற்றுக்கொடுத்தார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் பின் வழமையாக துஆக்களாக அஸ்தக்பிருல்லாஹ், சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் என 33 தடவைகளும், அல்லாஹு அக்பர் என 34 தடவைகளும் ஓதிவந்துள்ளார்கள்.
- இப்பணிவுடன் ஒரு அடியான 100 திக்ருகளை செய்கின்றான். எவரொருவர் இவ்வாறு திக்ரில் ஈடுபடுகிறாரோ அவரின் சகல பாவங்களையும் அல்லாஹு தஆலா மன்னிப்பதாக கூறியுள்ளான்.
- அதேவேளை பின்வரும் அல்குர்ஆனிய அத்தியாயங்களை ஒரு அடியான் இவற்றுடன் சேர்த்து ஓதுவது வரவேற்கத்தக்கதாக உள்ளது.

1. சூறா அல் இக்லாஸ்
2. சூறா அல் பலக்
3. சூறா அந்நாஸ்

# 10.அத்தஸ்கியா

- தஸ்கியா - தூய்மையாக்குதல் மற்றும் கருமங்களை அதற்கேயுரிய முறைகளில் நிறைவேற்றுவதும்.
- தஸ்கியதுன் நப்ஸ் - உள்ளத்தை தூய்மையடையச் செய்தல்.
- அல்குர்ஆன் 3 வகையான நப்ஸ் (உள்ளங்கள்) பற்றி பேசுகின்றது.
- அவையாவன:

I. நப்ஸுல் அம்மாரா

இது தீய கருமங்களையே அடிக்கடி செய்யத்தூண்டும் நப்ஸாகும். இவ்வுள்ளம் ஒருவனை ஷைத்தானின் ஆசைகளுக்கு அடிமையாக மாற்றுகின்றது.

II. நப்ஸுல் லவ்வாமா.

இது உங்கள் உள்ளத்திற்கு வலியை ஏற்படுத்தும் நப்ஸ் ஆகும். எமது மூலையின் அறைகளுக்குள் ஒரு நிலையான போராட்டம் நிகழ்ந்துக்கொண்டே இருக்கின்றது. ஒருவர் தொடர்ந்து தேவையற்றவிடயங்களில் ஈடுபடுவதற்கு எதிராக தொடர்ந்து போராடுவது நப்ஸ் லவ்வாமா ஆகும்.

III. நப்ஸுல் முத்மஇன்னா

இது தீய எண்ணங்களில் இருந்து விடுபட்ட திருப்தியடைந்த உள்ளத்தைக் குறிக்கின்றது.

**தஸ்கியாவின் முக்கியத்துவம்.**

- ஒருவன் ஈருலகிலும் வெற்றிபெற வேண்டுமாயின் அவன் தனது உள்ளத்தை தூய்மை செய்து கொள்வது இன்றியமையாதவொன்றாகும்.
- தஸ்கியாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அல்லாஹு தஆலா சூரியன் சந்திரன் போன்ற அவனது விசாலமான படைப்புக்கள் மீது சத்தியமிட்டு பேசியுள்ளான்.
- அல்குர்ஆனின் 91:9-10 மற்றும் 62:2 போன்ற வசனங்கள் தஸ்கியாவின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுகின்றது.
- அதேபோல் நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களில் தஸ்கியாவின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறியுள்ளார்கள்.

'நிச்சயமாக மனிதனின் உடலில் ஒரு சதைபிண்டம் உள்ளது. அது தூய்மையாக இருந்தால் அவனது சகல விடயங்களும் தூய்மையாகிவிடும். அது அசுத்தமடைந்துவிட்டால் அவனது சகல விடயங்களும் அசுத்தமடைந்து விடும். அது தான் அவனது உள்ளமாகும்.'

ஜிஹாதில் சிறந்த ஜிஹாதாக உள்ளத்துடனான ஜிஹாத் காணப்படுகின்றது. இது மஜாஹததுந் நப்ஸ் எனப்படுகின்றது.

ஒருவன் எந் நற்செயலை செய்யும் முன்னர் அவனது உள்நோக்கம் எண்ணம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை மறக்கக்கூடாது.

அவ்வாறு எண்ணம் தூய்மையாக இருக்காதவிடத்து அச்செயலை அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான். உள்ளத்தை தூய்மையாக்கும் நற்கிரிகைகளாக திக்ர், தவ்பா, இஸ்திக்பார், துஆ போன்றன காணப்படுகின்றன.

## 11.நற்பண்புகள் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டம் (1)

- நற்பண்புகள் ஒரு சிறந்த வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வதற்கான திறவுகோலாக உள்ளன.
- மனிதன் அல்லாஹ்வின் சிறந்த படைப்பாவான். எனவே அவனின் பெறுமானம் அவனின் சிறந்த படைப்பிள் பிரதிபளிக்க வேண்டும்.
- சிறந்த பண்பாடுகள் என்பதை குறிக்கும் அறபுப் பதம் குலுக் ஹஸமா, அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப் என்பன சில எடுத்துக்காட்டுகளாகும்.
- சிறந்த ஒழுக்கப்பண்பாட்டிற்கு நபி (ஸல்) அவர்களே சிறந்த எடுத்துக்காட்டாவார். அவர்கள் தனது எதிரிகளையும் அதேபோல் நண்பர்களையும் அவரின் சிறந்த பண்பாடுகளின் மூலமே வெற்றிகொண்டுள்ளார்கள்.
- இதனாலேயே அவர்கள் அக்காலத்திலேயே அல் அமீன் அஸ்ஸாதிக் போன்ற நாமங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.
- முஸ்லிம்கள் தமாதாகிக்கொண்டுள்ள சிறந்த ஒழுக்கப்பண்பாடுகளே முஸ்லிமல்லாதவர்களை இஸ்லாத்தின் பால் ஈர்ப்பதற்கு பெரும் பங்காற்றுகின்றன.
- சூறா லுக்மானும், சூறா புர்கானும் ஒரு முஸ்லிம் கொண்டிருக்க வேண்டிய நற்பண்புகளைப் பற்றி பேசுகின்றன.

# 12.நற்பண்புகள் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டம் (2)

**அன்பு**

- அன்பு என்பது அல்லாஹுத் தஆலாவின் அழகிய பண்புகளில் ஒன்றாகும்.
- அன்பு கருணையைப் பறைசாற்றுகின்ற பல அழகிய திருநாமங்கள் அல்லாஹு தஆலாவிற்கு உள்ளன.
- அர்ரஹ்மான் - அளவற்ற அருளாலன்
- அர்ரஹீம் - நிகரற்ற அன்புடையவன்
- அல் வதூத் - பேரன்புமிக்கவன்
- அன்பு ஈமானை பரிபூரணமாக்குகின்றது.
- அன்பு செலத்தாதவன் சுவனம் நுழைய முடியாது.

**அன்பு செலுத்துவது என்பதை இரண்டு பிரிவுகளாக பிரித்து நோக்கலாம்.**

a. அல்லாஹு தஆலாவை விரும்புதல்
b. அல்லாஹுத் தஆலாவின் படைப்புக்களை விரும்புதல்

நாம் அல்லாஹ்வின் படைப்புக்களின் மீது காட்டும் அன்பை விட அல்லாஹ்வின் மீது நாம் அதிகமதிகம் அன்பு வைக்க வேண்டும்.

கருணை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘எவரொருவர் பின்வரும் மூன்று பண்புகளைக் கொண்டிருப்பாரோ அவர் நிச்சயமாக ஈமானின் இனிமையை சுவைப்பார்கள்.

- அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏனைய அனைத்தையும் விட அதிகம் அன்புக்குறியவராக மாறுதல்.
- ஒருவரை விரும்பும் போது அல்லாஹு தஆலா ஒருவனுக்காக மாத்திரமே விரும்புதல்.
- இஸ்லாத்திற்குப் பின்னர் நாஸ்திகத்திற்குத் திரும்புவதை அவர் நெருப்பினுள் தூக்கியெறியப்படுவதைப் போல் வெறுத்தல்.

அல்லாஹு தஆலாவை விரும்புவதின் வெளிப்பாடுகளில் ஒன்றாக அவனது தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை விரும்புவதும், அவர் காட்டிச்சென்ற வழியில் பயணிப்பதுமுள்ளது.

- ஒருவன் செய்யும் இபாதத்துக்கள் பெறுமானம்மிக்கதாக மாறுவதற்கு அவன் அல்லாஹ்வை விரும்ப வேண்டும்.
- இவ்வன்பானது அல்லாஹ்வின் மீதான பயத்துடன் கலந்ததாகவே காணப்பட வேண்டும்.

**ஒருவனால் அன்பு செலுத்தப்பட வேண்டியவர்கள்.**

- அல்லாஹுு தஆலா
- நபி (ஸல) அவரகள்
- தனது குடும்பம்
- உம்மஹாத்துல் மு.:.மினீன்
- பெற்றோர்கள்
- இனபந்துக்கள்
- அண்டை அயலவர்கள்
- முஸ்லிமல்லாதவர்கள்
- மிருகங்கள்
- சுற்றுச்சூழல்

- ஒருவன் தன்னை விரும்பினால் நிச்சயமாக அவன் தன் பாலுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அந்தவகையில் தற்கொலையானது பெரும் பாவங்களில் ஒன்றாக இருக்கின்றது.

- ஒருவன் தன் பெற்றோர்களுக்காக வேண்டி தினசரி வழமையாக துஆ செய்ய வேண்டும்.

- பெற்றோர்கள் பயத்தை விட தங்கள் குழந்தைகளின் உள்ளங்களில் அன்பையே அறிமுகப்படுத்த வேண்டும்.

- அதேபோல் கடுமையான முறையில் ஹராமாக்கப்பட்டுள்ள நாய் பன்றிகள் உட்பட சகல ஜீவராசிகள் மீதும் நாம் அன்பு செலுத்த வேண்டும்.

**தியாகம்**

- நாம் ஒன்றின் பால் தேவையுள்ளவர்களாக இருக்கின்ற போது அதனை மற்றையவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்காக விட்டுக்கொடுப்பது தியாகம் என்று வழங்கப்படுகின்றது.
- இஸ்லாத்தின் அனைத்து நற்பண்பாடுகளிலும் தியாமானது மிகச்சிறந்ததாக கருதப்படுகின்றது.
- முற்றிலும் தியாகத்தால் கட்டியெழுப்பப்பட்ட மார்க்கமாக இஸ்லாம் காணப்படுகின்றது.
- இஸ்லாத்திற்காக தம் உயிர்களை தியாகம் செய்கின்றவர்களை இஸ்லாம் ஷுஹதாக்கள் எனக் குறிப்பிடுகின்றது.

தியாகம் செய்த மக்கள்:

- மக்கா காலத்தின் போது நபி (ஸல்) அவர்களும், அவர்களது ஸஹாபாக்களும்.
- தபூக் யுத்தத்தின போது அபூபக்க
- ர் (ரலி) அவர்களின் தியாகம்.
- அரேபியாவின் பஞ்சகாலத்தின் போதான உஸ்மான் (ரலி) அவர்களின் தியாகம்.

- தியாகம் என்பது சுவனத்தையே நற்கூலியாகப் பெற்றுத் தரும் ஒரு உயர்ந்த இபாதத் ஆகும்.

**தாராளத்தன்மை.**

- தாராள மனப்பான்மையானது அன்பு வேண்டி நிற்கும் ஒரு பண்பாகும்.
- தாராளத்தன்மை என்பது அல்லாஹ் எமக்களித்த செல்வத்திலிருந்து மற்றவர்களுக்கு கொடுப்பதைக்குறிக்கின்றது.
- நாம் அல்லாஹ்வை அவனது திருநாமங்களாகிய அல் முக்னி அல்லது அல் மு.ஃ.தி என்ற பெயர்களால் அழைக்கலாம். இவற்றின் கருத்துக்களாவன செல்வந்தனாக ஆக்குபவன், தாராளமாக வழங்குபவன் என்பதாகும்.

ஒருவர் கஞ்சத்தனம் போன்ற குணங்களைக் கடைப்பிடித்தால் அவர் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்றுக்கொள்வார். அவர் தாராளத்தன்மையுடையவராக இருந்தால் அவர் சுவனத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்வார்.

**நபி (ஸல்) அவர்களின் கூற்றுப்படி தாராளத் தன்மையுடன் வாழ்வதன் அனுகூலங்கள் சில:**

- மறு உலகில் சிறந்த வெகுமதிகள் கொடுக்கப்படும்.
- சொத்து செல்வங்கள் பெருகும்.
- பேரழிவுகள் தவிர்க்கப்படும்.
- உள்ளம் மகிழ்ச்சியாலும் ஆனந்தத்தாலும் அமைதியாலும் நிரம்பும்.
- நேர்மை
- இதன் பொருள் உண்மைத்தன்மையும் நேர்மையுமாகும். இவ்விரண்டு குணங்களும் மு.ஃ.மினுக்கு அவசியமான பண்புகளாகும்.
- நபி (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மை மற்றும் நேர்மையின் காரணமாகவே ஆரம்ப காலகட்டங்களிலும் (ஜாஹிலிய்யா காலத்திலும்) அல் அமீன் அஸ்ஸாதிக் என்றழைக்கப்பட்டார்கள்.

- திருடுதல் போன்ற குற்றத்திற்கான தண்டணைகள் இவ்வுலகிலும் மறுமையிலும் மிகக்கடுமையானதாக உள்ளது.
- வியாபாரத்தில் மோசடி இன்றி உண்மைத்தன்மையுடன் ஈடுபடும் வியாபாரிகள் நாளை மறுமையில் நபிமார்கள் சித்திகீன்கள் ‘ஷஹதாக்களின் மத்தியில் எழுப்பப்படுவார்கள்.

# 13.ஆன்மீக அபிவிருத்திக்கான சில வழிகாட்டல்கள்.

ஆத்மா இல்லாத உடல் அல்லது உடல் இல்லாத ஆத்மாவை முக்கியமானதாக கருத முடியாது.

ஒருவர் தன்னை ஆன்மீக ரீதியில் வளர்த்துக்கொள்வதற்காக அவர் புனித அல்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை பின்பற்றுவது அவசியமாகின்றது.

**இக்லாஸ்**

- இக்லாஸ் என்பதால் எண்ணத்தில் தூய்மையாக இருத்தலை நாடப்படுகின்றது.
- நல்லமல்கள் அல்லாஹுஂ தஆலாவிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான முதல் நிபந்தனையாக இக்லாஸே காணப்படுகின்றது.
- அல்லாஹுஂ தஆலாவின் திருப்பொருத்தத்தை நாடி செய்யப்படும் நல்லமல்களே இக்லாஸுஂடைய செயல்களாக கருதப்படுகின்றது.
- இக்லாஸின்றிய அனைத்து அமல்களும் ிர்க் என்று பெயரிடப்படும்.

**தவ்பா**

- எமது பாவங்களிலிருந்து எம்மை விடுவித்துக்கொண்டு அல்லாஹுஂ தஆலாவை நெருங்குவது தவ்பா என்று அறியப்படுகின்றது.
- ஒரு மனிதன் பாவ காரியமொன்றை செய்து விட்டால், உடனே அவன் தவ்பாவினூடாக பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- தவ்வாபிற்கு 4 நிபந்தனைகள் காணப்படுகின்றன.
    - தவ்பாவை இறை திருப்தியை யாசித்து செய்தல்.
    - பாவ கருமத்தை முற்று முழுதாக விட்டு விலகுதல்.
    - அப்பாவ காரியத்தை மீளவும் செய்யவே மாட்டேன் என மனதால் உறுதிபூண்டல்.
    - ஒருவர் இன்னொருவருக்கு ஏதாலும் பிழைகள் அல்லது குறைகளை செய்திருந்தால் முதலாவதாக அக்குறிப்பிட்டவரிடமிருந்து பிழைக்கான மன்னிப்பை பெற்றுக்கொண்ட பின்னரே அவர் அல்லாஹுஂ தஆலாவிடம் பிழைபொறுக்க வேண்டவேண்டும்.
- தவ்பா செய்வதற்கென எவ்வித வரையறுக்கப்பட்ட நேரமோ காலமோ தேவை இல்லை. தவ்பாவை ரமழான் மாதத்தில் மட்டும் தான் செய்ய வேண்டும் இல்லை. மாறாக விரும்பிய எப்போதும் அதனை செய்யலாம்.

**வரஊ**

- இதன் கருத்து பேணுதல் என்பதாகும். அதாவது எப்போதும் விளிப்புடன் இருத்தல் வேண்டும் என்பதாக உள்ளது.

- நல்லதா கெட்டதா? ஆகுமானதா ஆகாததா? போன்ற சந்தேகத்திற்குரிய விடயங்களை விட்டுவிடுவது இதனால் நாடப்படுகின்றது.
- ஒருவன் இவ்வாறு விளிப்புடன் இருக்காத நிலையில் அவன் பாவகருமங்களை செய்யாது தவிர்ந்திருக்க முடியாது.
- வார்த்தையில் பேணுதல் என்பது ஒருவர் தன் வாயை வீண் பேச்சுக்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளலாகும்.
- செயல்களில் பேணுதல் என்பது ஒருவர் தன் ஆடை அணிகலன்கள் நடத்தைகளை ஹலாலான முறையில் அமைத்துக்கொள்வதாகும்.

**ஸுஹ்த்**

- ஆன்மீக வளர்ச்சிக்கான திறவுகோலாக இது இருக்கின்றது.
- உலகத்தின் பால் எவ்வித மோகமும் கொள்ளாமை என்பது இதன் கருத்தாக உள்ளது.
- தாருல் பனா - தற்காலிக இவ்வுலகம்
- தாருல் பகா - இதன் பின்னரான நிரந்தர வாழ்வு
- பொருள் உடமைகள் பயனற்றவையாகும். இவற்றின் பாலான ஆசை மோகம் என்பன ஆன்மீக தூய்மையிலிருந்து எம்மை தடுக்கும் தடைகளாகும்.
- ரஹ்பானிய்யா- உலகவாழ்வை முற்றிலும் துறந்து ஆன்மீகத்தை மாத்திரம் பரிபக்குவப்படுத்தும் ஒரு கட்டாக இது காணப்படுகின்றது.
- இதை இஸ்லாம் ஒரு போதும் வரவேற்பதில்லை.

# 14.வஹியின் முக்கியத்துவம்

**அறிவென்பது இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றது. அவையாவன:-**

- ஐம்புலன்களால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அறிவு
- பகுத்தறிவால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அறிவு

- வஹியானது எமக்கு நேரான பாதையைத் தெளிவாகக் காட்டித் தரும் பொருட்டு இவ்விருவகை அறிவுகளையும் ஒன்றிணைக்கின்றது.
- வஹியானது மனிதனுக்கு நேரான பாதையைத் தெறிவு செய்ய உதவிபுரிகின்றது.
- மனிதர்களுக்கு சரியான பாதையைக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு நபிமார்களுக்கு வஹி அறிவிக்கப்பட்டது.
- வஹி என்பதன் நேரடி கருத்துக்களாலக விழிப்புணர்வு, உள்ளுணர்வு, இரகசியப் பேச்சினால் செய்து வழங்குதல் போன்ற பொருள.

**வஹி இரண்டு பிரிவுகளாகப் பிரிகின்றன:-**

- வஹி மத்லூவு
- வஹி கைரு மத்லூவு

- வஹி மத்லூ என்பது அல்லாஹு தஆலா வனவர் ஜிப்ரீல் (அலை) மூலம் இறை தூதர்களுக்கு ஓதிக்காட்டிய விடயங்களாகும்.

- மனிதர்கள இவ்வகை வஹிக்களை வாய்மொழியாக அல்லது எழுத்து வடிவில் பாதுகாத்தார்கள். இதற்கு சிறந்த உதாரணமாக அல்குர்ஆன் காணப்படுகின்றது.

- ஓதிக்காண்பிக்கப்படாத வஹியானது வஹி கைரு மத்லூ என்றழைக்கப்படுகின்றது.

- அதேநேரம் அறிகுறிகளின் மூலமும் அல்லாஹ் நபிமார்களைத் தொடர்புக்கொள்கின்றான். உதாரணமாக நபி இப்றாஹீம் (அலை) அவர்களிடம் அன்னாரது மகனை அருத்துப்பலியிடுமாறு அல்லாஹ் கனவின் மூலமே கட்டளையிட்டான்.

- வஹி மனிதர்களுக்கு நல்லவற்றிற்கும் தீயவற்றிற்குமிடையிலான வித்தியாசத்தைக் கற்றுக்கொடுக்கின்றது.

- ஒருவருக்கு தனது மனோ இச்சையை பின்பற்ற முடியாது மாறாக அவர் வஹியையே பின்பற்ற வேண்டும்.

**ஒவ்வொரு மனிதனின் மனதிலும் உதிக்கும் சில கேள்விகள் வருமாறு:**

1. நான் யார்?
2. எனது ஆரம்பம் என்ன?
3. இதன் பின் நான் எங்கே செல்வேன்?
4. எனது பிறப்பிற்கான நோக்கம் என்ன?

இவ்வினாக்களுக்கு வஹியின் மூலமே பதிலளிக்க முடியும்.

## 15.புனித அல்குர்ஆனின் வெளிப்பாடு மற்றும் நிறைவு

- அல்குர்ஆனானது அல்லாஹ்வின் இறுதி தூதருக்கு இறக்கியருளப்பட்ட வேத நூலாகும்.
- நபி (ஸல்) அவர்களுக்கு 40 வயதாக இருந்த போது வானவர் ஜிபரீல் (அலை) அவர்களால் நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக வஹி அறிவிக்கப்பட்டது. (கி.பி.610)
- முதல் வஹி இறக்கியருளப்படும் போது நபி (ஸல்) அவர்கள் மக்காவில ஹிரா என்றழைக்கப்படுகின்ற குகையில் லைலதுல் கத்ர் இரவில் தனிமையாக இருந்தார்கள்.
- வானவத் தூதர் ஸூறதுல் அலக்கின் முதல் 5 வசனங்களை ஓதிக்காண்பித்து அதனை மீள ஓதிக்காண்பிக்குமாறு வேண்டிக்கொண்டார்கள்.
- நபி (ஸல்) அவர்களின் மனைவியாக கதீஜா (ரலி) அவர்களின் சொந்தக்காரர்களுல் ஒருவரான வரகா பின் நௌபல் என்பவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்த வானவரின் பெயர் ஜிப்ரீல் என்பதாக கூறினார்.
- ஓரு அல் குர்ஆன் வசனத்தில் பால் தேவையுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அல்லாஹ் குர்ஆன் வசனங்களை வஹியாக இறக்கினான்.
- வஹியை எழுதுவதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த ஸஹாபாக்கள் குத்தாபுல் வஹி என்று அழைக்கப்படுகின்றார்கள்.
- அவர்கள் அல்குர்ஆனை எழுதுவதற்கு மிருகங்களின் தோல், மரங்களின் தண்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- அல் குர்ஆன் ஒரே தடவையில் முழுவதுமாகவன்றி சிறு சிறு பகுதிகளாகவே இறக்கியருளப்பட்டது. இவ்வாறு இறக்கியருளப்பட்ட ஒழுங்கு தர்தீபுன் நுஸூல் என்றழைக்கப்படுகின்றது.
- அல் குர்ஆனை எங்கிருந்து ஆரம்பித்து எச்சூறாவில் முடிக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்களால் காட்டித்தரப்பட்ட ஒழுங்கு தர்தீபுத் திலாவ் எனப்படுகின்றது.
- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் புத்தக வடிவில் எழுதப்படவில்லை.
- நபி (ஸல்) அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து போலி நபிமார்களும் முர்தத்துகளும் யமாமா என்ற இடத்தில் ஒரு புதிய யுத்தத்தை ஆரம்பித்தனர்.
- இந்த யுத்தத்தின் போது அல்குர்ஆனை மனனமிட்ட பல ஸஹாபக்கள் ‘ஹீதானார்கள்.
- இதனைக் கண்ணுற்ற உமர் (ரலி) அவர்கள் கவலையடைந்தவர்களாக ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களின் தலமையில் ஒரு குழுவை அமைத்து குர்ஆனை நூலுருப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அப்போதைய கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களிடம் முன்வைத்தார்கள்.
- அல்குர்ஆன் எழுதப்பட்ட தாள் முஸ்அப் என்றழைக்கப்பட்டது.
- அல்குர்ஆன் பல்வேறு பரந்துபட்ட பிரதேசங்களுக்கும் வியாபித்ததன் அடியாக அல்குர்ஆனை ஒவ்வொரு பிரதேசவாசிகளும் உச்சரிப்பதில் விட்ட பிழையால் முன் பின் தொடர்பின்றிய முரண்பாடுகள் ஏற்பட்டன.

- இம் முரண்பாட்டை தீர்க்குமுகமாக கலீபா உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தின் போது அவர்கள் ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து குறைஷிக்கள் ஓதிய பிரகாரம் அல்குர்ஆனை எழுதுமாறு கட்டளையிட்டார்கள். அத்தோடு ஏனைய சகல அல்குர்ஆனின் பிரதிகளையும் எரிக்கச் சொன்னார்கள். இவ்வாறு இக்குழு 8 குர்ஆன் பிரதிகளை எழுதினர்.
- இதன் பின்னர் சகலரும் அல்குர்ஆனை ஒரே உச்சரிப்பில் ஒரே அமைப்பில் ஓதலானார்கள். இன்னார் செய்த சேவையின் காரணமாக உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஜாமிஉல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டது.

# 16.சுன்னாவின் முக்கியத்துவம்.

இஸ்லாமிய சட்டவாக்கத் துறையின் முதல் சட்ட மூலாதாரமாக அல்குர்ஆன் விளங்குகிறது.

இரண்டாம் மூலாதாரமாக சுன்னா காணப்படுகின்றது.

- நபி (ஸல்) அவர்களின் சொல் செயல் போன்றன சுன்னா என வழங்கப்படுகின்றது.
- ஹதீஸ் என்பது சுன்னாவிற்கான இன்னொரு பதமாகும்.
- 3:31, 4:80, 59:7 போன்ற அல்குர்ஆனிய வசனங்கள் சுன்னாவைப் பற்றி பேசுகின்றன.
- சுன்னாவானது வஹி கைரு மத்லுவைச் சேர்ந்ததாகும்.
- ஹிக்மா - ஞானம்
- அல்குர்ஆனும் சுன்னாவும் ஒன்றை ஒன்று பலப்படுத்துகின்றது. ஒன்றை ஒன்று பூரணமாக்குகின்றது.
- ஹதீஸை அறியாமலும் அதனை கற்காமலும் அல்குர்ஆனை விளங்குவதானது அசாத்தியமான காரியமாகும். உதாரணமாக: அல்குர்ஆன் எமக்கு தொழுகையை நிறைவேற்றுமாறு கட்டளையிடுகின்றது. ஆயினும் சுன்னாவே நாம் அதனை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதைச் சொல்லித்தருகின்றது.
- ‘ரீஆ சட்ட திட்டங்களை முறைப்படுத்துவதற்கு சுன்னா அத்தியவசியமானதாக உள்ளது.
- ஸஹாபாக்களும், தாபிஈன்களும் அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் சுன்னாவின் விடயத்தில் அதிகூடிய முக்கியத்துவத்தை வழங்கியுள்ளார்கள்.
- இஸ்லாமிய அறிஞர்கள் போலியான ஹதீஸ்களை உண்மையான ஹதீஸ்களை விட்டும் வேறுபடுத்தினார்கள்.

## 17.இஸ்லாமிய சட்டவாக்கக் கலையின் இரண்டாம் நிலை மூலாதாரங்கள்.

இஜ்மா என்ற அறபுப் பதத்தற்கு ஒன்று சேர்த்தல், தீர்மானித்தல், தீர்மானத்தில் உடன்படுதல் போன்ற பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

அல்குர்ஆனும் சுன்னாவும் இஜ்மாவை ஏற்குமாறு எமக்கு வழிகாட்டியுள்ளது.

- இஜ்மாவின் பயன்கள் பின்வருமாரு:
    1. சமூகத்திற்கு மத்தியில் ஐக்கியம் கட்டியெழுப்பப்படுகின்றது.
    2. சமூகத்தின் ஒழுக்க அமைப்பொன்று பேணப்படுகின்றது.

- இஜ்மாவின் வகைகள்
    1. இஜ்மா ஸரீஹ்
    2. இஜ்மா அக்சரிய்யா
    3. இஜ்மா சுகூதி

- கியாஸ் என்பதன் கருத்து ஒப்பிடல் என்பதாகும். கியாஸ் என்பதன் மூலம் தீர்ப்பு கூறப்பட்ட ஒரு பிரச்சனையின் தீர்ப்பை, தீர்ப்புக்கூறப்படாத ஒரு புதிய பிரச்சினைக்குமுறிய தீர்ப்பாக அவ்விரண்டு பிரச்சினைகளுக்குமுறிய ஒத்த பண்பை கருத்திற் கொண்டு வழங்குவதைக் குறிக்கின்றது.

## 18.அறேபிய தீபகற்பத்தில் இஸ்லாத்தின் பரவல்.

- இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் ஜாஹிலிய்யாக் காலம் - அறியாமைக் காலம் என்றழைக்கப்படுகின்றது.
- அறேபியர்களின் வாழ்வொழுங்கு குல கோத்திர மரபுகளைக் கொண்டதாக இருந்தது. குடும்பங்கள் சுஹீபா என்றழைக்கப்படுகின்ற குலத்தினர்களாக வாழ்ந்தனர். கோத்திரங்கள் கபீலா என்றழைக்கப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக அவர்களுக்கு மத்தியில் வேறெந்த நிருவாக முறைகளும் காணப்படவில்லை.
- அன்று அவர்களுக்கு மத்தியில் சரியான திருமண குடும்ப முறைமை ஒன்று இருக்கவில்லை. நிக்கா ஸாலிஹ் என்றழைக்கப்படும் சரியான திருமணமுறை ஒரு சில உயர் அந்தஸ்து கொண்ட குலத்தினரிடம் மாத்திரமே காணப்பட்டது.

## 19.நபி (ஸல்) அவர்களின் த.ஃவாவும் அவர்கள் எதிர்க்கொண்ட சவால்களும்.

- அல்லாஹுத் தஆலாவின் பால் அழைப்புவிடுப்பதே நபி (ஸல்) அவர்களின் முதன்மையான பணியாக காணப்பட்டது. அது த.ஃவா என்றழைக்கப்படுகின்றது. அன்னார் 40 வயதாக இருக்கும் பொழுது அல்லாஹுத் தஆலா அவருக்கு நபித்துவத்தைக் கொடுத்ததுடன் த.ஃவா செய்வது அவர்களது பொறுப்புக்களில் ஒன்றாக மாறியது.
- நபி (ஸல்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவின்பாலான அழைப்புப் பணியை 3 வருடங்கள் இரகசியமாக மேற்கொண்டார்கள். அதன் பின்னர் நபியவர்கள் தனது பணியை பகிரங்கமாக தொடரலானார்கள். அவர்கள் முதலாக ஸபா என்ற மலை உச்சியின் மீதேறி மனிதர்களை கீழே ஒன்று திரளுமாறு சத்தமிட்டார்கள். பின அவரது பகிரங்க அழைப்பை மேற்கொண்டார்கள்.
- இதனைத் தொடர்ந்து அபூ லஹப், அபூ ஜஹ்ல் மற்றும் இன்னும் பலர் இஸ்லாமிய த.ஃவா பிரச்சாரத்திற்கெதிராக செயற்படலானார்கள்.

## 20.ஸீறாவின் முக்கியத்துவம்

- ஸீறா என்பது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கின்றது.
- நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் அன்னாருடன் மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தார்கள். அவர்கள் அன்னாரை தமது உயிரையும் விட அதிகமாக நேசித்தார்கள்.
- நபிகளாரையன்றி ஸஹாபாக்களை மாத்திரம் சந்தித்த பரம்பரையினர்கள் தாபிஈன்கள் என்றழைக்கப்படுகின்றனர்.
- முதன்முதலாக நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்த ஸீறதுர் ரஸூல் என்ற புத்தகத்தை முஹம்மத் பின் இஸ்ஹாக் என்பவர் எழுதினார்.

## 21.பொருளாதாரம் பற்றி இஸ்லாத்தின் கண்ணோட்டம்.

- இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள நேர் எதிர் பொருளாதார அமைப்புக்களாக முதளாலித்துவப் பொருளாதாரமும், சோசலிச பொருளாதாரமும் காணப்படுகின்றது.
- இஸ்லாமிய பொருளாதார அமைப்பைப் பொருத்தவரை யாவற்றையும் படைத்த அல்லாஹு தஆலவின் புறத்திலிருந்து வந்ததாகும். எனவே மனிதனால் உருவாக்கப்பட்ட ஏனைய பொருளாதார முறைமைகளில் உள்ள குறைபாடுகள் இதில் காணப்படுவதில்லை.
- இஸ்லாமிய முறைமைகளிள் எவ்வித அநீதிக்கும் இடமில்லை.

## 22.உழைத்தலின் முக்கியத்துவம்

- அல்குர்ஆனும் சுன்னாவும் உழைத்து வாழ்வதை ஊக்குவிக்கின்றது.
- உழைப்பதென்பது அல்லாஹ்வின் அருளைப்பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழியாகும்.
- இஸ்லாத்தில் வாழ்வதற்காக உழைப்பது என்பதும் கூட ஒரு இபாதாவக மாறுகின்றது.

## 23.உழைத்தல் (2)

- விவசாயமானது உழைப்பதற்கான பாரம்பரிய முறைமையா உள்ளது. விவசாயத்தில் இரண்டு வகையான முயற்சிகள் காணப்படுகின்றன. அவையாவன:
  - உணவு பயிர்களை வளர்ப்பதற்கான தோட்டம்.
  - இறைச்சி, பால் பொருட்களைப் பெற்றக்கொள்வதற்ன கால்நடை வளர்ப்பு. இவையிரண்டும் அல்லாஹு தஆலா மனிதனுக்கு செய்த மிகப்பெரிய உதவிகளாகும்.

- தொழில் என்பது மனிதன் தனது அறிவையும் திறமையையும் பயன்படுத்தி சில மூலப்பொருட்களுடன் ஒரு இறுதி உற்பத்திப்பொருளை தயாரிப்பதற்கு எடுக்கும் முயற்சியைக் குறிக்கின்றது.
- நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ‘ஸகரிய்யா (அலை) அவர்கள் ஒரு தச்சனாக இருந்தார்கள்’ (ஸஹீஹ் முஸ்லிம்)

# 24.உ ழைத்தல் (3)

- வர்த்தகம் அல்லது வியாபாரம் என்பது ஒருவரின் உடமையை இன்னொருவருக்கு பதிலீட்டுக்காரணிக்காக வேண்டி மாற்றுவதைக் குறிக்கின்றது.
- ஒரு நபர் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முன் அது பற்றிய நல்ல அறிவை பெற்றிருக்க வேண்டும்.
- வர்த்தகத்திற்கான நிபந்தனைகள்:
    1. பருவ வயதை அடைந்திருத்தல்
    2. பிரித்தறியும் அறிவை பெற்றவறாக இருத்தல்
    3. விடய அறிவை (வியாபாரம் பற்றிய அறிவை) பெற்றவறாக இருத்தல்

- வியாபாரி வியாபாரப் பொருளை விற்றமைக்காக வழங்கும் ஒப்புதல் வாக்குமூலம் ஈஜாப் என்றழைக்கப்படுகின்றது.

# 25.அஜ்னபி மஹ்ரமி எல்லைகளைப் பேணுவோம்

மஹ்ரம் - திருமணம் செய்வதற்கு ஆகுமாக்கப்படாத தனி நபர்களையே மஹ்ரம் என்கின்றோம்.

நிரந்தர மஹ்ரம்கள்

நிரந்தர மஹரம்களுக்குறிய உதாரணங்கள்:

1. இரத்த உறவுகள்
2. பால்குடி முறை உறவுகள்
3. திருமண உறவுகளால் ஏற்படும் உறவுகள்

இரத்த உறவுகள்:

- தாய், தாயின் தாய், மகள், மகளின் மகள், மகனின் மகள்
- சகோதரி, தந்தைவழி சகோதரி, தாய்வழி சகோதரி, தந்தையின் சகோதரி, தாயின் சகோதரி
- தந்தைவழி உடன் பிறந்த சகோதரியின் மகள், தாய்வழி சகோதரியின் மகள்

பால்குடி உறவுகள்

- பால் கொடுத்தப்பெண், அவளின் தாய் மற்றும் அவள் தந்தையின் தாய்
- பால் கொடுத்தப் பெண்ணின் சகோதரி மற்றும் அவளின் உறவு முறை சகோதரி
- பாலூட்டிய பெண்ணின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள்

திருமண உறவால் ஏற்படும் மஹ்ரம்கள்

- மனைவியின் தாய்
- மருமகள்
- மனைவியின் மகள்
- தந்தையின் மனைவி

இப்பிரிவினர்களுக்குள் உள்ளடங்காத வகையினர் அஜ்னபியினர் என்றழைக்கப்படுகின்றனர்.

அஜ்னபியர்களாக அறிமுகமில்லாதவர்கள், தூரத்து சொந்தங்கள், உறவினரல்லாதவர்கள், அன்னியர்கள் போன்றோர் இருப்பர். ஒருவனுக்கு அஜ்னபியினர்களையே மணக்க அனுமதியுண்டு.

அஜ்னபியினர்கள் தொடர்பான வரையறைகள்

1. பார்வையை தாழதுதல
2. அவ்ரத்தை அவர்களைவிட்டும் மறைக்க வேண்டும்.

3. இவர்களுடன் பேசும் போதும் நடக்கும் பொழுதும் ஆடை அணியும் பொழுதும் நடந்துகொள்ளும் பொழுதும் இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
4. அஜ்னபியான பெண்கள் ஏனைய ஆடவர்களின் பார்வை தன் பக்கம் சாயாதவாரு நடந்துகொள்ள வேண்டும்.
5. அஜ்னபியான ஆணும் பெண்ணும் தனிமையில் இருக்கக்கூடாது.

‘

# 26.மனித உரிமைகள்

- இஸ்லாத்தின் மனித உரிமைகளின் மூலவேர் அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் காணப்படுகின்றது.
- மனித உரிமைகள் நாம் பிறந்தது முதலேயே அல்லாஹ்வால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாத்தில் மனித உரிமைகள்

இஸ்லாத்தின் மனித உரிமைகளுக்கான அடிப்படைகள் அல்குர்ஆன் சுன்னாவிலிருந்தே வந்துள்ளது. நாம் உலகில் பிறந்தது முதலே மனித உரிமைகள் அல்லாஹ்வால் எமக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாத்தின் மனித உரிமை

1. **அல்குர்ஆனில் வாழ்வதற்கான உரிமை**

    'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நாம் ஓதிக் காண்பிக்கின்றேன், எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள். பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள். வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்- ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம். வெளிப்படையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள்- இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்.' (அல்குர்ஆன் 6:151)

2. **சமத்துவத்திற்கான உரிமை**

3. **சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை**

    'நியாயத் தீர்ப்பு நாளில் நான் 3 வகையான மக்களுக்கு எதிராக வாதிடுவேன். அதில் ஒருவர் பலவீனமானவர்களை அடிமைப்படுத்துவதன் மூலமும் ஏனையவர்களுக்கு விற்பனை செய்வதன் மூலமும் சம்பாதித்து தனது உணவை உண்ணுகிறார்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி)

4. **நீதியின் முன்னிலையில் ஆண் பெண் யாவரும் சமமானவர்கள் என்றவகையில் அனைவருக்கும் நீதியை அணுகுவதற்கான உரிமை உண்டு. அல்குர்ஆன் வசனம் பின்வருமாறு கூறுகிறது:**

    'மு.'.மின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்

மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே (தக்வாவுக்கு) இறையச்சத்திற்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.' (அல்குர்ஆன் 6:8)

5. **ஒருவரின் கௌவரத்தை பாதுகாக்கும் உரிமை**

6. **ஒருவரின் சொத்தை பாதுகாக்கும் உரிமை**

7. **மத உணர்வுகளை பாதுகாக்கும் உரிமை**

# 27.இளைஞர்களும் அவர்களின் பணிகளும்.

நபி (ஸல்) அவர்கள் இளைஞர்களைப் பற்றி மிக விரிவாக கூறியுள்ளார்கள். ‘முதுமைக்கு முன்பே இளமையைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்’ (ஹதீஸ்)

அல்குர்ஆன்: ‘குகை மற்றும் கல்வெட்டுக்காரர்கள் நம்முடைய வியக்கத்தக்க மாபெரும் சான்றாய் திகழ்ந்தனர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? அந்த இளைஞர்கள் குகையினுள் தஞ்சம் புகுந்த போது அவர்கள் ‘எங்கள் இறைவனே! உன் அருளை எங்களுக்கு அளிப்பாயாக! நீ எங்களுக்கு நேரான வழியையும் சுலபமாக்கி விடுவாயாக!’ என்று பிரார்தனை செய்தார்கள். ஆதலால், அக்குகையில் எண்ணப்பட்ட பல வருடங்கள் வரை அவர்கள் நித்திரை செய்யும்படிச் செய்தோம். பின்பு (அக்குகையில் தங்கியிருந்த) இரு பிரிவினர்களில் எப்பிரிவினர், தாங்கள் (குகையில்) தங்கியிருந்த கால அளவை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை சோதிப்பதற்காக அவர்களை நாம் எழுப்பினோம். (நபியே!) அவர்களுடைய உண்மையான சரித்திரத்தையே நாம் உங்களுக்குக் கூறுகிறோம். நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனை நம்பிக்கை கொண்ட வாலிபர்களாவர். (ஆகவே) மென்மேலும் நேரான வழியில் நாம் அவர்களை செலுத்தினோம். அவர்கள் (கொடுமைக்கார அரசன் முன்னிலையில்) எழுந்து நின்று ‘வானங்களுக்கும், பூமிக்கும் இறைவனாகிய அவனே, எங்களுடைய இறைவன். எக்காலத்திற்கும் அவனையன்றி வேறு எவரையும் நாயனென்று அழைக்க மாட்டோம். (அப்படிச்செய்தால்) வரம்பு மீறியதை சொன்னவர்கள் ஆவோம்’ என்று அவர்கள் உறுதியாகக் கூறிய நிலையில் அவர்கள் இதயங்களை நாம் வலுப்படுதினோம். (18:6-14)

**பல சாதனைகளை செய்து அவற்றில் வெற்றியும் பெற்ற தலைமுறையினர்.**

1. உமர் இப்னு அப்துல் அஸீஸ் - நீதமான ஆட்சியாளர்
2. தாரிக் பின் ஸியாத் - ஸ்பெயினை வெற்றி கொண்டவர்
3. முஹம்மத் பின் காஸிம் - சிந்துவை வெற்றி கொண்டவர்
4. முஹம்மத் அல் பாதிஹ் - கொண்ஸ்தாந்து நோபிலை வெற்றி கொண்டவர்
5. இமாம் புகாரி - ஸஹீஹுல் புகாரியைத் தொகுத்தார்
6. இமாம் ‘ாபிஈ - உஸூலுல் பிக்ஹை தொகுத்தவர்
7. இமாம் ீபா - அறபு இலக்கணம் தொடர்பான புத்தகங்களைத் தொகுத்தவர்.

## 28.ஆரோக்கியமான உடலும் உள்ளமும்

சிறந்த ஆரோக்கியமானது அல்லாஹுு தஆலா ஒரு மனிதன் மீது சொறிகின்ற அருளாகும்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் பின்வருமாறு கூறினார்கள்: 'ஒருவன் காலையில் எழும்பும் போது அவனுக்கு சிறந்த ஆரோக்கியமும், தன்னை பாதுகாக்கும் ஒரு வீடும், அன்றைய தினத்திற்கு அவனுக்கு போதிய உணவும் கிடைத்தால், இந்த முழு உலகும் அவனிடம் கொண்டுவரப்பட்டதைப் போலாவான்' (புகாரி)

எமது உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்கு கீழ் வருகின்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- நல்ல உணவுப் பழக்கவழக்கம்
- உடலியக்க பயிற்சிகள்

உடல் பலத்தைப் பேணுவது ஒரு இபாதத் ஆகும். உடற்பயிற்சியானது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும். நபியவர்கள் உங்கள் குழந்தைகளுக்கு நீந்தவும், குதிரையில் ஏறி சவாரி செய்யவும், அம்பெறியவும் கற்றுக்கொடுங்கள் என்பதாக கூறியுள்ளார்கள். நாம் எம் வயதினைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்றாற்போல் உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

- தூய்மை

தூய்மை என்பது வெறும் ஆடை சுத்தத்துடன் மாத்திரம் தொடர்புபட்டதல்ல. மாறாக நாம் உட்கொள்ளும் உணவுகளின் தூய்மை பேணுதல், வேலை தளத்தை சுத்தமாக வைத்திருத்தல், நாம் பயன்படுத்தும் பொருட்களின் சுத்தம் பேணுதல், தினசரி குளித்தல், ஜனாபத்தை விட்டும் சுத்தமடைதல், வெள்ளிக்கிழமைகளில் சுன்னத்தான குளியல், மிஸ்வாக் செய்தல், மணம பூசுதல் போன்றனவும் அடங்குகின்றன.

- ஓய்வு

ஆரோக்கிமான வாழ்வொழுங்கொன்றினைப் பேணுவதில் ஓய்வு எடுப்பதானது மகத்தான பங்களிப்பை நல்குகின்றது. களைப்படைந்த உடலைக் கொண்டு ஒருவனால் ஒரு விடயத்திலும் சிந்தனையை ஒருமுகப்படுத்த முடியாது, சுறுசுறுப்பாக இயங்க முடியாது, தன் கடமையை செவ்வனே நிறைவேற்றவும் முடியாது.

அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது: 'இன்னும், அவன் தன் ரஹ்மத்தால் உங்களுக்கு இரவையும் பகலையும் உண்டாக்கினான். (இரவு) நீங்கள் அதில் ஓய்வு பெறும் பொருட்டு, (பகல்) நீங்கள் அதில் அவன் அருளைத் தேடும் பொருட்டும், (உண்டாக்கினான். இதற்காக அவனுக்கு) நன்றி செலுத்துவீர்களாக!' (28:73)

மனிதன் அலட்சியமக இருக்கின்ற ஆரோக்கியமும் ஓய்வும் அல்லாஹ் நமக்களித்த இரு வரப்பிரசாதங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

- உள ஆரோக்கியம்

ஆரோக்கியமான உடலைப் போலவே ஆரோக்கியமான உள்ளம் ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாகும். நாம் எம் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போலவே இஸ்லாம் எம் உள ஆரோக்கியத்திற்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக அல்லாஹு தஆலா உங்கள் உருவங்களையோ அல்லது உங்கள் உடல்களையோ பார்க்க மாட்டான். மாறாக அவன் பார்ப்பதெல்லாம் உங்கள் உள்ளங்களையும் செயல்களையுமே' (புகாரி)

நற்சிந்தனைகள் ஆரோக்கியமான உள்ளங்களில் இருந்தே பிறக்கின்றன. அதேபோல் பாவங்களும் கெட்ட சிந்தனைகளும் நோயுற்ற உள்ளங்களில் இருந்தே வெளியாகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக மனிதனின் உடலில் ஒரு சதைபிண்டம் உள்ளது. அது தூய்மையாக இருந்தால் அவனது சகல விடயங்களும் தூய்மையாகிவிடும். அது அசுத்தமடைந்துவிட்டால் அவனது சகல விடயங்களும் அசுத்தமடைந்து விடும். அது தான் அவனது உள்ளமாகும்' (புகாரி)

# 29.நடுநிலைமையைக் கடைபிடிப்போம்

இரண்டு தீவிர சிந்தகளுக்கு மத்தியில் மத்தியஸ்தமான பதையைத் தெறிவு செய்தல் அறபு மொழியில் ‘வஸதிய்யா’ என்றழைக்கப்படுகின்றது. எமது வாழ்வின் சகல துறைகளிலும் மத்தியஸ்தமான, நடுநிலையான பாதையை கடைபிடிக்குமாரு இஸ்லாம் மார்க்கம் எமக்கு போதிக்கின்றது.

அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: ‘இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம். (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமோயாகும். யார் (நம்) தூதரைப் பின்பற்றுகின்றார்கள்? யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதிகால்கள் மீது பின்திரும்பி செல்கிறார்கள் என்பதை அறிவிப்பதற்காக வேண்டி கிப்லாவை நிர்ணயித்தோம். இது அல்லாஹ் நேர் வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது. அல்லாஹ் உங்கள் (நம்பிக்கையை) ஈமானை வீணாக்க மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க கருணைமிக்கவன், நிகரற்ற அன்புடையவன்.’(2:143)

- இஸ்லாமிய சமூகம் உம்மதுன் வஸதா என்ற நாமத்தால் அழைக்கப்படுகின்றது. இதன் கருத்து நடுநிலமையான சமூகம் என்பதாகும். நடுநிலமை கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் கவனிக்கப்படுதல் வேண்டும்.
- நாம் உலக விவகாரத்திலும் ஆன்மீக விடயங்களிலும் நடுநிலமை பேணுவதில் அக்கரை செலுத்த வேண்டும்.
- ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அவர்களை சந்தித்து பின்வருமாறு கூறினார்கள்.: ‘ ஓ அப்துல்லாஹ்வே! நீங்கள் பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்குவதாக எனக்கு அறியக்கிடைத்தது. இவ்வாறு செய்யாது சில காலங்கள் நோன்பு பிடியுங்கள், இன்னும் சில காலங்களில் நோன்பை விடுங்கள். மேலும் இரவில் தொழுவது போல் தூங்கவும் செய்யுங்கள். உங்கள் உடம்பிற்கும் உங்கள் மனைவியிற்கும் உங்கள் விருந்தினர்களுக்கும் உங்களால் நிறைவேற வேண்டிய கடமைகள் உள்ளது என்பதை மறவாதீர்கள் என உறுதிப்பட உபதேசித்தார்கள். (புகாரி)

# 1.அகீதா

- எந்த விதமான சந்தேகமும் இன்றி உறுதியாக நம்பிக்கை வைத்து ஏற்றுக்கொள்ளுதல் அகீதா என்பதன் மூலம் நாடப்படுகின்றது.
- இது அர்கானுல் ஈமானை அடிப்படையாகக் கொண்டதாகும். அகாஇத் என்பது அகீதா என்பதன் பன்மை வடிவமாகும்.
- மனிதகுல வரலாறு நெடுகிலும் அகீதா என்பது ஒன்றாகவே இருந்துள்ளது.
- எவ்வாறாயினும் அரசியல் கெடுபிடிகள், விசுவாசிகளல்லாதோரின் (நாஸ்திகர்களின்) சிந்தனைகள், மனித சிந்தனை சக்தியின் எல்லைக் கடந்த போக்கு, ஒருவரின் தனிப்பட்ட மனோஇச்சையைப் பின்பற்றியொழுகுதல், இஸ்லாத்தின் எதிரிகளின் சூழ்ச்சிகள், மௌட்டீகத்தின் மீதான விசுவாசம் போன்றன இஸ்லாமிய அகீதாவின் புனிதத் தன்மை கெடுவதற்கான சில காரணங்களாக அமைந்தன.
- அகீதாவிற்கு எதிரான, பிழையான கோட்பாடுகளை முன்னிறுத்தி சில அகீதா பிரிவினர்கள் மனிதர்களைப் பிழையான பாதையில் அழைத்துச் சென்றனர். அவர்களுல் கவாரிஜ், கதிரிய்யா, ஜபரிய்யா, மு.ஃ.தஸிலா, முர்ஜிஆ போன்ற சிந்தனைப் பிரிவினர்கள் அடங்குவர்.
- நபி (ஸல்) அவர்களின் இறப்பிற்குப் பின்னர் ஸஹாபாக்கள் தமக்கு தலைமைத்துவம் வகிக்கக்கூடிய ஒரு புதிய தலைவரை தெரிவுசெய்ய வேண்டிய நிலைமைக்குறப்பட்டனர். இத் தலைவர் தெரிவே ஷீஆக்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.
- இவ்வாரான சந்தர்ப்பங்களில் தூய அகீதாவைப் பாதுகாப்பதற்காக வேண்டி சில இமாம்கள் மிக உறுதியாக முன்நின்றுள்ளார்கள். இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல், இமாம் அபுல் ஹஸன் அல் அ்அரீ, இமாம் அபூ மன்சூர் அல் மாத்ரூதீ மற்றும் இமாம் அபூ ஜ.ஃ.பர் அத்தஹாவீ போன்றோர் அவ்விமாம்களாவர்.
- இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் ‘நான் உயிர் வாழ்ந்து இஸ்லாம் மரணிப்பதைவிட நான் மரணித்து இஸ்லாம் உயிர் வாழ்வதே எனக்குச் சிறந்ததாகும்’ எனக்கூறி மு.ஃ.தஸிலாக்களின் சிந்தனையை எதிர்க்கக்கூடியவர்களாக இருந்தார்கள்.

# 2.அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ

- நபி (ஸல்) அவர்களும் அன்னாரது ஸஹாபாக்களும் கடைப்பிடித்த வாழ்க்கைப் பாதை அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்பதன் மூலம் நாடப்படுகின்றது.
- அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் சில அகீதா கோட்பாடுகள் வருமாறு:

**அல்லாஹ்**

- அல்லாஹ் தஆலாவே உலகங்களையும், அவற்றிலுள்ளவற்றையும் படைத்தான். அவனுக்கு ஆரம்பமோ முடிவோ இல்லை. அவன் யாவற்றின் மீதும் சக்தி படைத்தவன். அவன் பரிபூரணமானவன். அவன் அனைத்தையும் அறிந்தவன், அவன் நிரந்தரமானவன், அனைத்தையும் செவிமடுப்பவன், அனைத்தையும் பார்ப்பவன், வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் தகுதிபடைத்த ஏக வல்லவன். அவனுக்கு எத்தகைய உதவிகளும் அவசியமில்லை மேலும் அவனுக்கு எவ்வித தேவைகளும் இல்லை. அவன் யாருக்கும், எதற்கும் ஒப்பானவன் அல்ல. அவனுக்கு எவ்வித உருவமும் இல்லை. அவன் ஒன்றை நாடினால் அது நிகழ்ந்துவிடும். 'ரிஸ்க்' அல்லாஹு தஆலாவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அவனே நோய்களைக் குணப்படுத்துகின்றான். கவலைகளும் அவனாலேயே நீக்கப்படுகின்றன. மறுமை நாளில் உண்மை விசுவாசி அல்லாஹு தஆலாவை பார்க்ககூடிய மகத்தான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வான்.

**மலக்குமார்கள்.**

- அல்லாஹு தஆலா மலக்கமார்களை ஒளியால் படைத்தான். மலக்குமார்களின் எண்ணிக்கையை அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமேயாவான். அவர்களுக்கு பல்வேறுபட்ட பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவர்கள் அல்லாஹு தஆலாவிற்கு அணு அளவு கூட மாறு செய்ய மாட்டார்கள். அவனது கட்டளைகளை உடனே நிறைவேற்றுவார்கள். ஷ‘த்தானும் ஜின்களும் அல்லாஹ்வின் ஏனைய படைப்பினங்களாகும்.

**அல்குர்ஆன்**

- அல்லாஹு தஆலா ஆரம்ப காலத்திலிருந்து மனிதகுலத்திற்கு நேர்வழியைக்காட்டும் பொருட்டு பல திருமறைகளை இறக்கியருளியுள்ளான். அல்குர்ஆன் இறுதியாக இறக்கியருளப்பட்டதன் பின்னர் முன்னைய அனைத்து வேதங்களும் அம்மதங்களும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. அல்லாஹு தஆலா அல்குர்ஆனை பாதுகாக்கின்றான்.

**ரிஸாலத்**

- மனிதர்களுக்குச் சரியான வாழ்க்கைப் பாதையைக் காட்டும் முகமாக அல்லாஹு தஆலா பல நபிமார்களையும், ரசூல்மார்களையும் அனுப்பினான். அவர்கள் அனைவருக்கும் 'மு.ஃ.ஜிஸாத்' என்ற அற்புதங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. மேலும் அவர்கள் அல்லாஹு தஆலா எவற்றை மனிதர்களுக்க ஆகுமாக்கியுள்ளான், எவற்றைத் தடுத்துள்ளான் போன்றவற்றை மனிதர்களுக்கு கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் 'இஸ்மத்' என்ற 'பாவங்கள் செய்வதை விட்டும் பாதுகாப்பு' பெற்றவர்கள். நாம் எத்தகைய பிரிவினைகளும் இன்றி அனைத்து தூதர்கள் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும். அதேநேரம் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தூதர்களில் இறுதியானவர்கள் என்றும் அவருக்குப்பின்னர் எத்தகைய தூதர்களும் வரமாட்டார்கள் என்றும் உறுதியாக விசுவாசிக்க வேண்டும்.

**கியாமா**

- மரணத்திற்குப் பின்னரான ஒரு வாழ்வுன்டு அது கப்ரிலிருந்து ஆரம்பிக்கின்றது. கியாமத் நாளில் விசாரிக்கப்படுவது போன்ற கப்ரிலும் விசாரனை உண்டு என்ற விடயத்தில் எத்தகைய சந்தேகங்களும் இல்லை. ஸிறாத், மீஸான், சுவர்க்கம், நரகம் போன்ற அனைத்தும் உண்மையாகும் அவை அல்லாஹ் தஆலாவால் படைக்கப்பட்டுள்ளன.

**ஸஹாபாக்கள்**

- முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் உற்ற தோழர்களாவர்.
- இத்தோழர்களுள் உலகிலேயே சுவனத்தைக்கொண்டு நண்மாராயனம் கூறப்பட்டவர்களும் உள்ளனர். நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்கள் 'அஹ்லுல் பைத்' என அழைக்கப்படுகின்றனர். உம்மஹாத்துல் மு.ஃ.மினீன் (விசுவாசிகளின் தாய்மார்கள்) என அழைக்கப்படுகின்ற நபியவர்களின் சகல மனைவிமார்கள் நேசிக்கப்பட வேண்டியவர்கள், மரியாதைசெலுத்தப்பட வேண்டியவர்களாவர்.

**தீமையை செய்தவர்கள்**

- அல்லாஹு தஆலா நாடினால் மு.ஃ.மினாக இருக்கக்கூடிய பாவியை மன்னித்து அவனை சுவனத்திற்கு அனுப்புவான்.
- அல்லாஹு தஆலா நாடினால் அவனை நரகத்திற்கு அனுப்பி அவனை பாவங்களிலிருந்து தூய்மைசெய்த பின்னர் சுவனத்திற்குள் நுழையச்செய்வான்.

**வலிமார்கள் - இறைநேசர்கள்**

- வலிமார்கள் எனப்படுவோர் அல்லாஹு தஆலாவால் விரும்பப்படுகின்ற இறைபக்தி மிகுந்த மக்களாவர்.
- அவர்களால் சில அற்புதங்களை நிகழ்த்த முடியும். அவ்வற்புதங்கள் ‘கராமத்’ என்றழைக்கப்படும்.
- அவர்கள் எவ்வளவுதான் ஆன்மீக வாழ்வில் உயர்ந்தவர்களாக இருப்பினும் இஸ்லாத்தின் கட்டாய கடமைகளை செய்வதைவிட்டும் விதிவிலக்களிக்கப்பட மாட்டார்கள்.

# 3.அத்தவ்ஹீத்

- தவ்ஹீத் என்ற சொல்லின் கருத்து **'வஹ்ஹத'** என்ற மூலச்சொல்லில் இருந்து வருகின்றது. அதாவது **ஒன்று** என்பதாகும்.
- இஸ்லாத்தில் நாம் அனைவரும் அல்லாஹு தஆலா ஒருவனே உண்மையான இறைவன் என ஈமான் (விசுவாசம்) கொள்ள வேண்டும். நாம் அவனொருவனுக்கே அடிபணிந்து நடக்க வேண்டும். இதுவே 'தவ்ஹீத்' எனப்படும்.
- பின்வரும் முறையில் தவ்ஹீத் என்ற சொல்லை விளக்க முடியும்.
  1. அல்லாஹு தஆலாவே யாவற்றையும் படைத்தவன். அவனே யாவற்றிற்கும் சொந்தக்காரன். அவனே சகல விடயங்களையும் திட்டமிடுபவன், உலகை ஆட்சிசெய்பவன்.
  2. நாம் அவன் ஒருவனை மாத்திரமே வணங்க வேண்டும்.
  3. அல்லாஹு தஆலா பரிபூரணமானவன். எவ்வித குறை, நிரைகளற்றவன்.
- இஸ்லாத்தில் தவ்ஹீத் என்பது மிகப்பிரதானமானதாகும். பின்வரும் உண்மைகள் அதனையே தெளிவுபடுத்துகின்றன.
  1. அனைத்து நபிமார்களும் ரசூல்மார்களும் தவ்ஹீதை ஏற்றுக்கொண்டு அதன்பாலே ஏனைய மனிதர்களையும் அழைத்தார்கள் என்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.
  2. தவ்ஹீதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக அல்குர்ஆனின் பல சூராக்களின் அத்தியாயங்களில் அல்லாஹு தஆலா தவ்ஹீதைப் பற்றி குறிப்பிட்டுள்ளான்.
  3. சகல நற்கருமங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான அடிப்படை நிபந்தனையாக தவ்ஹீத் கானப்படுகின்றது.
  4. தவ்ஹீதை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு சுவனம் நுழைவது ஹராமாக்கப்பட்டுள்ளது. (தடுக்கப்பட்டுள்ளது)

## 4. ஈமானைப் பாதிக்கும் விடயங்கள்

பின்வரும் அம்சங்களின் ஒருவரின் ஈமானில் பாதிப்பை ஏற்றடுத்தக்கூடியனவாகும்.

1. ‘இல்ஹாத்’ அதாவது நாஸ்திகம்.

2. ‘குப்ர்’ - நிராகரிப்பு. நிராகரிப்பில் மூன்று வகைகள் உள்ளன
   - நம்பிக்கை சார்ந்த குப்ர்
   - சொல் சார்ந்த குப்ர்
   - நடத்தை சார்ந்த குப்ர்

3. ஷிர்க் - இணைவைத்தல். அதாவது அல்லாஹு தஆலாவுடன் இன்னொருவரை சேர்த்தல்.
   - ஷிர்க்கிலும் இரண்டு பிரிவுகள் உள்ளன.
     1. ஷிர்க்குல் அக்பர் - பெரிய ஷிர்க்
     2. ஷிர்க்குல் அஸ்கர் - சிரிய ஷிர்க்

4. ரித்தத் - ரித்தத் என்றால் ஒரு முஸ்லிம்இஸ்லாத்தின் பிணைப்பிலிருந்து வெளியேறக்கூடிய விடயங்களில் சொல்லாலோ செயலாலோ ஈடுபடுவதாகும்.
   - ரித்தத் செய்தவன் முர்தத் என்று அழைக்கப்படுவான்.

## 5. இறுதி நபித்துவம்.

- அல்லாஹுஃ தஆலா உலகிற்கு அனுப்பிய அவனது தூதர்களாகிய சகல நபிமார்கள் மீதும் ரஸூல்மார்கள் மீதும் நம்பிக்கை வைப்பது கட்டாயக்கடமையாகும்.
- அந்நபிமார்களிலும் ரஸூலமார்களிலும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே இறுதியானவர் என்றும் அவருக்குப் பின்னால் வேறொருவர் இறை தூதராக அனுப்பப்படமாட்டார்கள் என்றும் ஈமான்கொள்வது இஸ்லாத்தின் மிகப்பிரதானமான ஒரு நிபந்தனையாகும்.
- இவ்வாறு நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் நபித்துவத்தைப் பெற்றதாக வாதாடிய சில போலி நபிமார்கள் வருமாறு.
    1. அஸ்வதுல் அன்ஸி - இவன் யெமன் நாட்டைச் சேர்ந்தவனாவான். இவனை பைரூஸ் தைலமி என்ற ஸஹாபி கொலை செய்தார்கள்.
    2. முஸைலமதுல் கத்தாப் - இவன் நஜ்த் தேசத்தை சேர்ந்தவனாவான். இவன் வஹ்ஸீ பின் ஹர்ப் என்ற ஸஹாபி மூலம் யமாமா யுத்தத்தின் போது கொலை செய்யப்பட்டான்.
    3. ஸஜா - இவள் ஒரு பெண்ணாவாள். இவளது கணவனாகிய முஸைலமதுல் கத்தாப் கொலை செய்யப்பட்டதன் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினாள்.
    4. துலைஹா - இவர் இஸ்லாத்தைத் தழுவி பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்த நஹர்வான் யுத்தத்தின் போது உயிர்தியாகம் செய்தார்.

# 6. அல்கழா வல் கத்ர்

- கத்ர் என்பது அல்லாஹு தஆலாவால் ஏற்கனவே முன்திட்டமிடப்பட்டே சகல விடயங்களும் நிகழ்கின்றன என்பது பற்றிய புரிதல் ஆகும். இஸ்லாத்தின் நம்பிக்கை கோட்பாடுகளின் படி அல்லாஹு தஆலாவின் அறிவு (இல்ம்), அவனது ஆற்றல்கள் (குத்ரத்), அவனது நாட்டம் (இறாதத்) போன்றன கழா கத்ரின் ஒரு பகுதியாகும். அகிதா துறை அறிஞர்கள் கழா கத்ர் என்பது இலாஹிய்யாத்தை சார்ந்ததாகும் என்கிறார்கள். கழா கத்ர் நம்பிக்கை கோட்பாடுகளின் அடிப்படைகளுல் ஒன்றாகும். அவ வஹி போல் கருதப்பட வேண்டும்.
- இஸ்லாமிய வரலாற்றில் 'ஜஹரிய்யா', 'கதரிய்யா', 'மு.்.தஸிலா' போன்ற இஸ்லாமிய அகீதா சிந்தனைப் பிரிவினர்கள் நம்பிக்கை கோட்பாடுகள் (அகீதா) தொடர்பான விடயங்களில் தமது சுய சிந்தனையையும் சுய அறிவை பிரயோகித்ததன் காரணமாக அவர்கள் சரியான பாதையைவிட்டும் வழிதவறிச் சென்றார்கள். இவர்களுக்கு மத்தியில் கழா கத்ர் பற்றிய பல வித்தியாசமான புரிதல்கள் கானப்படுகின்றன. அவர்கள் மனிதர்களின் வெற்றியும் தோல்வியும் அவரவர்கள் பயன்படுத்தும் வழிமுறைகளைப் பொருத்தே என்று நம்புகிறார்கள். அதே நேரம் அனைத்து விடயங்களும் அல்லாஹு தஆலாவின் நாட்டப்படிதான் நடைபெறுகின்றது என்பதை மறுக்கின்றார்கள்.
- கழா கத்ரினை விளக்கும் போது மனிதனுக்கு எத்தகைய நாட்டசக்தியும் இல்லை எனக்கூறியவர்கள் சகல நல்ல விடயங்களும், கெட்ட விடயங்களும் அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்தே என வாதாடுகின்றார்கள். கழா கத்தர் தொடர்பான விடயத்தில் பின்வரும் இரண்டு யதார்த்தங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
    1. அனைத்து விடயங்களும் அல்லாஹு தஆலாவின் நாட்டத்தின் பிரகாரமே நடைபெறுகின்றன.
    2. அவ்வாறிருந்த போதிலும் மனிதனுக்கு பகுத்தறிவு வழங்கப்பட்டுள்ளது. அவ்விடயங்களில் அவன் வகைகூற வேண்டும்.

# 7.ஸகாத்

- இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுல் ஸகாத் பிரதான இடம் வகிக்கின்றது.
- ஸகாத்தின் முக்கியத்துவம் பற்றி அல் குர்ஆனும் ஹதீஸும் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன.
- ஸகாத்தின் நன்மைகள் எண்ணிலடங்காதவையாகும். இப்பயன்கள் சில பின்வருமாறு.
    1. ஒருவர் ஸகாத்தை வழங்கும் போது அவரது உள்ளம் சுத்திகரிக்கப்படுகின்றது. அவர் ஏனையவர்களின் பொறாமையிலிருந்து விடுதலைப் பெறுவதோடு, அவர் வறுமையிலிருந்தும் விலக்களிக்கப்படுவார்.
    2. ஸகாத் ஏழை எளியவர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் ஏற்படுத்தும்.
    3. அது அல்லாஹுத் தஆலாவிற்கு தொடர்ந்து நன்றியுள்ளவனாக இருக்கக்கூடிய பழக்கத்தை வழங்குபவனிடத்தில் ஏற்படுத்தும்.
    4. சமூகத்திற்கு மத்தியில் ஐக்கியமும் அன்பும் நிலைபெற வழிவகுக்கும்.
    5. அது சமூகத்திற்குள் சமநிலை நிலவ துணைசெய்கின்றது.

- கூட்டாக ஸகாத் கொடுப்பதன் நன்மைகள் சில வருமாறு:
    1. ஸகாத்தை வழங்கும் போது தனவந்தர்களால் மறதியாக ஸகாத் பெற தகுதிபடைத்த ஏழை எளியவர்கள் தவறவிடப்படுவது தடுக்கப்படுகின்றது.
    2. ஏழைகள் மீது கவனம் செலுத்தப்படாதது அல்லது அவர்களை காணாது விடப்படுவது முற்றாக விலக்கப்படுகிறது.
    3. சிறப்பான திட்டமிடப்பட்ட முயற்சியால் வறுமையை ஒழிக்க வழிசெய்யலாம்.
    4. ஸகாத் பெற தகுதிபடைத்த அனைவரும் பயன்பெறுவர்.
    5. சமூகத்தில் காணப்படுகின்ற கடுந்துயரங்களை களைவதில் ஆக்கபூர்வமாண முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

- ஸகாத்தை வழங்குவதற்கு ஒருவர்:
    1. முஸ்லிமாக இருக்க வேண்டும்.
    2. சுதந்திரவாலியாக இருக்க வேண்டும் (அடிமையல்லாது)
    3. சொத்துக்களுக்குச் சொந்தக்காரராக இருக்க வேண்டும். அவர் பருவ வயதையடையாத ஒருவரின் அல்லது இயலாத ஒருவரின் சொத்துக்களைப் பராமரிக்கக் கூடியவராக இருந்தால் அச்சந்தர்பத்தில் அது அவருடைய சொந்த சொத்தாக இல்லாதவிடத்தும் அவற்றிற்கு அவர் ஸகாத்தை வழங்க வேண்டும்.
    4. ஸகாத்தை வழங்கக்கூடிய ஒவ்வொன்றினதும் நிஸாப் அளவைப் பற்றிய அறிவு தேவை.
    5. 12 சந்திர மாதங்களை அவரது சொத்துக்கள் கடந்திருக்க வேண்டும். அதாவது 1 வருடம் பூராகவும் அவரது சொத்துக்கள் அவரது உடமையின் கீழ் இருக்க வேண்டும். பழ வகைகள் மற்றும் தானியங்களைப்

பொருத்தவரை அவற்றின் அறுவடையினைத் தொடர்ந்து அவற்றிற்கான ஸகாத்தை வழங்குவது கடமையாகின்றது.

- ஸகாதின் பர்ளுகள் இரண்டாகும்
    1. நிய்யத் - ஸகாத் வழங்குவதற்கான எண்ணம்.
    2. ஸகாத் பெறுவதற்குத் தகுதியான கூட்டத்தினருக்கு வழங்கப்படுதல்.

- ஸகாத் விதியாகும் பொருட்களும் அவற்றிற்கான நிஸாப் அளவுகளும்.

1. <u>விலங்குகள்</u>
    - பயனம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கால்நடைகளுக்கு ஸகாத் விதியாகாது.
        1. ஆடு - ஒவ்வொரு 40 ஆடுகளுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய ஒரு பெண் ஆடு.
            - ஒவ்வொரு 120 ஆடுகளுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய இரண்டு பெண் ஆடுகள்.
            - ஒவ்வொரு 200 ஆடுகளுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய மூன்று பெண் ஆடுகள்.
            - ஒவ்வொரு 400 ஆடுகளுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய நான்கு பெண் ஆடுகள்.

        2. கால்நடைகள்: - 30 காளை மாடுகளுக்கு 1 வருடம் பூர்த்தியாகிய ஒரு காளை மாடு.
            - 40 காளை மாடுகளுக்கு 2 வருடங்கள் பூர்த்தியாகிய 1 பசு.

        3. ஒட்டகங்கள்
            - 5 ஒட்டகங்களுக்கு 1 ஆடு
            - 20 ஒட்டகங்களுக்கு 4 ஆடுகள்
            - 25 ஒட்டகங்களுக்கு 1 வருடம் பூர்த்தியாகிய 1 பெண் ஒட்டகம்

2. <u>தானியங்கள்</u>
    - ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் அறுவடை செய்யப்பட்டால் அவ்விரு தடவைகளுக்கம் ஸகாத் வழங்கப்பட வேண்டும்.

- இரண்டு தாணிய வகைகளை இரண்டரக் கலந்து நிஸாப் அளவு கணிக்கப்பட முடியாது.
- ஒரே பயிரில் பல வகையான விளைச்சல்களின் நிஸாபைக் கணிக்கும் போது ஒன்றாக சேர்த்து கணிப்பிட முடியும்.

3. <u>பழங்கள் (பேரிச்சை, திராட்சை)</u>
   - விளைச்சல்களின் நிஸாபைப் போன்றதாகும்.

4. <u>தங்கமும் வெள்ளியும்</u>
   - அனைத்து வகையான ஆபரணங்கள், பாத்திரங்கள் போன்றன கணிப்பிடப்பட வேண்டும்.
   - பாவிக்கப்படக்கூடிய பொருட்களுக்கு ஸகாத் கடமையாகாது.
   - கலப்பாகா தங்கத்திற்கும் வெள்ளிக்கும் ஸகாத் கடமையாகும் போது தங்கத்தின் அல்லது வெள்ளியின் பாரத்திற்கே ஸகாத் கடமையாகும்.

5. <u>நாணயம்</u>
   - தங்கத்திற்கும் வெள்ளியிற்கும் கணிக்கப்பட்டது போன்றே இதற்கும் கணிக்கப்படும்.

6. <u>வியாபாரப் பொருட்கள்</u>
   - பணத்திற்கு கணிப்பிடப்பட்டது போன்று கணிக்கப்படும்.

- ஸகாத் பெறத் தகுதியானவர்கள்:
  1. பக்கீர் - பரம ஏழைகள்
  2. மிஸ்கீன் - வாழ்வாதாரத்தில் தேவையுள்ள ஏழைகள்
  3. ஆமில் - ஸகாத் சேகரிப்பில் ஈடுபடுவோர்
  4. முஅல்லபதுல் குலூப் - இஸ்லாத்தின் பால் உள்ளம் கவரப்பட்டவர்கள் ∴ புதிதாக இஸ்லாத்தை ஏற்றோர்
  5. அர் ரிகாப் - உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள். அதாவது எஜமான்களுக்கு அடிமைகளை சுதந்திரமாக விடுவதற்குறிய பணம் கொடுக்கப்பட்டால் விடுதலை செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்ட அடிமைகள்.
  6. காரிமூன்- தமது கடன் சுமைகளை செலுத்து முடியாது க்‘டப்படும் கடனாளிகள்.
  7. பீ ஸபீலில்லாஹ் - அல்லாஹ்வின் பாதையில் போராடக்கூடிய போராளிகள்.
  8. இப்னு ஸபீல் - போதியளவு பணம் இல்லாத பிரயாணிகள்.

- ஸகாத் பெற தகுதியற்ற சில பிரிவினர்கள்.
    1. போதிய அளவு செல்வத்தைப் பெற்றவர்கள்.
    2. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்கள்
    3. தனது செலவீனத்தின் கீழ் தங்கிவாழ்பவர்கள் (குடும்பத்தினர்)
    4. முஸ்லிம் அல்லாதோர்.

# 8. நோன்பின் முக்கியத்துவம்

- நோன்பு என்பதன் அறபு வடிவம் ‘ஸவ்ம்’ என்பதாகும்.
- இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுல் ஒன்றாக நோன்பு உள்ளது.
- நோன்பு நோற்பதினால் கிடைக்கப்பெறுகின்ற பயன்கள் சில வருமாறு:

1. நோன்பு நாளை மறுமையில் அல்லாஹு தஆலாவிடத்தில் நோன்பாளிக்கா வேண்டி பரிந்து பேசும்.
2. சுவனத்திற்குள் நுழையவென தனி வாயல் நோன்பாளிக்குக் கிடைக்கும்.
3. ஆன்மீக வளர்ச்சி ஏற்படும்.
4. அல்லாஹுத் தஆலாவின் வரம்புகளை அடையாளப்படுத்துகிறது (ஹராம், ஹலால்)
5. தேகாரோக்கியமான நல்வாழ்வு கிட்டுகின்றது.

# 9. ஹஜ்ஜும் உம்றாவும்

- ஹஜ் இஸ்லாத்தின் கடமைகளுல் ஐந்தாவதாகும்
- இது துல் ஹஜ் மாதத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு வகையான வணக்கமாகும்.

ஹஜ் கடமையை மேற்கொள்ளக்கூடியவர் கட்டாயம்:

1. முஸ்லிமாக இருக்க வேண்டும்.
2. பருவ வயதை அடைந்தவராக இருக்க வேண்டும்.
3. புத்தித்தெளிவுள்ளவராக இருக்க வேண்டும்.
4. சுதந்திரமானவனாக இருக்க வேண்டும்.
5. ஹஜ் கடமைக்கான செலவீனங்களை மேற்கொள்ள முடியுமானவராக இருக்க வேண்டும்.
6. ஹஜ் கடமையை மேற்கொள்வதற்கான உடலியல் ரீதியாக சக்திபடைத்தவராக இருக்க வேண்டும்.
7. ஹஜ் இல் குறித்த நாட்களைக் கழிப்பதற்கு முடியுமானவராக இருக்க வேண்டும்.

**ஹஜ்ஜின் அர்கான்கள்**

1. ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்தலும் இஹ்ராம் அணிதலும்.
2. துல் ஹஜ் 9ம் தினம் அறபாவில் தரித்தல்.
3. தவாபுல் இபாழாவை மேற்கொள்ளுதல்.
4. ஸஈ மேற்கொள்ளுதல்.
5. தலை முடியை சிரைத்தல்.
6. மேற்சொன்ன விடயங்களை வரிசைக்கிரமமாக செய்தல்

- ஏனைய வணக்க வழிபாடுகளுக்கு போலஎள்ளாது ஹஜ் கடமைக்கு வாஜிப்களும் பர்ளுகளும் கானப்படுகின்றன. பர்ளுகளுல் ஏதாவது ஒன்று தவறவிடப்பட்டால் முழு ஹஜ்ஜும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- எனினும் ஒரு வாஜிப் தவறவிடப்பட்டால் அதனை ஈடு செய்ய முடியும். இது பித்யா என அழைக்கப்படும்.
- ஒரு ஆட்டை அறுத்து குர்பானி கொடுத்தல், ஹரம் ‘ரீபில் 6 பேருக்கு உணவளித்தல், 3 நாட்கள் நோன்பு பிடித்தல் போன்றவை பிரதியீட்டுக் கருமங்களாக உள்ளன.

**ஹஜ்ஜின் வாஜிபுகள்**

1. மீக்காத்தில் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்தல். (இலங்கையிலிருந்து பயனமாகக்கூடிய ஹாஜிகளுக்குறிய மீகாத் யலம்லம் ஆகும்)
2. 10 ம் நாள் இரவை முஸ்தலிபாவில் கழித்தல்.
3. 11ம், 12ம், 13ம் தினங்களை (அய்யாமுத் த்‘ரீக்) மினாவில் கழித்தல்.
4. 10ம் நாள் ஜம்ரதுல் அகபாவில் கற்களை எறிதல்.
5. 11ம், 12ம், 13ம் தினங்களில் அகபா, வுஸ்தா, ஊலா என்று அழைக்கப்படுகின்ற ஜம்ராக்களில் மாலை வேலையில் 7 கற்கள் வீதம் எறிதல்.
6. தவாபுல் விதாவை செய்தல்.

**ஹஜ் உம்ராவின் ஸுன்னத்துக்கள்.**

1. நிய்யத் வைத்தல், இஹ்ராம் அணிதல், அறபாவில் தரித்தல், மினாவில் தரித்தல் மற்றும் கல் எறிதல் போன்றவற்றிற்கு முன்னர் குளித்தல்.
2. நிய்யத் வைப்பதற்கு முன் வாசனைகள் பூசுதல்.
3. நிய்யத்தை சத்தமாக மொழிதல்.
4. தல்பியாவை மொழிதல்
5. ஹரம் ‘ரீபினுள் நுழையும் போது தவாபுல் குதூம் ஐ நிறைவேற்றல்.
6. 9ம் நாள் இரவை மினாவில் கழித்தல்.
7. குறித்த இடங்களுக்குரிய துஆக்களை ஓதுதல்.
8. ஸம் ஸம் நீரைப் பருகுதல்.

**ஹஜ் மற்றும் உம்ராவின் போது தடுக்கப்பட்டுள்ள (ஹராமாக்கப்பட்டுள்ள) விடயங்கள்.**

1. ஆண்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல்.
2. இஹ்ராம் ஆடையுடன் இருக்கும் போது வாசனைத் திரவியங்கள் பூசுதல்.
3. தாடிக்கோ தலைக்கோ எண்ணெய் பூசுதல்.
4. உடம்பில் உள்ள மயிர்களை நீக்குதல், நகத்தை வெட்டுதல்.
5. திருமண பேச்சுவார்த்தை மேற்கொள்ளல் அல்லது திருமண பந்தத்தில் இணைதல்.
6. ஏதாவது பாலியல் சார் நடவடிக்கைகள்.
7. ஆண்கள் தலையை மூடுதல்.
8. பெண்கள் முகத்தை மறைத்தல்.
9. வேட்டையாடுதல்.
10. ஹரமிற்குட்பட்ட பகுதியில் உள்ள மரங்களை அல்லது தாவரங்களை வெட்டுதல்.

- மேற்கூறப்பட்ட விடயங்களில் ஏதாவதொன்று நிகழ்ந்தால் அதற்காக வேண்டி கப்பாராஹ் கொடுக்க வேண்டும்.
- பாலியல் சார் நடவடிக்கைகள் ஹஜ்ஜின் போது நிகழ்ந்தால் அதற்காக வேண்டி ஒரு ஒட்டகம் அல்லது காளை மாடு அல்லது ஆடு குர்பான் கொடுக்கப்பட வேண்டும். அத்தோடு எவ்வித தாமதமுமின்றி கலா பூரணப்படுத்தப்பட வேண்டும்.

**ஹஜ்ஜும் உம்றாவும் மூன்று வழிகளில் நிறைவேற்றப்பட முடியும்.**

அது நிய்யத் வைக்கும் முறைக்கேற்ப:

1. இப்றாத் - ஹஜ்ஜுக்காக மாத்திர் நிய்யத் வைத்தல்.
2. அல் கிரான் - ஹஜ்ஜுக்காகவும் உம்றாக்காகவும் சேர்த்து நிய்யத் வைத்தல்
3. தமத்து.. - ஹஜ் தனியாகவும் உம்றா தனியாகவும் செய்வதாக நிய்யத் வைத்தல்.

**உம்றாவை நிறைவேற்றும் வழிமுறை**

- ஒரு முஸ்லிம் உம்றா செய்வதற்காக எண்ணினால், இஹ்ராத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள இடத்தில் அதனை அணிய வேண்டும்.
- இஹ்ராம் அணியும் முன்னர் அவர் கட்டாயம் நகங்களை வெட்டி தலை முடியைக் கத்தரித்து பின் குளித்து சுத்தமாகி நறுமணங்களைப் பூச வேண்டும். இதன் பின்னர் உம்றாவிற்காக நிய்யத்து வைக்க வேண்டும்.
- இரண்டு ரக்அத்துக்கள் சுன்னத்து தொழுதல்.
- ஆண்கள் தைக்கப்படாத வெள்ளை நிற ஆடைகளை அணிவர். பெண்களுக்கு ‘ரீஆ அனுமதித்த ஆடைகளை அணிய முடியும்.
- க..பாவை வந்தடைந்ததும் ஹஜருல் அஸ்வத் கல் உள்ள இடத்திலிருந்து க..பாவை 7 தடவை வலம் வருதல்.
- பின்னர் மகாமு இப்றாஹீமில் 2 ரக்அத் சுன்னத் தொழுகை தொழுதல். ஸம் ஸம் நீர் அருந்துதல்.
- அதனைத் தொடர்ந்து ஸபா மர்வா மலைகளுக்கிடையில் 7 தடவைகள் ஸ..யு செய்தல். இதன் போது தஸ்பீஹ், தஹ்மீத், தஹ்லீல் சொல்லுதல்.
- ஸ..யு செய்தபின்னர் முடியை சிரைக்க வேண்டும். இதனோடு உம்றா முழுமையடைகிறது.

**இஹ்ராமுடன் இருக்கும் போது ஆண்களுக்கும், பெண்களுக்கும் தடை செய்யப்பட்ட விடயங்கள்.**

- முடியையோ நகத்தையோ வெட்டுதல்.
- வேட்டையாடுதல்.
- திருமண பேச்சுவார்த்தையில் ஈடுபடல்.
- வாசணைத்திரவியங்கள் பூசுதல்.
- பெண்கள் முகத்திறை அணிவதோ அல்லது கையுறைகள் அணிவதோ தடை செய்யப்பட்டுள்ளது.
- ஆண்கள் தொப்பி அணிவது தடை செய்யப்பட்டுள்ளது.

**ஹஜ் கடமையை நிறைவேற்றும் முறை:**

1. தவாபுல் குதூம் ஐ மேற்கொள்ளுதல்.
2. ஸபா மர்வா மலைத்தொடர்களுக்கிடையில் தொங்கோட்டத்தில் ஈடுபடல் (ஸ.்.யு செய்தல்)
3. மினாக்குச் செல்லுதல்.
4. அறபாவில் தரித்தல்.
5. முஸ்தலிபாவிற்குச் சென்று அங்கு இரவில் தங்குதல்.
6. ஜம்ரதுல் அகபாவில் கல்லெரிதல்.
7. தவாபுல் இபாழாவை செய்தல் (வலம் வருதல்)
8. மினாவிற்குத் திரும்புதல்.
9. பிரியாவிடைத் தவாபை மேற்கொள்ளுதல்.

# 10.இஸ்லாத்தின் புனிதஸ்தலங்கள்.

## 1. க.்.பா

- அல்லாஹு தஆலாவை வணங்குவதற்காக கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல்.
- முதலாவதாக இதனை ஆதம் (அலை) அவர்கள் கட்டினார்கள். இவருக்கு முன்னர் மலக்குமார்கள் இதனைக் கட்டியதாக ஒரு நம்பிக்கை உண்டு.
- நபி நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பிரலயத்தில் க.்.பா பாதிக்கப்பட்டதன் பின்னர், இப்றாஹீம் (அலை) அவர்களால் புணர்நிர்மாணம் செய்யப்பட்டது.
- சகல முஸ்லிம்களும் க.்.பாவை நோக்கி தொழ வேண்டும் என்பது நபி (ஸல்) அவர்களின் ஆசையாக இருந்தது.
- ஹிஜ்ரி 8 ம் ஆண்டு மக்கா வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் க.்.பாவிலிருந்த அனைத்து சிலைகளையும் தகர்த்து சுத்தம் செய்து அல்லாஹு தஆலா ஒருவன் மாத்திரம் வணங்கப்படக்கூடிய வணக்கஸ்தலமாக மாற்றினார்கள்.

## 2. மஸ்ஜிதுல் அக்ஸா

- மஸ்ஜிதுல் அக்ஸா பலஸ்தீனத்தில் அமைந்துள்ளது.
- இம் மஸ்ஜில் ஆதம் (அலை) அவர்களால் கட்டப்பட்டது. பிறபட்ட காலத்தில் இது சேதமுற்ற பின் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் மீள் புணர்நிர்மானம் செய்தார்கள்.
- கி.பி. 620 ம் ஆண்டு நபி (ஸல்) அவர்கள் இப் பள்ளிவாசலுக்கு மி.்.றாஜ் சென்றார்கள். அவர் மக்காவிலிருந்து இங்கு மி.்.றாஜ் பயனத்தை மேற்கொண்ட போது இப்பள்ளிவாசலில் பல முன்னைய நபிமார்கள் ஒன்று சேர்ந்திருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் நபி (ஸல்) அவர்கள் இமாமத் செய்து தொழுகை நடாத்தினார்கள். இங்கிருந்து நபி (ஸல்) அவர்கள் சித்ரதுல் முன்தஹாவிற்குப் பயனமானார்கள். அதன் போது அல்லாஹு தஆலாவால் ஐவேளைத் தொழுகையை அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டதுன், தொழுகையின் கிப்லாவாக இப்பள்ளிவாசலே திகழ்ந்தது. மஸ்ஜிதுல் ஹறாமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு நபியவர்கள் மேற்கொண்ட விண்ணுலகப் பயனம் இஸ்ரா என்றழைக்கப்படுகின்றது.

## 3. மஸ்ஜிதுன் நபவி

- கி.பி. 622 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி நபி (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வறாவிற்கு வந்து அங்கே மஸ்ஜிதுன் நபவியை கட்டினார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிதுன் நபவி வெறும் வணக்க வழிபாட்டிற்குறிய இடமாக இருக்கவில்லை. மாறாக அது தூய அறிவைப் பரப்பும் பாடசாலையாகவும், மனிதர்களின் அன்றாடவாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு கூறும் நீதிமன்றமாகவும், ஸதகாவையும், ஸகாத்தையும் சேகரித்து ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளிக்கம் திறைச்சேரியாகவும், யுத்த சந்தர்ப்பங்களின் போது யுத்த வியூகங்களை வகுக்கும் கேந்திரஸ்தலமாகவும் இன்னோரன்ன பல காத்திரமான சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் திகழ்ந்தது.
- மஸ்ஜிதுல் ஹராமில் மேற்கொள்ளப்படும் ஒரு தொழுகை, பிற இடங்களில் மேற்கொள்ளப்படும் 100,000 தொழுகைகளுக்கு சமமாகும். மஸ்ஜிதுன் நபவியில் மேற்கொள்ளப்படும் ஒரு தொழுகையானது 1000 தொழுகைகளுக்குச் சமனாகும். மஸ்ஜிதுல் அக்ஸாவில் மேற்கொள்ளப்படும் ஒரு தொழுகையானது 500 தொழுகைகளுக்கு சமனாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

# 11.நற்பண்புகள் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டம்.

- அறபு மொழியில் நற்பண்புகள் ஆதாப், அக்லாக், ஸுலுக் என்றழைக்கப்படுகின்றன்

**நற்பண்புகளின் முக்கியத்துவம்.**

- இஸ்லாத்தின் பார்வையில் நற்பண்பாடுகளுடன் வாழ்வது மகத்தான இபாதத்தாக உள்ளது. பின்வரும் நபிமொழி இக் கூற்றை வலுப்படுத்துகின்றது. 'நற்பண்பாடுகளை விட மீஸானை கனதியாக்கக்கூடிய வேறொன்றும் இல்லை'. 'நிச்சயமாக அல்லாஹு தஆலா கடுமையாகப் பேசுபவனையும், கெட்ட வார்த்தைகளைப் உபயோகிப்பவனையும் வெறுக்கின்றான்'. 'தொழுகை நோன்பு மற்றும் ஏனைய இபாதத்களை செய்பவர்களை விட நற்பண்பாடுகளை வாழ்வில் எடுத்தியம்புபவன் உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்றுக்கொள்கின்றான்'. 'கெட்ட நடத்தைகளையுடையவன் நரகத்தினுல் தூக்கியெரியப்படுவான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அஹ்மத்)

இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ள சில நற்பண்புகள்.

- பொறுமை
- வீரம், மனஉறுதி
- கட்டுப்படுதல், கீழ்படிதல்
- மன்னிக்கும் மனப்பான்மை

## 12.சிறந்த இஸ்லாமிய நற்பண்பாடுகளைக் கட்டியெழுப்புதல்.

- அறபு மொழியில் ஒரு மனிதனின் புறத்தோற்றம் கல்க் என்றும் அவனது நடத்தை குலுக் என்றும் வழங்கப்படுகின்றது.

**பின்வருபவை சில நற்பண்பாடுகளாகும், நன்நடத்தைகளாகும்.**

- பெறுமதிமிக்க நற்கிரிகைகளை வாழ்த்துதல்.
- நாகரீகமற்ற செயற்பாடுகள், நடத்தைகளைவிட்டும் ஒதுங்கியிருத்தல்.
- மரியாதையற்ற இடம், பொருட்களை விட்டு ஒதுங்கியிருத்தல்.

எவ்வாறு நற்பண்பாடுகளையும் நன்நடத்தைகளையும் வளர்த்துக்கொள்ள முடியும்.?

- தொழுகையில் ஈடுபடல் - எவனொருவன் பயபக்தியுடன் தொழுகையில் தொடர்ந்து ஈடுபடுகின்றானோ அது அவனது உள்ளத்தில் தக்வாவையும், அல்லாஹ்வின்பாலான நெருக்கத்தையும் ஏற்படுத்தும்.
- ஸகாத் - ஸகாத்தை வழங்குபவர் ஏழைஎளியவர்கள் மீது அன்பு கருனை பாசம் வைக்கக்கூடியவராக மாறுவார். இதனால் அவர் ஏழைகளுக்க எப்பொழுதும் உதவும் மனப்பான்மையைப் பெறுவார்.
- நோன்பு - நோன்பை உரிய முறையில் பிடிப்பதன் மூலம் அது அவனின் ஆசை விருப்பு வெறுப்பு மற்றும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலைக் வழங்கும். இதன் மூலம் சிறந்த பண்புகளாகிய தக்வா, பொறுமை மற்றும் தியாகம் போன்றவை அவனில் அபிவிருத்தியடையும்.
- ஹஜ் - இது அல்லாஹ் ஒருவனின் திருப்பொருத்தத்தை மாத்திரம் இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் தியாக நற்கிரியை ஆகும். இக் கிரியை மூலம் ஒருவர் எவ்வாறெல்லாம் தியாகம் செய்ய முடியும் என்ற பயிற்சியையும் அவருக்கு வரலாற்றிலிருந்து சிறந்த படிப்பினைகளையும் கற்றுக்கொடுக்கின்றது. இக்கிரியை இதற்கும் மேலாக பல்வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த மனிதர்களை சந்திப்பதற்கான வாய்ப்பையும் கொடுக்கின்றது. இதனால் அவர்களுக்கு மத்தியில் சகோதரத்துவம், சமத்துவம், சகிப்புத்தன்மை, ஒருவரையொருவர் பரஸ்பரம் அறிமுகமாதல் போன்ற உயர் பண்பாடுகளைப் பெறவும் வாய்ப்பளிக்கின்றது.

# 13.ஆன்மீக வளர்ச்சிக்கான வழிகள்.

‘மனித உடலில் ஒரு சதைப்பிண்டம் உள்ளது. அது சீராக இருந்தால் முழு உடலுமே சீரடைந்துவிடும். அது சீர்கெட்டால் முழு உடலுமே சீர் கெட்டுவிடும். அது தான் உள்ளம்.’ - நபி (ஸல்)

1. அஸ்ஸப்ர்.
    - ஸப்ர் என்பது பொறுமையைக் குறிக்கின்றது.
    - அது கெட்ட நடத்தையை வெளிக்காட்டுவதை விட்டும் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றது.
    - அடியார்கள் பல்வேறு வழிமுறைகளில் சோதிக்கப்படுவார்கள். அவர்களுல் பொறுமையாளர்களே இறுதியில் வெற்றிபெறுவர்கள்

2. அத்தவக்குல்.
    - தவக்குல் என்றால் ஒப்படைத்தல், நம்பிக்கைவைத்தல் போன்ற கருத்துக்களை வழங்குகின்றது. இது அல்லாஹ்ு தஆலா மீதான ஆழ்ந்த விசுவாசத்தின் பிரதிபலனாகும்.
    - இஸ்லாத்தின் பார்வையில் எமது சகல கருமங்களினதும் முடிவுகள் அல்லாஹ்ு தஆலாவிமே ஒப்படைக்கப்பட்டிருக்கும். இதுவே தவக்குலாகும்.
    - இரண்டு விடயங்களுக்காகவேண்டி ஒரு மு∴மின் சகல விடயங்களையும் அல்லாஹ்ு தஆலாவிடமே ஒப்படைத்துப் பொறுப்புச்சாட்டுவான் தவக்குல் வைப்பான்.
        - (சபப்கள்) காரண காரியங்கள் யாவும் அல்லாஹ்ு தஆலாவின் திட்டமிடலாகவே கானப்படுகின்றன. அல்லாஹ்ு தஆலா ஒன்றைத்திட்டமிடவில்லை என்றால் அவ்விடயத்தில் ஒரு மு∴மின் எதையும் அடைந்துக்கொள்ள மாட்டான்.
        - ஈருலகிலும் கிடைக்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் அல்லாஹ் ஒருவனினிடமிருந்தேயாகும் என்ற நம்பிக்கை.

3. அல் ம∴ரிபா
    - ம∴ரிபா என்பது அல்லாஹ் தஆலா பற்றிய அறிவாகும்.
    - ஆன்மீகப் பரிபாசையில் கூறுவதாயின் அல்லாஹ்ு தஆலாவை உங்கள் சொந்தக்கண்களால் பார்த்து மிகுந்த பரவசத்தையும் ஆனந்தத்தையும் உணர்வதைக் குறிக்கின்றது.
    - ஒருவன் ம∴ரிபாவை துல்லியமாக உணர்ந்தால் அல்லாஹ்ு தஆலாவின் புரத்திலிருந்து வருகின்ற க்ஷ்டம் கவலைகளையும் அவன் மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொள்வான்.

- அதே நேரம் அம்மனிதன் தன் முழுமனதுடன் அல்லாஹ்வின் விடயத்தில் ஈடுபாடுடையவனாக இருப்பான்.

4. ரிழா
   - அல்லாஹ்வின் திட்டமிடலை முழுமனதோடு ஏற்று அதில் திருப்தியுறுதல் ரிழா என அழைக்கப்படும்.
   - இந்தவகையில் அம் மு.ஃ.மின் அல்லாஹ்வை நெருங்குவான்.
   - மேற்கூறிய ஒவ்வொன்றும் மற்றையதுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டனவாகும். இவை அனைத்து மனிதனின் உள்ளத்தை சுத்திகரித்து தூய்மைப்படுத்துகின்றன. இவ்வாறு சுத்திகரிப்புச் செய்யப்பட்ட உள்ளமே கல்புன் சலீம் என்றழைக்கப்படுகின்றது

# 14.அல்குர்ஆன்

- இஸ்லாத்தின் முதலாவது சட்ட மூலாதாரமாக அல்குர்ஆன் திகழ்கின்றது. அல்குர்ஆனில் எமது ஒரே இறைவன் அல்லாஹு தஆலாவால் விதந்துரைக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் நபி (ஸல்) அவர்களின் காலம்தொட்டு மறுமை நாள் வரை உள்ள எல்லா காலத்திக்கும், எல்லா மனிதர்களுக்கும் விதியாகக்கூடிய சட்டதிட்டங்களாகும்.
- ரிஸாலத் என்றால் என்ன?
  அல்லாஹு தஆலாவால் ரசூல்மார்களுக்கு காலத்திற்கு காலம் குறித்த காலப்பகுதியில் உள்ள மனிதர்களுக்கு பொருந்தும் வகையில் இறக்கியருளப்பட்ட சட்டங்களாகும்.
- அல்குர்ஆனில் இரண்டு வகையான சட்ட அமைப்புக்கள் காணப்படுகின்றன. ஒன்று நேரடியான தீர்ப்பை துள்ளியமாக கூறும் சட்ட வசனங்கள். அடுத்தது சில பிரச்சினைகளுக்குறிய அடிப்படைகளை மாத்திரம் தெளிவுபடுத்துகின்ற சட்ட வனங்கள். இவற்றின் துணைகொண்டே இறுதி முடிவுகளுக்கு வர வேண்டிய தேவை இருக்கும். இவ்விரண்டாம் வகை வசனங்கள் இஜ்திஹாதிற்குரிய வாயிலைத் திறக்கின்றன.
- மனிதர்களின் மனோபாவம் அறியும் ஆற்றல், திறமைப் போன்றவற்றை அடிப்படையகக்கொண்டே நபிமார்களும் ரசூல்மார்களும் அவர்களது மு.ஃ.ஜிஸாக்களை காட்டினார்கள். மாயாஜால மந்திரங்களும் சூனியமும் நிலைபெற்றிறுந்த சமூகத்தினறின் மத்தியில் மூஸா (அலை) அவர்கள் தமது அற்புதத்தை நிகழ்த்திக்காட்டினார்கள். அதேநேரம் மருத்துவமும் நோய் நிவாரண உத்திகளும் நிலைப்பெற்றிருந்த மக்கட்சமூகத்தினரின் மத்தியில் ஈஸா (அலை) அவர்கள் தமது அற்புதத்தை நிகழ்த்திக்காட்டினார்கள். அறபு மொழிப்புலமையும் கவித்துவமும் மேலோங்கிய காலத்திலே நபி (ஸல்) அவர்கள் தமது அற்புதமாக அல்குர்ஆனை முன்வைத்து காபிர்களைத் திணரடித்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு முன்னைய நபிமார்களும் ரசூல்மார்களும் காட்டிய அற்புதங்கள் அவ்வக்காலத்தின் நிறைவோடு அல்லது அந் நபிமார்களின் ரசூல்மார்களின் வபாத்தோடு அழிந்துவிட்டன. எனினும் நபி (ஸல்) அவர்கள் முன்வைத்த அற்புதமாகிய அல்குர்ஆன் மறுமை வரை நிலைத்ததிருக்கும் அற்புதமாகக் காணப்படுகின்றது.
- இமாம் ஸமக்'ரி அல்குர்ஆனுக்கு அல் க்"ாப் என்ற விளக்கவுரை புத்தகத்தை எழுதியுள்ளார்கள்.
- அல்குர்ஆன் அறிவு ஆராய்ச்சியின் பால் மனிதனைத் தூண்டுகிறது. இதனாலேயே கடந்த 50 வருடகாலமாக நவீன தொழிநுட்பசாதனங்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பவர் அல்குர்ஆனில் தான் கண்டுக்கொண்ட அற்புததங்களினால் வாயடைத்துப்போனார்.

# 15.அஸ்ஸுன்னா

- நபி (ஸல்) அவர்களின் சொல் செயல் அங்கீகாரம் பழக்கவழக்கங்கள் போன்றன ஸுன்னா அல்லது ஹதீஸ் என அழைக்கப்படுகின்றன. ஸுன்னாவானது வஹீ கைரு மத்லூ (ஓதிக்காண்பிக்கப்படாத வஹி) எனப்படுகின்றது.
- அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள சகல விடயங்களும் நடைமுறையாக நபியவர்களின் ஸுன்னாவில் காட்டப்பட்டுள்ளன.
- அல்குர்ஆனில் எவ்விடயம் பற்றி பேசப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக விரிவாக சுன்னாவில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும்.
- கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலத்திலேயே ஸுன்னா தொகுக்கப்பட்டு நூலுப்படுத்தப்பட்டன. கலீபாவின் அறிவுறுத்தலின் பிரகாரம் இமாம் ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரி (ரஹ்) அவர்கள் நபியவர்களின் ஸுன்னாவை ஒன்றுதிரட்டினார்கள். எனினும் அவரால் அதனை முழுமைப்படுத்திக்கொள்ள முடியவில்லை. தாபிஈன்களது காலத்தில் ஹதீஸை படிப்பதற்கான தனி நிலையங்கள் அமைக்கப்பட்டன.

ஹதீஸ்துறையில் எழுதப்பட்ட ஆதாரப்பூர்வமாண 6 ஹதீஸ் கிரந்தங்கள் (குதுபு ஸிஹாஹுஸ் ஸித்தா)

| அறிமுகமாகிய பெயர் | பெயர் | தந்தையின் பெயர் | பிறந்த இடம் | பிறப்பு (ஹிஜ்ரி) | மரணம் (ஹிஜ்ரி) | கிரந்தம் |
|---|---|---|---|---|---|---|
| இமாம் புகாரி | முஹம்மத் | இஸ்மைல் | புகாரா | 194 | 256 | ஸஹீஹுல் புகாரி |
| இமாம் முஸ்லிம் | முஸ்லிம் | ஹஜ்ஜாஜ் | நைஸ ாபூர் | 204 | 261 | ஸஹீஹ் முஸ்லிம் |
| இமாம் அபூதாவுத் | ஸுலைமா ன் | அ்அஸ் | சஜஸ் தான் | 201 | 275 | ஸுனன் அபீ தாவுத் |
| இமாம் திர்மிதி | முஹம்மத் | ஈஸா | திர்மித் | 209 | 279 | ஜாமிஉத் திர்மிதி |
| இமாம் நஸாஈ | அஹ்மத் | ுஐப் | நஸா | 215 | 303 | ஸுனன் நஸாஈ |
| இமாம் இப்னுமாஜா | முஹம்மத் | யஸீத் | கஸ்வி ன் | 209 | 273 | ஸுனன் இப்னி மாஜாஹ் |

## 16.இஜ்திஹாத்.

- ஏதாவது ஒரு புதிய மார்க்ப்பிரச்சினைத் தோன்றும் போது, அது பற்றிய தெளிவான, நேரடியான தீர்ப்பு இஸ்லாத்தின் முதல்தர சட்ட மூலாதாரங்களாகிய அல்குர்ஆனிலும ஸுன்னாவிலும் கிடைக்கப்பெறாதவிடத்து அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் ஆழ்ந்த புலமைப்பெற்ற மார்க்க சட்ட அறிஞர்களால் அப்பிரச்சினைப் பற்றி அல்குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் தீர்ப்பைத் தேடிப்பெறுவதே இஜ்திஹாத் என்றழைக்கப்படுகின்றது. இது இஸ்லாமிய சட்டவாக்கக்கலையின் இரண்டாம்தர மூலாதாரமாகக் காணப்படுகின்றது.
- உலுல் அம்ர் என்றழைக்கப்படுகின்ற, இஜ்திஹாத் செய்யக்கூடிய தகமைப்பெற்ற அறிஞர்கள் முஜ்தஹித்கள் எனப்படுகின்றனர்.
- இஸ்லாமிய சமூதாயத்தில் இஜ்திஹாத் செய்யக்கூடிய தகமைப்பெற்ற அறிஞர்கள் இஜ்திஹாத் செய்வது அவர்களது பொறுப்பாகும்.

## 17.பிக்ஹ்

- ‘அல்லாஹு தஆலா யாருக்கு நலவை நாடுகின்றானோ அவனுக்கு மார்க்கத்தில் ஆழ்ந்த புலமையை வழங்குவான்’ (புகாரி, முஸ்லிம்)
- பிக்ஹ் முதலாமிடத்தைப் பெறுமளவிற்கு முக்கியத்துவமிக்கதொன்றாகும்.
- பிக்ஹ் என்ற சொல்லின் கருத்து இஸ்லாமிய ‘ரீஆவில் தெளிவு பெறுதல் என்பதாகும்.
- பிக்ஹ்கலையின் பொற்காலமாக தபஉத்தாபிஈன்களினது காலம் திகழ்கின்றது.
- இஜ்திஹாத் மூலம் பெறப்பட்ட சட்டங்கள் பிற்காலத்தில் ஒன்றுதிரட்டப்பட்டு வெளியிடப்பட்டன.
- இச்செயன்முறையே பிற்கால மத்ஹப்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவியது.
- வரலாறு நெடுகிலும் பல்வேறு காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட மத்ஹப்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.
- மத்ஹப்களை உருவாக்கிய இமாம்களின் முயற்சியின் மூலம் மத்ஹப்களைப் பின்பற்றக்கூடிய முகல்லித்களுக்கு இஸ்லாத்தைப் பின்பற்றுவது இலகுவாக்கப்பட்டது.

**இமாம் அபூஹனீபா (ரஹ்) ஹிஜ்ரி 80-150**

- கூபாவில் பிறந்தார்கள்
- இவருக்கு 'இமாமுல் அஃழம்' என்ற சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.
- இவர் ஹம்மாத் இப்னு அபூ ஸுலைம் என்பவரின் பல வகுப்புக்களில் கலந்து மார்க்க அறிவைப் பெற்றார்கள்.
- அவ்வாசிரியரின் மரணத்தைத் தொடர்ந்து இமாமவர்கள் மார்க்க வகுப்புக்களை நடாத்தினார்கள்.
- இவர் ஹதீஸ்களைப் புரிவதில் மனித சிந்தனையை சேர்த்தார். எனவே தான் இவரது சிந்தனைமுகாம் மத்ரஸதுர் ரஃயி என்றழைக்கப்படுகின்றது.
- இவரின் மத்ஹப் ஹனபி மத்ஹப் என்றழைக்கப்படுகின்றது.

**இமாம் மாலிக் (ரஹ்) ஹிஜ்ரி 93-179**

- இவர் மதீனாவில் பிறந்தார்கள். இமாமுல் மதீனா (மதீனாவின் இமாம்) என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டார்.
- இவருடைய பிக்ஹ் கொள்கை மத்ரஸதுல் அஸர் என்றழைக்கப்பட்டது.
- இவரின் மத்ஹப் மாலிகி மத்ஹபாகும்.

**இமாம் 'ாபிஈ (ரஹ்) ஹிஜ்ரி 150-204**

- இவர் பலஸ்தீனத்திலுல் காஸாப் பகுதியில் பிறந்தார்கள்.
- இவர் குறைஷீ பரம்பரையைச் சேர்நதவராவார். எனவே ஆலிமுல் குறை' (குறைஷீயர்களின் அறிஞன்) என்ற புனைப்பெயர் பெற்றார்.
- முஸ்னத், கிதாபுல் உம், அர்ரிஸாலதுல் உஸூலிய்யா போன்றவை இவரது சில புத்தகங்களாகும்.
- இவரது சிந்தனை மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுர் ரஃயி ஆகிய இரண்டினதும் சேர்க்கையாகவும் நெகிழ்வுத் தன்மை மிக்கதாகவும் உள்ளது.
- பக்தாதில் இவர் வழங்கிய பத்வாக்கள் கதீம் என்றும் எகிப்தில் வழங்கிய பத்வாக்கள் ஜெதீத் என்றும் வழங்கப்படுகின்றது.

**இமாம் ஹம்பலி (ரஹ்) ஹிஜ்ரி 161 - 241**

- பக்தாதில் பிறந்தார்கள்.
- முஸ்னத் அஹ்மத் பிரசித்தி பெற்ற இவரது புத்தகமாகும்.

# 18. அல்குலபாஉர் ராஷிதீன்

## 01.அபூபக்கர் (ரழி)

- இவரது பெயர் அப்துல்லாஹ் இப்னு குஹாபாவாகும்
- கி.பி. 573 ல் மக்காவில் பிறந்தார்கள்.
- இஸ்லாத்தை ஏற்ற ஆண்களுல் முதன்மையானவர்களாவர்.
- இவர் கலீபாவாக ஹிஜ்ரி 11ல் நியமிக்கப்பட்டார்கள். 2 வருடங்களும் 3 மாதங்களும் கடமையாற்றினார்கள்.
- இவர் நபி (ஸல்) அவர்கள் மீ.்ராஜ் பயனத்தை மேற்கொண்டதைக் கூறிய போது உடனே அதனை விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள்.
- இதனால் இவருக்கு ஸித்தீக் என்ற புனைப்பெயர் வழங்கப்பட்டது.

**அபூபக்கர் (ரழி) அவர்களின் அபூர்வமான பண்புகள்.**

- நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் மேற்கொண்ட போது ஒன்றாகவே இருந்து உதவி ஒத்தாசைகள் வழங்கினார்கள்.
- அவர் இஸ்லாம் மார்க்கத்தை தழுவியது முதல் மரணத்தை தழுவும் வரை தனது நேரத்தை, உழைப்பை, செல்வத்தை மார்க்கத்திற்காக அர்ப்பணித்தார்கள்.

**கலீபாவாக நியமிக்கப்படல்.**

- ஸகீபா பனீ ஸாஹிதா என்ற இடத்தில் அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்கள் ஒன்று சேர்ந்து இவரை கலீபாவாக நியமித்தார்கள்.
- நபி (ஸல்) அவர்களின் இறுதித்தருவாயில் அபூ பக்கர் (ரழி) அவர்களை தனக்குப் பகரமாக தொழுகையை முன்னின்று நடத்துவதற்காக நியமித்தார்கள்.

**சேவைகளும் பங்களிப்புக்களும்.**

- நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் சிறப்பாக ஆட்சி செய்தார்கள்.
- போலி நபிகளின் தோற்றத்தால் வந்த குழப்பத்தை வெற்றி கொண்டார்கள்.
- தனக்குப் பின்னர் கலீபாவாக மிகச் சிறந்த மனிதனொருவரை தன் வாழ்நாளிலேயே நியமித்தார்கள்.
- 2 வருடங்கள் ஆட்சி செய்ததன் பின்னர் தனது 63ம் வயதில் வபாத்தானார்கள்.

## 02.கலீபா உமர் (ரழி)

- 'நிச்சயமாக அல்லாஹுத் தஆலா சத்தியத்தை உமரின் நாவிலும் உள்ளத்திலும் வைத்துள்ளான்' (ஹாகிம்)
- இஸ்லாமிய கிலாபத்தின் இரண்டாவது கலீபாவாக உமர் (ரழி) அவர்கள் காணப்படுகிறார்கள்.
- நுபுவ்வத் 6ம் ஆண்டு மக்கத்துக் குறைஷிக் காபிர்கள் அமைதி, சமாதானத்திற்கான ஒரே வழி நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்வது தான் என்ற முடிவை எடுத்த சந்தர்ப்பத்திலேயே உமர் (ரழி) அவர்களுக்க ஹிதாயத் கிடைத்தது.

**அபூர்வ திறமைகளும் பண்புகளும்.**

- அவர் குறைஷிக் காபிர்கள் ஒவ்வொருவரினதும் வீடுகளுக்குச் சென்று தான் இஸ்லாத்தை ஏற்ற செய்தியை அறிவித்தார்கள்.
- அவரின் பேச்சை வலுப்படுத்தும் வகையில் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹு தஆலா வஹீ அறிவித்தான்.
- அல்குர்ஆனை காப்பதில் கலீபா அபூ பக்கர் (ரலி) அவர்களுக்கு மகத்தான உதவிகளைப் புரிந்து பக்க பலமாக இருந்தார்கள்.

**கலீபாவாக நியமிக்கப்படுதல்.**

- ஹிஜ்ரி 13 ஜமாதுல் ஆகிர் 22ம் நாள் உமர் (ரழி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டார்கள்.

**சேவைகளும் பங்களிப்புக்களும்.**

- அவர் நீதித்துறையை தனித்துறையாக்கினார்கள்.
- வரி அறவிடுவதற்காக உத்தியோகப்பூர்வமான ஊழியர்களை நியமித்தார்கள்.
- படைகளை ஒழுங்கமைத்து பலப்படுத்தினார்கள்.
- இஸ்லாமிய நாற்காட்டியை அறிமுகப்படுத்தினார்கள்.
- அவர் 10 வருடங்களும் 6 மாதங்களும் ஆட்சிபுரிந்த பின்னர் ஹிஜ்ரி 23ம் ஆண்டு துல் ஹஜ் 26ம் திகதி மரணித்தார்கள். அவர் பாரஸீகத்தை சேர்ந்த நெருப்பு வணங்கியாகிய அபூ லுலுஆ என்பவனால் கொலை செய்யப்பட்டார்கள்.

## 03.கலீபா உஸ்மான் (ரழி)

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் குறைரிகளின் மிக முக்கிய குடும்பமாகிய உமையா பரம்ரையைச் சேர்ந்தவர்களாவர்.
- அவர் கி.பி. 576 ல் பிறந்தார்கள்.
- அவர் வாசிப்பிலும், எழுதுவதிலும் பாண்டித்தயம் பெற்றிருந்தார்கள்.
- இஸ்லாத்தை ஏற்ற முதல் 10 பேர்களுக்குள் அவர் இருக்கின்றார்.
- அபூ பக்கர் (ரழி) அவர்களின் போதனைகளைக் கேட்ட பின்னர் இஸ்லாத்தை தழுவினார்.
- அப்பொழுது அவருக்கு வயது 34 ஆக இருந்தது.

**இவரின் மிகச் சிறந்த பண்புகள்.**

- கலீபா அபூ பக்கர் (ரழி), கலீபா உமர் (ரழி) அவர்களுக்கு அடுத்துள்ள மிகச்சிறந்த மனிதன்.
- இவர் ஹிஜ்ரி 6ம் ஆண்டு உம்றா கடமையில் கலந்துகொண்டார்கள், மேலும் மக்காவிற்கான சமாதானத் தூதுவானாக அனுப்பப்பட்டார்கள்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து அவருடன் வேலை செய்துள்ளார்கள்.
- அக்காலப்பகுதியில் அபூ பக்கர் (ரழி) அவர்கள் ‘ஷுறா சபையில் முக்கிய அங்கத்தவராக இருந்தார்கள்.
- அதே நேரம் உமர் (ரழி) அவர்கள் அபூ பக்கர் (ரழி) அவர்களுக்கு அன்மையிலிருந்து ஆலோசனைகள் வழங்கி உதவுபவராக இருந்தார்கள்.

**கலீபாவாக நியமிக்கப்படல்**

- உமர் (ரழி) அவர்களின் மரணத்தின் பின்னர் அ‘ரதுல் முப‘‘ராஹ் (வாழ் நாளிலேயே நபி (ஸல்) அவர்களால் சுவனத்தைக் கொண்டு நண்மாராயனம் கூறப்பட்ட 10 பேர்கள்) ஒன்றுகூடி ஆலோசனை செய்து உஸ்மான் (ரழி) அவர்களை கலீபாவாக நியமித்தனர்.
- அப்துர் ரஹ்மான் (ரழி) அவர்களே உஸ்மான் (ரழி) அவர்களை கலீபாவாக ஏற்று முதலில் பைஅத் செய்தார்கள். அவரைத் தொடர்ந்து ஏனையவர்கள் பைஅத் செய்தனர்.

**இவர் செய்த சேவைகளும் பங்களிப்புக்களும்.**

- அல்குர்ஆனைப் பாதுகாத்தமை.
- கடற்படையை உருவாக்கியமை

- இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை விஸ்திரப்படுத்தியமை
- அரசியல் பங்களிப்புக்கள்
- அபிவிருத்திச் செயன்முறைகள்

## 04.கலீபா அலி (ரழி)

- அலி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சாச்சாவாகிய அபூ தாலிபின் மகனாவார்.
- நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைக்கும் போது அலி (ரழி) அவர்களுக்கு 10 வயதாக இருந்தது.
- இஸ்லாத்தை ஏற்ற இள வயதுடையவர்களில் இவர் முதன்மையானவராவார்.
- நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது குறைசிக் காபிர்கள் அன்னாரை கொலை செய்ய திட்டமிட்டிருந்தனர். இதை அறிந்தும் கூட அலி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் தூங்கினார்கள்.
- இவருக்கு அஸதுல்லாஹ் (அல்லாஹ்வின் புலி) என்ற நாமத்தை நபியவர்கள் சூட்டினார்கள்.

**அலி (ரலி) அவர்கள் கிலாபா பொறுப்பை ஏற்ற போது அன்றைய நிலமை....**

- அலி (ரழி) அவர்கள் கிலாபத்தை ஏற்ற போது புதிதாக இஸ்லாம் மார்க்கத்தில் நுழைந்தவர்கள் தெளிவான அறிவுடையவர்களாக இருக்கவில்லை. எனவே அலி (ரழி) அவர்கள் மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு கடுமையான எச்சரிக்கைகளை விடுத்தார்கள்.
- அன்னார் எடுத்த சில முடிவுகளினால் பிற்காலத்தில் ஜமல், ஸிப்பீன் போன்ற யுத்தங்களுக்கு வழிகோலியது.

**அலி (ரழி) அவர்களின் சேவைகள்**

- கலீபா அபூ பக்கர் (ரலி) அவர்களின் காலத்தில் அலி (ரலி) அவர்கள் பைதுல் மாலிற்கு பொருப்பாக இருந்தார்கள்.
- கலீபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நீதித்துறைக்குப் பொறுப்பாக இருந்தார்கள்.

- அனைத்து கலீபாக்களின் காலத்திலும் முக்கியமான ஆலோசகராக திகழ்ந்துள்ளார்கள்.
- கவாரிஜ்களினால் மார்க்கத்திற்கு ஏற்பட்ட தீங்கை தடுத்து நிறுத்தினார்கள்.
- கூபாவை அபிவிருத்தியடையச் செய்தார்கள்.
- சிறைச்சாலைகளை அமைத்தார்கள்.
- அல்குர்ஆனை பாராாயனம் செய்வதற்கு அபுல் அஸ்வத் அபுல் அலி என்பவரை நியமித்தார்கள்.
- ஹிஜ்ரி 40ம் ஆண்டு ரமழான் மாதத்தில் அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜிம் என்பவன் அன்னாரைக் கொலை செய்தான்.

## 19.இலங்கைவாழ் முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்புகளும் மற்றும் இலங்கைக்கும் அறேபியாவிற்குமிடையிலான தொடர்புகளும்.

- இஸ்லாம் மார்க்கத்தின் தோற்றத்தின் முன்னரே அறேபியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்டுள்ளன. இலங்கை கடற்பயனத்தின் கேந்திர மத்திய நிலையமாக காணப்படுவதால் கடற்பயனங்கள் செல்லக்கூடிய அறேபியர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.
- நபி (ஸல்) அவர்களின் வாழ்வின் கடைசி கால கடடங்களில் அவர்கள் பல தூதுவர்களை உலகின் பல்வேறு இடங்களில் இஸ்லாத்தின செய்தியை எடுத்து செல்ல அனுப்பியுள்ளார்கள். அத்தூதர்கள் எடுத்து வரும் செய்தி உண்மை என்பதை நிரூபிக்க நபியவர்களின் முத்திரைப்பதித்த கடிதத்தை எடுத்து செல்வார்கள்.
- வஹப் இப்னு ஹப்ஸா என்ற ஸஹாபி சீனாவிற்கு இஸ்லாத்தின் செய்தியை எடுத்துச் சென்றதாக தோமஸ் ஓர்னல்ட் என்பவர் குறிப்பிடுகின்றார். இவ்வுண்மைகள் ஹமீதுல்லாஹ் என்பவர் எழுதிய ‘நபி (ஸல்) அவர்களின் வெளிநாட்டுத் தொடர்புகள்’ என்ற புத்தகத்தில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.
- கி.பி. 628ம் ஆண்டு நபி (ஸல்) அவர்கள் வஹப் இப்னு அபீ ஹப்ஸா என்ற ஸஹாபியை இந்நாட்டு மன்னனை சந்திப்பதற்கா இலங்கைக்கு அனுப்பியுள்ளார்கள். இச்சஹாபி மன்னனை சந்தித்து கி.பி. 632ம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இவ்விரு சம்பவங்களும் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே எவ்வாறு இஸ்லாம் மார்க்கம் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்ற உண்மையைப் படம்பிடித்துக்காட்டுகின்றது.
- இலங்கையில் வசித்த அக்கால அறேபியர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் ஆர்வமிக்கவர்களாக இருந்துள்ளார்கள். எனவே இவர்கள் அறேபியாவிற்கு இஸ்லாத்தைப் பற்றி அறிந்து வருவதற்கா மனிதர்களை அனுப்பியுள்ளார்கள். அம்மனிதர்கள் சென்ற காலம் கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலமாக இருந்துள்ளது. இரண்டு மனிதர்கள் உமர் (ரலி) அவர்களிடமிருந்து இஸ்லாத்தைக்கற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியுள்ளார்கள். அவர்கள் நாடு திரும்பும் வழியில் பாகிஸ்தானின் மக்ரான் என்ற இடத்தில் ஒருவர் மரணமடைய அடுத்தவர் நாடு திரும்பி தான் கற்ற விடயங்களைக் கற்பித்துள்ளார்.
- கி.பி. 8ம் நூற்றாண்டில் உமைய கலீபாக்களாகிய அப்துல் மலிக் மற்றும் வலீத் இன் ஆட்சிக்காலத்தில் ஈராக்கில் ஹஜ்ஜாஜ் என்ற ஒரு தலைவன் இருந்தான். இவனின் அராஜகங்களுக்குப் பயந்த பனூ ஹாஶிம் குடும்பத்தினர் அறேபியத் தீபகற்பத்தைத் துறந்து தென்னாசியாவில் அமைந்துள்ள இலங்கையின் கரையோறப் பகுதிகளுக்கு வந்து குடியேறியுள்ளனர்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் இலங்கைக்கு ஆரம்ப காலகட்டங்களிலேயே இஸ்லாம் மார்க்கத்தினுடனான அறிமுகம் இருந்துள்ளது

என்ற விடயத்தை வலியுறுத்துகின்றன. இப்பகுதிகளில் ஹிஜ்ரி 3ம் மற்றும் 4ம் நூற்றாண்டுகளில் அரேபிய மக்கள் வசித்துள்ளனர் என்ற விடயம் கண்டெடுக்கப்பட்ட அறேபிய நாணயக் குற்றிகளினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதேபோல் இலங்கைக்கும் அறேபியாவிற்கும் அன்று முதல் வணிகத் தொடர்புகளும் இருந்துள்ளன. இலங்கை மன்னனும் மக்களும் அறேபியாவில் காணப்பட்ட பொருட்களின் பால் தேவையுடையவர்களாக இருந்தது போல் அறேபியாவும் இலங்கைப் பொருட்களின் பால் தேவையுடையதாக இருந்துள்ளது. இதன் காரணமாக அவர்கள் பரஸ்பரம் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- இந்நாட்டை வளப்படுத்துவதில் அக்கால முஸ்லிம்கள் செய்த பங்களிப்பு
    1. அவர்கள் யானைத் தந்தம், மாணிக்க கல், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை வெளிநாட்டுச்சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர்.
    2. இலங்கையில் காணப்படுகின்ற ஆதம் (அலை) அவர்களின் பாதச்சுவடுகள் பற்றிக் கூறியுள்ளனர். இது இந்நாடு பிரபல்யமடைய பெரிதும் பங்காற்றியுள்ளது.
    3. இன்னோரன்ன வேறு பல பொருட்களையும் ஏற்றுமதி செய்துள்ளனர். இதனால் பாரிய அன்னிய செலாவனியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
    4. அவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக உழைத்துள்ளார்கள்.
- இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பகட்டமாக கொழும்பு, காலி, மாத்தறை போன்ற கரையோரப் பிரதேசங்களிலே குடியேறியுள்ளனர். பிற்பட்ட காலத்தில் கம்பொல, குருணாகலை போன்ற பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

# 20.இலங்கையின் முஸ்லிம் தலைவர்கள்

## முஹம்மத் காஸிம் சித்தி லெப்பை

- சித்தி லெப்பை அவர்கள் முல்க் ரஹ்மதுல்லாஹ் என்பவரின் மகனாகிய முஹம்மத் லெப்பை அவர்களின் மகனாவர். முஹம்மத் லெப்பை மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கவின் காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவருக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். இவர்கள் அனைவரும் உயர்மட்ட கல்வியைப் பெற்றவர்களாவர்.
- 1874ம் ஆண்டு சித்தி லெப்பையவர்கள் கண்டி மாவட்ட வழக்கறிஞராக பதவியுயர்வு பெற்றார்கள். 1864ம் ஆண்டு உயர் நீதிமன்ற வழக்கறிஞராகப் பதவி உயர்வு பெற்றார்கள். இவர் கண்டி நகரமன்றத்தின் உறுப்பினராக இருந்துள்ளார்கள். 1874 - 1878 காலப்பகுதியில் தனது சேவையை நகராட்சிமன்றத்தின் நீதிபதியாக வழங்கியுள்ளார்கள். அவர் ஆரம்பத்தில் கொழும்பில் வசித்தார்கள். பிற்பட்ட காலத்தில் கண்டியில் வசித்தார்கள்.
- சித்தி லெப்பையவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம், அறபு ஆகிய மொழிகளில் தேர்ச்சிமிக்கவராக இருந்துள்ளார்கள். அவர் செய்யிதா உம்மா என்ற பெண்னை மணந்தார்கள். இவர்களுக்கு குழந்தைப் பிறக்காமையினால் அப்துல் ஹமீத் என்ற பிள்ளையைத் தத்தெடுத்து வளர்த்தார்கள். இன்னாரின் மனைவி தன் கணவனின் விவகாரங்களில் உறுதுணையாக இருந்துள்ளார்கள்.

**சித்தி லெப்பையவர்களின் சேவைகள் சில:**

1. ஸாஹிரா படசாலை என்ற முஸ்லிம் பாடசாலையை உருவாக்கியமை.
2. முஸ்லிம்களின் கல்விக்கும் அபிவிருத்திக்கும் என குழுமங்களைத் தோற்றுவித்தமை.
3. பொதுமக்களோடு தொடர்பான பல்வேறுபட்ட விவகாரங்களில் முஸ்லிம்களை விழிப்பூட்டச்செய்வதற்காக முஸ்லிம் நேசம் மற்றும் ஞாணதீப போன்ற சஞ்சிகைகளை வெளியிட்டமை.
4. திருமணப்பதிவு விவகாரத்தில் இவரின் பணி அளப்பரியதாகும். சரியான திருமணப்பதிவு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி தெளிவுபடுத்தினார்கள்.

## பேராசிரியர் துவான் புர்ஹானுத் தீன் ஜாயா

- அரசியலிலும் கல்வித்துறையிலும் மிக முக்கியமான, மறக்க முடியாத ஒரு நபராக பேராசிரியர் டீ.பீ ஜாயா அவர்கள் காணப்படுகின்றார்கள். இவர் இலங்கையில் சிறிமத் செய்யித் அஹமத் காண் என அறியப்படுகின்றார். (த கிரிஸன்ட் 1946)
- இவர் கண்டியின் நகரமாகிய கலகெதர என்ற இடத்தில் 1890ல் பிறந்தார்கள். இவரின் கல்லூரி வாழ்க்கையின் போது பல்வேறு விருதுகளைத்

தன்னகப்படுத்திக்கொண்டுள்ளார்கள். உதாரணமாக பேராசிரியர் ஈ. பெல் லத்தீன் விருது, கிறிஸ்தோபஸ் ஒபேசேகர விருது.

- இவர் ஒரு தலைவராகவும் கீர்த்திமிக்க வழக்கறிஞராகவும் வேலை செய்துள்ளார்கள். இவர் முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தியில் பாரிய ஆர்வம் காட்டினார்கள். இவர் முஸ்லிம்களின் அறிவுப்பற்றாக்குறைக்காக வேண்டி கவலையடைந்துமுள்ளார்கள். இது முஸ்லிம்கள் கல்வியின் பால் ஆர்வம் செலுத்தாமையினாலேயே ஆகும்.

**டீ.பீ. ஜாயா அவர்களின் பணிகள் சில:**

1. பரந்துபட்ட அளவில் ஸாஹிராக் கல்லூரியை அபிவிருத்தி செய்தமை.
2. அவர் அனைவருக்கும் கண்ணியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை சமூகத்திற்கு போதித்தார்கள்.
3. சக மக்களோடு சேர்ந்து நாட்டின் சுதந்திரத்திற்காக போராடினார்கள்.
4. இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளார்கள்.

# 21.இஸ்லாத்தின் பார்வையில் உழைத்தல்

- உழைப்பில் பணம் என்ற அம்சம் பெரும் பங்குவகிக்கின்றது. பொதுவாக பணத்தை தேடுவதில் இஸ்லாம் அங்கீகாரமளித்த வழிமுறைகளும் இஸ்லாம் அனுமதிக்காத சில நடைமுறைகளும் காணப்படுகின்றன. இவ்விடயங்களில் மிகக் கரிசனையாக முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டும் என வேண்டப்பட்டுள்ளனர்.
- பணத்தை ஹலாலான வழிமுறைகளில் உழைத்து அதனை ஹலாலான வழிமுறைகளில் செலவுசெய்வது மிக முக்கியமான விடயமாக உள்ளது.
- **நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக்கொள்ளும் முறையில் ஏற்படுகின்ற வர்த்தகம் அல்லாமல் ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள். நீங்கள் உங்களையே கொலை செய்துகொள்ளாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடன் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (அல் குர்ஆன் 4-29)**
- **ஒருவர் பிச்சை எடுக்கக் கூடாது, தன் அண்டை வீட்டாரை கவனிக்க வேண்டும். ஹலால் வழிமுறைகளால் மாத்திரமே சம்பாதிக்க வேண்டும். இத்தகையவர் நாளை மறுமை நாளில் பூரண பௌர்ணமி தின நிலவை ஒத்த பிரகாசமான முகத்துடன் அல்லாஹ்வை சந்திப்பார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (தபராணி)**
- உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். வியாபார கொடுக்கல் வாங்கல்களின் சட்டதிட்டங்களை அறிந்தவர்கள் மாத்திரமே சந்தைக்கு வியாபாரம் செய்வதற்காகவும் வியாபாரத்தோடு தொடர்பான ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடவும் நுழைய வேண்டும். ஏனையவர்கள் சந்தைக்குள் நுழையக்கூடாது.

**ஒருவர் பணம் சம்பாதிப்பதுடன் தொடர்பான நியதிகள்.**

1. ஒரு முஸ்லிம் கட்டாயமாக ஹலால் வழிமுறைகளினூடாகவே பணம் சம்பாதிக்க வேண்டும்.
2. நேர்மையான வியாபாரிக்கு மாத்திரமே அல்லாஹு தஆலாவின் அருள் கிடைக்கும்.
3. தேவையின் போது ஒருவருக்கு பணஉதவி செய்தல், கடனாளியாக இருப்பவருக்கு அவரின் கடன் சுமையிலிருந்து விடுவிக்க உதவுதல் போன்றன முஸ்லிமின் பண்புகளாகும்.
4. அடமானம் மற்றும் குத்தகை போன்ற விடயங்களில் ஈடுபட அனுமதியுண்டு.
5. வட்டி, சூதாட்டம், மோசடி போன்றன தடுக்கப்பட்ட கெட்ட செயல்களாகும்.

**இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட வியாபார முறைகள்.**

1. அல் முறாபஹா

- பொருளை வாங்கிய விலையுடன் உரிய இலாபத்தை சேர்ப்பதுடன் பொருளின் சந்தை விலைக்கு அமைவாக அதனை விற்பனை செய்வது ஆகுமானதாகும்.
- வாங்குபவர் அல்லது விற்பவர் பொருளின் இறுதி விலை தொடர்பாக இறுதித்தீர்மானத்திற்கு வரலாம். அல்லது நிர்ணயித்த விலையிலேயே விற்பனை செய்பவன் விற்பனையை தொடரலாம்.
- விற்கப்பட்ட பொருளின் பெறுமதி முழுவதுமாக உடன் பெறப்படலாம் அல்லது தவணைமுறையில் பெற்றுக்கொள்ளப்படலாம். தவணை முறையில் பெறப்படும் போது விற்பனையாளர் இலாபத்தை அதிகரித்துக்கொள்ளலாம்.

# 22.திருமணம் (நிகாஹ்)

- இஸ்லாமிய வாழ்வொழுங்கின் அடிப்படையாக குடும்ப அலகு காணப்படுகின்றது.
- இன்னும் உங்களில் வாழ்க்கைத்துணை இல்லாத (ஆண்களுக்கும், பெண்களுக்கும்) அவ்வாறே வாழ்க்கைத் துணை இல்லாத ஸாலிஹான (ஆண் பெண்) அடிமைகளுக்கும் விவாகம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தன் நல்லருளைக் கொண்டு அவர்களை ஏனையவர்களிடமிருந்து தேவையற்றவர்களாக மாற்றுவான். மேலும் அல்லாஹ் (வாரி வழங்குவதில்) விசாலமானவன். (யாவற்றையும்) நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 24:29)
- திருமணம் முடிக்க சக்திபடைத்த இளையவர்கள் அவசியம் திருமணம் செய்துகொள்ள வேண்டும். திருமணம் ஒருவனை ஹராமான செயலில் ஒன்றினைவதைவிட்டும் தடுக்கின்றது. திருமணத்திற்கு சக்திபடைக்காதவர்கள் நோன்பு நோற்கவேண்டும். அந்நோன்பு அவர்களை பாவத்தில் ஈடுபடுவதைவிட்டும் தடுக்கின்றது.
- ஒருவன் உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சக்திபெற்றிருந்தால் அவன் திருமணபந்தத்தில் இணைவது நபியவர்களின் ஸுன்னாவாக இருக்கின்றது. (போதிய வருமானமத்தைக் கொண்டிருப்பது பெண்களுக்கொரு நிபந்தனையல்ல)
- மேற்கூறப்பட்ட தகமைகளைப்பெற்றவன் பாவங்களில் வீழ்வான் என்ற அச்சத்தில் இருந்தால் அவன் திருமணம் முடிப்பது வாஜிபாகும்.

**இஸ்லாமிய ‘ரீஆவின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள்.**

1. உள, உடல் நிம்மதியைப் பெற்றுக்கொள்ளல்.
2. இஸ்லாமிய ‘ரீஆ சட்ட திட்டங்களுக்கு இணங்கியொழுகுகின்ற எதிர்காலப் பரம்பரையொன்றை தோற்றுவித்தல்.

- திருமணம் ஒருவனில் அமைதியையும் பொறுப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. ஒருவனின் உளசார் அமைதி நிலனை அவனின் திறமைகளை அதிகரிக்கச்செய்கின்றது.
- அல்குர்ஆன் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவை சகீனா என்றழைக்கின்றது. (அமைதி, சாந்தம்)
- திருமணம் ஆணையும் பெண்ணையும் பாவ காரியங்களில் (விபச்சாரம்) ஈடுபடுவதைவிட்டும் தடுக்கின்றது.
- சிறந்த சமூக ஒழுங்கொன்றை கட்டியெழுப்பல்.

**மேலும் அவர்கள் ‘எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியினரிடமும் இருந்து எங்களுக்கு கண்குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கியருள்வாயாக’ என்று பிரார்த்தனை செய்வார்கள். (அல்குர்ஆன் 25-74)**

- திருமணம் இபாதத் வகைகளுள் ஒன்றாக உள்ளது.
- அறபு மொழியில் திருமணம் 'நிகாஹ்' என வழங்கப்படுகின்றது.

திருமணம் செய்வதற்கு ஆகுமாகாதவர்கள், இரத்த உறவுகள் திருமணம் செய்ய முடியாத அளவிற்கு நெருங்கிய சொந்தங்கள் என்பன மஹ்ரம் என அழைக்கப்படுகின்றனர். அந்தவகையில் மஹ்ரம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும்

1. நிரந்தர மஹ்ரம்
2. தற்காலிக மஹ்ரம்

1. நிரந்தர மஹ்ரம்

- உறவினர்களுள் குறித்த ஒரு பகுதியினர் எக்காலத்திலும் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாதவர்களாக இருப்பர். இத்தகையவர்கள் நிரந்தர மஹ்ரமிகள் என அழைக்கப்படுவர். அவ்வாறு திருமணம் செய்ய அனுமதி பெறாமைக்காண காரணங்கள் வருமாறு:
  1. இரத்த உறவு
  2. திருமண உறவு
  3. பால்குடி முறையினால் ஏற்பட்ட உறவு

மேற்கூறப்பட்ட 3 காரணிகளால் பின்வரக்கூடியவர்கள் நிரந்தர மஹ்ரமிகளாக இருப்பர்.

1. தாய், தாயின் தாய் அவ்வாறே அதற்கு மேல் உள்ள உறவுகள்.
2. பிள்ளை, பிள்ளையின் பிள்ளை அவ்வாறே அதற்கு கீழ் உள்ள உறவுகள்.
3. தாத்தா, பாட்டிமார்களின் பிள்ளைகள்.
4. மனைவியின் தாய், மனைவியின் தாயின் தாய்.
5. மனைவியின் பிள்ளைகள், மனைவியின் பேரப்பிள்ளைகள்.
6. தந்தையின் மனைவி.
7. மகனின் மனைவி, பேரப்பிள்ளையின் மனைவி.

- பால் குடி முறையினால் திருமணம் செய்ய அனுமதிக்கப்படாத உறவுகள் வருமாறு:
  1. தாய் பால் கொடுத்த பெண்
  2. அவளது தாய்

1. தற்காலிக மஹ்ரம்

- ஒருவனுக்கு ஏக காலத்தில் இரு சகோதரிகளை மணப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
- ஒருவனால் ஒரு பெண்ணையும் அப்பெண்ணின் தந்தையின் சகோதரியையும் ஏக காலத்தில் மணமுடிக்க முடியாது.
- ஒருவனால் ஏக காலத்தில் ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் மணமுடிக்க முடியாது.
- ஒருவனுக்கு முஷ்ரிக்கான பெண்ணை மணமுடிக்க முடியாது.
- திருமணமான பெண், திருமண பந்தத்தில் ஒருவனோடு இணைந்திருக்கும் நேரத்தில் இன்னொருவனை திருமணம் செய்ய முடியாது.

**திருமணத்தின் பர்ளுகள்.**

1. மணமகன், மணமகள்
2. ஈஜாப் கபூல்
3. வலி
4. சாட்சிகள்

மணமகன்

1. முஸ்லிமாக இருக்க வேண்டும். (ஆங்கிலப் பிரதியில் நபி (ஸல்) அவர்களின் பாதையைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும் எனக்கூறி அஹ்லுல் கிதாப் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது பிழையாகும். நபியவர்களின் பாதையைப் பின்பற்றுபவர்கள் அஹ்லுல் கிதாபினரல்லர். அஹ்லுல் கிதாப் எனப்படுகின்றவர்கள் இறை வேதம் அருளப்பெற்ற, ஏக இறைவைனை வழிப்படுகின்ற யூதர்கள் கிறிஸ்தவர்களாவர். எனினும் முஸ்லிமான பெண்ணுக்கு அஹ்லுல் கிதாபைச் சேர்ந்த ஒரு ஆணை மணப்பது தடுக்கப்பட்டுள்ளது. மாறாக அஹ்லுல் கிதாபைச் சேர்ந்த பெண்ணை முஸ்லிமான ஒரு ஆணிற்கு திருமணம் செய்ய மாத்திரமே இஸ்லாத்தில் அனுமதியுண்டு)
2. நான்கு மனையியர்களை திருமணம் செய்து, அவர்களுடன் திருமண உறவில் நீடிப்பவரல்லாமல் இருத்தல்.
3. ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணியாதவராக இருத்தல்.

மணமகள்

1. முஸ்லிமாக இருத்தல் அல்லது அஹ்லுல் கிதாபைச் சேர்ந்த பெண்மணியாக இருத்தல்.
2. இன்னொருவனுடைய மனைவியல்லாமல் இருத்தல்.
3. மணப்பெண் இத்தா காலத்தில் இல்லாதவளாக இருத்தல்.

ஈஜாப்

1. திருமண சமயத்தில் பெண்வீட்டினரால் (வலீயினால்) மணமகனிற்கு செய்துகொடுக்கப்படும் விவாக அறிவிப்பே அறபு மொழியில் ஈஜாப் என்று அழைக்கப்படுகின்றது.

கபூல்

- கபூல் என்றால் மணமகளின் வலீயினால் விடுக்கப்பட்ட விவாக அறிவிப்பை மணமகன் ஏற்றுக்கொள்ளுதல் என இலகுவாக கூறலாம்.
- ஒரு பெண்ணால் தனக்குத் தானே வலீயாக இருக்க முடியாத அதே நேரத்தில் வேறொரு மணப்பெண்ணிற்கும் வலீயாக நிற்கமுடியாது.
- வலீ இன்றிய திருமணம் செல்லுபடியாகாது.

**வலீயாக இருக்க முடியுமானவர்கள் வருமாறு:**

1. மணப்பெண்ணின் சட்ட ரீதியான தந்தை
2. மணப்பெண்ணின் சட்ட ரீதியான தாத்தா (தந்தையின் தந்தை)
3. மணப்பெண்ணின் சகோதரன்
4. தந்தையின் சகோதரன்
5. தந்தையின் சகோதரனின் மகன்
6. மணப்பெண்ணின் சகோதரனின் மகன்
7. சட்டரீதியான ஆலோசகர் அல்லது நீதிபதி
8. தந்தைவழிச் சகோதரன்

**வலியாக வருபவரிடம் இருக்கவேண்டிய நிபந்தனைகள் வருமாறு**

1. முஸ்லிமாக இருத்தல்
2. ஆணாக இருத்தல்
3. பருவ வயதை அடைந்தவராக இருத்தல்
4. சுதந்திரவாளியாக இருத்தல்
5. விடய அறிவு பெற்றவராக இருத்தல்
6. பெரும் பாவங்களில் ஈடுபடாதவராக இருத்தல்

சாட்சிகள்

- திருமணத்திற்கான இரண்டு சாட்சிகளைக் கொண்டிறாத திருமனம் செல்லுபடியற்றதாகும்.
- சாட்சியாக வருபவர்களிடம் இருக்க வேண்டிய நிபந்தனைகள் வருமாறு:

- திருமணத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற மொழியை அறிந்தவராக இருத்தல்.
- அவர் குருடராகவோ செவிடராகவோ ஊமையாகவோ இல்லாதிருத்தல்

மஹர்

- மஹர் என்பது மணமகன் மணப்பெண்ணை ஹலால் மனைவியாகப் பெற்றுக்கொள்வதற்காக மணப்பெண்ணிற்கு வழங்குகின்ற இலவசப்பரிசாகும். அப்பரிசு பணமாகவோ பொருளாகவோ இருக்க முடியும். மஹர் கொடுப்பது மணமகன் மீது கடமையாகின்றது.

**'நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கொடை)களை மகிழ்வோடு (பரிசாக) கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை அவர்கள் உங்களுக்கு மனமொப்பி கொடுத்தால் அதைத் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்' (அல்குர்ஆன்-4-4)**

வலீமா

- மணமகனால் திருமணம் செய்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் கொடுக்கப்படுகின்ற விருந்துபசாரமே வலீமா என்றழைக்கப்படுகின்றது.
- இது வலியுறுத்தப்பட்ட சுன்னாவாக ( ஸுன்னா முஅக்கதா ) உள்ளது.

## 23.முன்மாதிரியான இஸ்லாமியக் குடும்பம

**மேலும் அவர்கள் ‘எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியினரிடமும் இருந்து எங்களுக்கு கண்குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கியருள்வாயாக’ என்று பிரார்த்தனை செய்வார்கள். (அல்குர்ஆன் 25-74)**

நபி (ஸல்) அவர்கள் அனஸ் (ரழி) அவர்களைப்பார்த்துக் கூறினார்கள்: ‘அருமை மகனே! நீ உன் குடும்பத்தினருடன் இருக்கும் பொழுது அவர்களுக்கு சலாம் கூறு. அது உனக்கும் உன் குடும்பத்தினருக்கும் நலவாக அமையும். சலாத்தைப் பரப்புகின்ற மனிதனுக்கு அல்லாஹ்வின் பறகத்தும், மன அமைதியும், சந்தோ‘மும் வாழ்நாள் முழுக்கவும் கிடைக்கும். (ஹதீஸ்)

கணவனின் பண்புகள்

1. அவன் தன் மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பான்.
2. அவன் தன் மனைவியையும் பிள்ளைகளையும் ஹராத்தைவிட்டும் பாதுகாப்பான்.
3. அவன் மரியாதையுடன் நடந்துகொள்வான்.
4. அவன் மனைவியினதும் பிள்ளைகளினதும் பிழைகளை சரிசெய்வான், திருத்துவான்.
5. அவன் தன் பெற்றோர்களுடனும் தன் குடும்பத்தினர்களுடனும் சரிசமமான உறவைப் பேணுவான்

- அல்லாஹுªத் தஆலாவின் அருளை பெற்றுக்கொள்வதன் உண்மை நிலையை அறிந்த மனைவி தன் கணவருக்கு கீழ்படிந்து அவனைத் திருப்திப்படுத்துவதை தனது இலக்காக கொண்டிருப்பாள்.
- தன் கணவனைத் திருப்திப்படுத்தி அவன் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பெற்ற நிலையில் மரணித்தால் சுவர்க்கம் நுழைய முடியும் என்ற உண்மையை கருத்தில் கொண்டவளாக வாழ்வாள்.
- நபி (ஸல்) அவர்கள் தனது குடும்பத்திற்காக செலவு செய்யும் விடயத்தில் கஞ்சத்தனம் காட்டியதில்லை.
- பல்வேறு விடயங்களுக்காக செலவு செய்யப்படுகின்ற தீனாரை விட தன் குடும்பத்திற்காக செலவு செய்யும் தீனாரே சிறந்நது (ஹதீஸ்)
- முன்னாதிரியான குடும்பத்தின் இன்னொரு பரிமாணம் தான் தன் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதாகும். பிள்ளைகளும் தன் மார்க்கத்தையும் அதேபோல் ஏனைய விடயங்களையும் நன்றாக படிப்பது அவர்களது கடமையாகும்.
- ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து: ‘அல்லாஹ்வின் தூதரே! நான் சுவனம் நுழைய வேண்டுமாயின் என்ன செய்ய வேணடும் எனக்

கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீ அல்லாஹுஹு தஆலாவிற்கு யாரையும் இணை கற்பிக்காதே. தொழுகையை நிலைநாட்டு, ஸக்காத்தை கொடு மேலும் உன் உறவுகளுடன் நல்ல முறையில நடந்து கொள்' எனக்கூறினார்கள் (ஹதீஸ்)

## 24.தலாக்கும் இத்தாவும்

திருமணம் என்பது ஒரு புனிதமான பிணைப்பாகும். இது ஒரு நீண்டகால உறவு என்பதால் கணவன் - மனைவிக்கான விதிகள் ஒழுங்குமுறைகள் கடமைகள் மற்றும் உரிமைகளை புனித அல்குர்ஆன் வகுத்துள்ளது. ஏதாவதொரு சூழ்நிலையில் தம்பதிகளுக்கு மத்தியில் எவ்வித சமரசப் பேச்சுவார்த்தைக்கும் இடமின்றி விவாகரத்து மாத்திரமே ஒரே வழி என்று வரும்பொழுது ஒருவர் விவாகரத்தை நாடிச்செல்லலாம். திருமணபந்தத்தில் நிலைத்திருப்பதற்கான அனைத்து முயற்சிகளின் பின்னரும் சேர்ந்திருப்பது கடினமாக இருப்பின் அச்சந்தர்ப்பத்தில் விவாகரத்து ஒன்று மாத்திரமே இறுதி முடிவாக இருக்கும்.

இஸ்லாம் திருமணத்திற்கு முன்னர் தம்பதிகளுக்கிடையிலான பொருத்தப்பாடு மற்றும் சம்மதத்தை கருத்திற்கொள்ள வேண்டும் எனக்கூறுகின்றது. அப்போது தான் நீடித்த உறவொன்றை கட்டியெழுப்ப முடியுமாக இருக்கும்.

பெற்றோர்கள் அவர்களிருவரையும் நன்றாக புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அவர்களுடன் ஒரு நண்பனைப்போலப் பழகி அவர்களின் விருப்பு வெறுப்புகள் ஆசை எதிர்ப்பார்ப்புக்கள் போன்றவை பற்றி திறந்த மனதுடன் கலந்துரையாடி அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இஸ்லாம் மனிதர்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதையும தவறாகப்புரிந்துகொள்வதையும் தவிர்க்க வேண்டும் எனவும் கூறுகிறது.

'அனுமதிக்கப்பட்ட விடயங்களில் விவாகரத்தானது அல்லாஹ்விற்கு வெறுப்பான விடயமாகும்' (அபூ தாவுத்)

'இந்த பூமியில் தம்மால் நிரைவேற்றப்பட்ட கொலைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி ஷைத்தான்கள் ஒவ்வொரு நாளும் தம் தலைவரான இப்லீஸுக்கு அறிவிக்கின்றனர். இன்று நான் இந்த குடும்பத்தை பிரித்தேன் என்று அவர்கள் கூறுவார்கள். இதை செவிமடுத்த ஷைத்தான் மிகவும் மகிழ்ச்சியடைவான் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

விவாகரத்து என்பது ஒரு பாவச்செயலாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் மூன்று விடயங்கள் உள்ளன அவை நகைச்சுவைக்காக செய்யப்பட்டாலும் அவை நிரைவேறிவிடும். அதில் ஒன்று தலாக்காகும். (திர்மிதி)

தலாக் பெற்றுக்கொள்ப்படுவதற்கான கட்டங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

- கணவனும் மனைவியும் தம் பிரச்சினையை தாமாகவே தீர்த்துக்கொள்ள முனைவர்.
- அத்தம்பதியினர்கள் தமக்கு மத்தியில் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது போனால் இரு தரப்பிலிருந்தும் ஒரு மத்தியஸ்தர் முன் வந்து அவர்களிருவருக்கும் மத்தியில் பிணைப்பை ஏற்படுத்த தலையீடு செய்வார்.
- அம்முயற்சியும் கைசேராவிடின் கணவன் தலாக்கை நோக்கி செல்வான்.

தலாக் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள்

1. **வாஜிபான தலாக்**

கணவன் மனைவிக்கிடையிலான பிணக்கிற்கு தமக்கு மத்தியில் தீர்வு காண முடியாத விடத்து இரு தரப்பிலிருந்தும் முன் வருகின்ற மத்தியஸ்தர் அவர்கள் விடயம் தொடர்பாக கலந்துரையாடியதன் பின்னர் அவர்களிருவரும் கணவன் மனைவியாக தொடர்ந்து வாழ்வது க்'டம் அவர்கள் பிரிவது தான் மேலானது எனக்கருதும் பட்சத்தில் அவர்களிருவரும் திருமணபந்தத்திலிருந்து பிரிவது வாஜிபாகும்.

2. **சுன்னத்தான தலாக்**

மனைவி கணவனுக்கு கீழ்படியாதவளாக இருந்தால் அல்லது அவள் மார்க்கத்தை உரியவாறு பின்பற்றாதவளாக இருந்தால் அல்லது அவளிடம் சகிக்க முடியாத கெட்ட குணங்கள் இருந்தால் அல்லது அவளது கணவன் அவளது உரிமைகளைக் கொடுக்கவில்லை என்றிருந்தால் இக் காரணங்களுக்காக தலாக் அவசியம் கொடுப்பது அவசியமாகும். இது சுன்னத்தான தலாக் எனப்படுகின்றது.

3. **ஆகுமான தலாக்**

கணவன் மனைவிக்கு எதுவும் வழங்காது அவளுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளாவிட்டால் அது தலாகிற்கான காரணமானால் இத்தலாக் ஆகுமான (முபாஹான) தலாக் எனப்படுகிறது.

4. **ஹராமான தலாக்**

ஒரு கணவன் தன் மனைவிக்கு சொத்துக்களிலிருந்து சேரவேண்டிய சரியான பங்கை இழக்கச் செய்யும் முகமாக அவன் இறக்கும் போது அல்லது அவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருக்கும் போது அவர்களுள் ஒருவளை மாத்திரம் தன்னோடு வைத்துக்கொண்டு ஏனையவர்களுக்கு தலாக்கொடுப்பது ஹராமான தலாக்காகின்றது.

தலாக் பிரதானமாக 3 பிரிவாகப் பிரித்து நோக்கப்படுகின்றன.

1. தலாக்

திருமணபந்தத்திலிருந்து ஒரு ஆண் தன் மனைவிக்கு விலக்களிப்பது தலாக் என்றழைக்கப்படுகின்றது. அவன் தன் மனைவியைப் பார்த்து நான் உனக்கு தலாக் கொடுக்கின்றேன் என்று கூறினால் அது ஒரு தலாக்காக நிரைவேறும். இத்தலாக் எழுத்துவடிவிலும் கொடுக்கப்பட முடியும்.

2. பஸ்கு

இதன் கருத்து திருமணம் ரத்து செய்யப்படுதல் என்பதாகும். உதாரணமாக கணவனும் மனைவியும் மஹ்ரம் என உறுதிசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அத்திருமணம் உடனடியாக ரத்து செய்யப்படும்.

3. குல்ஊ

ஒரு பெண் தன் கணவனுக்கு விவாக விலக்களித்து பிரிய நினைத்தால் அது குல்ஊ என்றழைக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் அவள் கணவன் தனக்களித்த மஹரைத் திருப்பிக்கொடுத்தே விவாகரத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும். இவையனைத்தும் ஒரு காழி (நீதிபதியின்) முன்னிலையிலே நடைபெற வேண்டும்.

- மனைவியை விட்டுப் பிரிவதற்கு கணவனுக்கு இருக்கின்ற உரிமை தலாக் என்றழைக்கப்படும்.
- கணவனை விட்டுப் பிரிவதற்கு மனைவிக்கு இருக்கின்ற உரிமை குல்ஊ என்றழைக்கப்படும்.

தலாக் விடுக்கப்படும் சந்தர்ப்பம் மற்றும் முறை என்பவற்றிற்கேற்ப அது இரண்டுவகைகளாக வகைப்படுத்தப்படும்.

சரியான வழிமுறை

பிழையான வழிமுறை

1. சரியான வழிமுறை (தலாக் சுன்னி)

பின்வரும் நியதிகளுக்கமைவாக தலாக் இடம்பெற வேண்டும்.

1) மனைவி மாதவிடாயிலிருந்து சுத்தமாக இருக்கின்ற பொழுது தலாக் மொழியப்படுதல்.
2) உடலுறவுத்தொடர்புகள் அவர்களுக்கு மத்தியில் இல்லாத சந்தர்ப்பத்தில் தலாக் கூறுதல்.
3) இரண்டாம் தலாக்கை அவள் மாதவிடாயிலிருந்து சுத்தமாக இருக்கும் பொழுது கூறுதல்.
4) மூன்றாம் தலாக்கை மூன்றாம் மாதம் அவள் மாதவிடாயிலிருந்து சுத்தமாக இருக்கின்ற பொழுது கூறுதல்.

- துஹ்ர் என்பது பெண் மாதவிலக்கிலிருந்து சுத்தமடைந்திருக்கின்ற காலப்பகுதியாகும்.
- ஒரே தடவையில் மூன்று தலாக்களையும் கூறுதல் அல்லது மாதவிடாயுடன் இருக்கும் போது தலாக் கூறுதல். அல்லது உடலுறவுத் தொடர்ப்புகள் இருக்கின்ற போது தலாக் கூறுதல் போன்றன தலாக் கூறுவதற்கான பிழையான வழிமுறைகளாக உள்ளன. இது தலாக்குல் பித்ஆ என்றழைக்கப்படும்.

**தலாக் ரஜ்ஈ**

இது தற்காவிக விவாகரத்தாகும். இதன்போது விரும்பினால் மீண்டும் சேர்ந்து வாழலாம். இதன் வடிவமானது உரிய முறையில் முதலாம் இரண்டாம் தலாக்கள் கூறப்பட்டு மனைவி இத்தா இருந்து சுத்தமடைந்த பின்னர் மூன்றாம் தலாக் சொல்வதற்கு முன்னரான காலமாகும். இதன் போது விரும்பினால் சேரலாம். இது தலாக் ரஜ்ஈ என்றழைக்கப்படும்.

**தலாக் பாஇன்**

தலாக் பாஇனில் இரண்டு கட்டங்கள் உண்டு. முதலவது உரிய முறையில் இரண்டு தலாக்குகள் கொடுக்கப்பட்டு, மனைவி உரிய முறையில் இத்தா அனுஷ்டித்த பின்னர் மூன்றாம் தலாக் கூறப்படாமலே அடுத்த மாதவிடாயிலிருந்து மனைவி சுத்தமடைவதாகும். இச்சந்தர்ப்பத்தில் இருவரும் நாடினால் ஒரு திருமண உடண்படிக்கையுடன் மீண்டும் சேர்ந்து வாழலாம். இது தலாக் பாஇனதுஸ் ஸுக்ரா (சிரிய விவாகரத்து) எனப்படும்.

இரண்டாவது வடிவம் உரிய முறையில் மூன்றாவது தலாக்கும் கூறப்பட்டு முடிவடைவதாகும். இது பாஇனதுல் குப்ரா (பெரிய விவாகரத்து) எனப்படும்.

கடைசி பெரிய விவாகரத்து (பாஇனதுல் குப்ரா) நிகழ்ந்த பின்னர் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ விரும்பினால் குறித்த மனைவி இன்னொருவரை உரிய முறையில் திருமணம் செய்து பின்னர் அவரிடமிருந்து உரிய முறையில் விவாகரத்து பெற்று இத்தா காலத்தை உரிய முறையில் அனுஷ்டித்ததன் பின்னரே முதலாம் கணவனுடன் மீண்டும் திருமண பந்தத்தில் இணையலாம்.

தலாகிற்கு இன்னும் சில பெயர்களும் அவற்றிற்குறிய வடிவங்களும் காணப்படுகின்றன.

1. லிஹார்
2. லிஆன்
3. ஈலாஉ

1. லிஹார்

மனைவியை உடல் ரீதியாக தன் தாய்க்கு ஒப்பிடுவதை இது குறிக்கின்றது. இவ்விழிவான செயலின்காரணமாக அவன் கட்டாயம் கப்பாரா கொடுக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களால் மீண்டும் சேர்ந்து வாழலாம். அவ்வாறு கப்பாரா கொடுக்கவில்லையாயின் அவன் உரிய முறையில் மனைவிக்கு தலாக் கொடுக்க வேண்டும்.

2. லிஆன்

இது தன் மனைவியின் மீது விபச்சாரப் பழி சுமத்துவதைக் குறிக்கின்றது.

3. ஈலாஊ

இது கணவன் தன் மனைவியுடன் இதன் பிறகு உடலுறவு கொள்ளவே மாட்டேன் என அல்லாஹ் தஆலா மீது சத்தியமிட்டுக் கூறுவதைக் குறிக்கின்றது. அவன் விரும்பினால் சத்தியத்தை முறித்து கப்பாரா கொடுத்து மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கு நான்கு மாதகால அவகாசம் கொடுக்கப்படும். அவன் விரும்பினால் அக்காலத்திற்குள் மனைவியை மீட்டிக்கொள்ளலாம். இல்லையெனில் மனைவிக்கு தலாக் கொடுக்கப்படும்.

**இத்தா**

இத்தா என்பதன் மொழிக் கருத்து எண்ணுதல் என்பதாகும்.

இத்தாவானது நிறைவேற்றப்படும் சந்தர்ப்பம் காரணம் என்பதைப்பொருத்து 3 மாதங்கள் அல்லது 4 மாதங்கள் 10 நாட்கள் என்ற அமைப்பைப் பெறும்.

இஸ்லாமிய ‘ரீஆவின் அடிப்படையில் ஒரு பெண் தலாக் கொடுக்கப்பட்டால் அல்லது அவளது கணவன் இறந்தால் அவள் கட்டாயம் இத்தா அனு‘டிக்க வேண்டும்.

இத்தா அனு‘டிப்பது அல்லாஹு‘ தஆலாவின் கட்டளை என்ற வகையில் அது ஒரு இபாதத்துமாகும்.

**இத்தாவின் பயன்கள்**

1. இது அல்லாஹ்வின் கட்டளை என்பதால் அதற்காக அவனின் நற்கூலி கிடைக்கும்.
2. இத்தாவின் போது மனைவி கற்பமாக இருந்தால் சந்தேகத்திற்கிடமின்றி அக்குழந்தையின் தந்தை யார் என தெறிந்துகொள்ளலாம்.
3. தலாக் ரஜ்இ உடைய காலத்தின் போது விரும்பினால் மீண்டும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**கணவன் இறந்த பெணணிற்குறிய இத்தா**

வயது வேறுபாடின்றி கணவன் இறந்த பெண் 4 மாதங்கள் 10 நாட்கள் இத்தா இருக்க வேண்டும்.

**கர்ப்பிணிக்குறிய இத்தா**

கணவன் இறக்கும் போது மனைவி கர்ப்பமாக இருந்தால் அவள் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை இத்தா அனு'டிக்க வேண்டும்.

**தலாக் ரஜ்ஈக்குறிய இத்தா அமைப்பு**

முதலாம் இரண்டாம் தலாக் கூறப்பட்ட பின் தொடர்ந்து மனைவி இத்தா இருக்க வேண்டும்.

இத்தா காலப்பகுதியிள் மனைவி தன்னை அழங்கரித்துக்கொள்ளவோ அல்லது திருமணம் முடிக்கவோ அல்லது திருமண பேச்சுவார்த்தையில் ஈடுபடவோ ஆவரணங்களை அணியவோ கூடாது.

இவ்வித்தா காலப்பகுதியில் மனைவிக்குறிய செலவீனங்களை (நபகா) கணவனின் பொறுப்பாகும்.

## 25.உலக வாழ்க்கைப் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்

பொதுவாக மனிதர்கள் இவ்வுலக வாழ்வு பற்றி பல வித்தியாசமான பார்வைகளைக் கொண்டவர்களாக உள்ளனர். சில மக்கட் குழுவினர் இவ்வுலக இன்பங்களை முற்றிலும் விட்டு ஒதுங்கியிருப்பதே வெற்றி பெறுவதற்கான வழி என்று கூறுகின்றனர். இன்னும் சிலரின் பார்வையாக, இவ்வுலக வாழ்வு எமக்கு கிடைத்த பரிசு இதை தவறவிட்டால் நாம் இன்னுமொரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டோம் எனவே எமது சக்திக்குட்பட்ட வகையில் இவ்வாழ்வை சிறப்பாக பயன்படுத்த வேண்டும் என்பதாக உள்ளது.

இஸ்லாத்தின் பார்வை நிச்சயமாக இவ்விரு தீவிர சிந்தனைகளாக இல்லை. வெற்றியின் பால் இட்டுச் செல்கின்ற நடுநிலமையான பர்வையே இஸ்லாம் எதிலும் எமக்கு கூறும் நற்செய்தியக உள்ளது.

உழைப்பு என்பது ஒரு சேவையாகும். மனிதனுக்கு வழங்கப்பட்ட 3 பொறுப்புக்களில் உழைப்பு ஒன்றான்றாகும். உழைப்பு இமாரத் என்ற பூமியை வளப்படுத்தல் என்ற பிரிவிற்குள் அடங்குகின்றது.

‘உலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை, பயபக்தியுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும். நீங்கள் இதைப்புரிந்துகொள்ள வேண்டாமா?’ (அல்குர்ஆன் 6:32)

‘உங்கள் பொருள்களும் உங்கள் மக்களும் (உங்களுக்குச்) சோதனைதான், ஆனால் அல்லாஹ் - அவனிடம் தான் மகத்தான (நற்) கூலியிருக்கின்றது’ (அல்குர்ஆன் 64:15)

இவ்வுலகில் இஸ்லாம் வழிகாட்டியுள்ள சரியான முறையில் எம் வாழ்வை அமைத்துக்கொள்வதன் மூலமே தான் மறு உலகில் எம்மால் வெற்றிபெற முடியும். மாறாக இவ்வாழிகாட்டல்களுக்கு மாற்றமாக எமது மனோ இச்சையின் படி வாழ்வை அமைத்துக்கொள்வோமேயாயின் எம்மால் மறுமையில் வெற்றி பெறவே முடியாது என்பதை உள்ளத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

# 26.இஸ்லாமியத் தொடர்பாடலும் ஊடகமும்

இன்றைய உலகில் தொடர்பாடல் மிகப் பலமான, வலுமிக்க ஊடகமாக காணப்படுகின்றது. அதன் புரட்சிகரமான மாற்றங்களை எம்மால் புரந்தள்ள முடியாது. இன்று ஊடகங்களைப் பயன்படுத்துவதினூடகா நூற்றுக்கணக்கான மனிதர்களை அடைய முடியும். ஊடகங்களுக்குறிய எடுத்துக்காட்டாக இலத்திரணியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களைக் குறிப்பிடலம்.

இஸ்லாமிய சட்டப்பரப்பின் மிக முக்கியமான அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆனும் சுன்னாவும் காணப்படுகின்றது. அலகுர்ஆன் எதற்கும் இரண்டாவதாக இல்லை.

நபி (ஸல்) அவர்கள் பல்வேறுபட்ட மன்னர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இஸ்லாத்தை பற்றியும் அதன்பால் அழைத்தும் கடிதங்கள் ஆனுப்பியுள்ளார்கள். இவ்வாரான கடிதங்களை அனுப்புமுகமாகவே கலீபா உமர் (ரழி) அவர்கள் தமது ஆட்சிக்காலத்தின் போது தீவானுல் பரீத் என்ற அஞ்சல் அலுவழகத்தை உருவாக்கினார்கள். உமையாக்களின் ஆட்சிக்காலத்தின் போது இவ்வலுவழகம் அஞ்சல் மற்றும் தகவல் காரியாலயமாக விஸ்தரிக்கப்பட்டு தீவானுல் பரீத் வல் அக்பார் என்றழைக்கப்பட்டது. அதேபோல் அக்காலத்தில் புறாக்களைப் பயன்படுத்தியும் தகவல் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

ஊடகங்களைப் பயன்படுத்தும் போது கருத்திற்கொள்ளவேண்டிய சில முக்கிய அம்சங்கள்:

1. புரிந்துகொள்ளுதல் மற்றும் ஆதாரங்களைத் திரட்டிவைத்திருத்தல்.
2. நேர்மையாக இருத்தல். நடந்துகொள்ளுதல்.
3. நடுநிலையான பாதையை தெறிவுசெய்து சரியான முறையில் செயற்படுதல்.
4. மக்களின் நலனை பாதுகாத்தல்.
5. நல்லது கெட்டதை பாதுகாத்தல்.

**உம்மத்திற்கான தூரநோக்கு**

உம்மத் என்பதன் கருத்து சமூகம் இனம் என்பதாகும். சமூகவியலறிஞர்கள் இதனை பின்வருமாறு விளக்குகின்றனர்.

‘பொதுவான ஒரு இலக்கினையும், பாரம்பரிய கலாச்சாரத்தினையும் அடிப்படைகளையும் பின்பற்றுகின்ற ஒரே பகுதியில் வசிக்கின்ற ஒரே இனக்குழுமத்திற்கு சொந்தமான பொதுவான அடிப்படைகளைக் கொண்ட ஐக்கியப்பட்ட சமூகமாகும்’

மனிதன் காலத்தோடு முன்னேறும் போது அவன் பலவேறு மாற்றங்களுக்கு உட்பட்டான். இதனால் அவனது சிந்தனைகளும் கருத்துக்களும்

மாற்றத்திற்குட்பட்டு சிறிய பல இனக்குழுமங்கள் உருவாகின. அல்லாஹு தஆலாவால் அனுப்பப்பட்ட நபிமார்களின் காரணமாக தோற்றம்பெற்ற இவ்வேறுபட்ட குழுக்கள் ஒன்றிணைந்தன.

இப்றாஹீம் (அலை) அவர்கள் நபிமார்களின் தந்தைதயாகவும் முஸ்லிம் உம்மத்திற்கான காரணியாகவும் இருக்கின்றார். நபி இப்றாஹீம் (அலை)யினதும் இஸமாஈல் (அலை)யினதும் கனவாக இஸ்லாமிய தேசத்தின் உருவாகம் இருந்தது. இஸ்லாமிய உம்மத் பிளவுபடுவதை நபி (ஸல்) அவர்கள் வெறுத்தார்கள். நபி (ஸல்) அவரகள் கூறினார்கள் ' எனது உம்மத் 73 குழுக்களாக பிரிவார்கள். அவர்களில் அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத் குழுவை தவிர மற்றை அனைத்து குழுக்களும் நரகத்தினுள் நுழைவார்கள்.' (இப்னு மாஜஹ்)

அல்குர்ஆனும் சுன்னாவும் முஸ்லிம் உம்மத்தை பாதுகாப்பதற்கும், அதிகரிப்பதற்கும் பல சிந்தனைகளையும் வழிமுறைகளையும் முன்வைத்துள்ளன. அவற்றுள் சில வருமாறு:

1. அல்குர்ஆனையும் சுன்னாவையும் மிகக்கவனமாக உறுதியாக பின்பற்றல்
2. தலைவருக்கு கட்டுப்பட்டு நடத்தல்.
3. ஜமாஅத்தாக செய்யப்படுகின்ற செயற்பாடுகளுக்கு கூடிய கவனம் செலுத்துதல்.
4. மாற்றுக்கருத்துக்கள் இருக்கும் பொழுது மசூறாவைப் பின்பற்றல்.
5. பள்ளிவாசல்கள் மனிதர்களை ஒன்று சேர்க்க வேண்டுமே தவிர அவர்களைப் பிரிக்கக்கூடாது.
6. சாந்தி சமாதானத்தைப் பேணல்.

நாம் இலங்கையர் என்ற வகையில் பின்பற்ற வேண்டிய சில படிப்பினைகள்.

1. தாய் நாட்மை நேசித்தல்
2. தாய் நாட்டின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்
3. தாய் நாட்டின் ஐக்கியத்திற்காக பாடுபடுதல்.
4. நாட்டின் சவால்களுக்கு முகம்கொடுத்தல்
5. சட்டத்தை பின்பற்றுதல், சமூகங்களின் சட்டங்களுக்கு மதிப்பளித்தல்
6. பொதுவான செயற்பாடுகளின்போது இன, மத, நிற வேறுபாடுகளை காட்டாதிருத்தல்.
7. சட்ட விரோதமான மற்றும் சமூகத்திற்கு பாதகமான செயல்களில் ஈடுபடாதிருத்தல்.
8. தேசிய மொழியைக் கற்றல்
9. பொதுவான இலக்கை பின்பற்றியொழுகல்.

OL/2015/16-T-I, II

46165

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 16 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

# இஸ்லாம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டைச் சுட்டும் அறபுப் பதம்
(1) ஷரிஆ (2) தீன் (3) பிக்ஹு (4) அகீதா

**2.** குப்ரு என்பது
(1) மதமாற்றம் (2) இறை நிராகரிப்பு (3) நயவஞ்சகம் (4) முகஸ்துதி

**3.** இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாப்பதற்கு உழைத்த அறிஞர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
(1) இமாம் மாலிக் (ரஹ்), இமாம் அபுல் ஹஸன் அல் - அஷ்அரி (ரஹ்), இமாம் ஸுஹ்ரி (ரஹ்)
(2) இமாம் மாதுரீதி (ரஹ்), இமாம் அபூஹனீபா (ரஹ்), இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)
(3) இமாம் அபுல் ஹஸன் அல் - அஷ்அரி (ரஹ்), இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்), இமாம் மாதுரீதி (ரஹ்)
(4) இமாம் அபுல்ஹஸன் அல் - அஷ்அரி (ரஹ்), இமாம் மாதுரீதி (ரஹ்), இமாம் ஸுஹ்ரி (ரஹ்)

**4.** சொல் சார்ந்த ரித்தத்திற்கு ஓர் உதாரணம்
(1) வட்டி எடுத்தல் (2) நபிமார்களை அவமதித்துப் பேசுதல்
(3) அல்-குர்ஆனை எரித்தல் (4) அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாதிருத்தல்

**5.** அல்-மாஉத்தஹூர் என்பது
(1) சுத்தமாக்கும் தன்மை கொண்ட நீர் (2) சுத்தமான நீர்
(3) பயன்படுத்தப்பட்ட நீர் (4) அசுத்தமான நீர்

**6.** குல்லதைனுக்கு குறைந்த நீரில் ஒரு நஜீஸ் விழுந்துள்ளது. இருப்பினும் அதன் சுவை, நிறம், மணம் என்பவற்றில் எந்த மாற்றமும் நிகழவில்லை. இந்நீரை வுழுச் செய்வதற்கு
(1) பொதுவாகப் பயன்படுத்தலாம்.
(2) பயன்படுத்தக் கூடாது.
(3) பயன்படுத்தாதிருப்பது நல்லது.
(4) நிர்ப்பந்தமான சந்தர்ப்பத்தில் மட்டும் பயன்படுத்தலாம்.

**7.** பின்வருவனவற்றுள் பர்ளு கிபாயாவான ஒரு செயல்
(1) ஐங்காலத் தொழுகை (2) ரமழான் நோன்பு
(3) ஹஜ்ஜு வணக்கம் (4) சமூக நலச் செயற்பாடு

**8.** "நிச்சயமான தொழுகை மானக்கேடானவற்றிலிருந்து தடுக்கின்றது" என்பது
(1) அல்-குர்ஆனின் கூற்று (2) நபி (ஸல்) அவர்களது கூற்று
(3) ஒரு சஹாபியின் கூற்று (4) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கூற்று

**9.** ஸகாத் நிஸாபை அடைந்த நிலையில் ரூபா 500 000 இலங்கை நாணயத்தை வைத்திருக்கும் ஒருவர் வருட இறுதியில் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு
(1) ரூபா 10 000 (2) ரூபா 12 500 (3) ரூபா 15 000 (4) ரூபா 17 500

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**10.** சுன்னத்தான நோன்புகளில் ஒன்று
(1) ரமழான் நோன்பு (2) கழா நோன்பு
(3) அரபா நோன்பு (4) கப்பாரா நோன்பு

**11.** ஒருவரிடம் ஒரு வருடம் முழுவதும் 121 ஆடுகள் இருப்பின் அவர் ஸகாத்தாக கொடுக்க வேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை
(1) ஒன்று (2) இரண்டு
(3) மூன்று (4) நான்கு

**12.** ஹஜ்ஜுக்கு இஹ்ராம் நிய்யத்து வைத்தவர் செய்ய **அனுமதிக்கப்படாத** ஒரு செயல்
(1) குளித்தல் (2) புறம் பேசுதல்
(3) மணம் பூசுதல் (4) சுன்னத்தான தொழுகையை நிறைவேற்றல்

**13.** இறந்த கணவனுக்காக 'இத்தா' அனுஷ்டிக்கும் பெண் கட்டாயம் தவிர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம்
(1) உழைக்கச் செல்லல் (2) வைத்தியரைச் சந்தித்தல்
(3) மணம்முடித்தல் (4) உணவு சமைத்தல்

**14.** இஸ்லாமிய ஆட்சியின் நான்காம் கலீபாவாகப் பதவியேற்றவர்
(1) அபூபக்ர் (ரலி) (2) உமர் (ரலி)
(3) உஸ்மான் (ரலி) (4) அலி (ரலி)

**15.** இலங்கை முஸ்லிம்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு நூல்
(1) கலீலா வதிம்னா (2) அஜாகிபுல் ஹிந்த்
(3) தஸ்கிரதுல் ஹுப்பால் (4) பிக்ஹுஸ்சுன்னா

**16.** 'இஜ்திஹாத்' என்ற சொல்லின் கருத்து
(1) ஒன்றுகூடுதல் (2) முயற்சித்தல்
(3) ஒருமித்த கருத்தைப் பெறல் (4) ஒப்பு நோக்குதல்

**17.** இஸ்லாமிய சட்டக்கலையைக் குறிக்கும் அறபுச் சொற்றொடர்
(1) இல்முல் பிக்ஹு (2) இல்முத் தப்ஸீர்
(3) இல்முல் அகீதா (4) இல்முல் மீராஸ்

**18.** 'மருத்துவத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர்
(1) அல்-குவாரிஸ்மி (2) இப்னு பர்னாஸ்
(3) அல்-கிந்தி (4) அலி இப்னு சீனா

**19.** ழஈப் ஆன ஹதீஸ் என்பது
(1) ஆதாரபூர்வமான ஹதீஸ் (2) பலவீனமான ஹதீஸ்
(3) புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ் (4) உறுதியான ஹதீஸ்

**20.** தொழுகையில் 'துஆஉல் இஸ்திப்தாஹ்' ஓதும் சந்தர்ப்பம்
(1) முதல் தக்பீரின் பின்னர் (2) ருகூவின் போது
(3) சுஜூதின் போது (4) நடு இருப்பின் போது

**21.** அப்பாஸிய கிலாபத்தின் முதல் கலீபா
(1) முஆவியா (ரலி) (2) ஹாரூன் அர்-ரஷீத்
(3) அபுல் அப்பாஸ் அஸ்ஸப்பா (4) முதலாம் அப்துர் ரஹ்மான்

**22.** ஆலிமுல் குறைஷ் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இமாம்
(1) இமாம் அபூஹனீபா (ரஹ்) (2) இமாம் மாலிக் (ரஹ்)
(3) இமாம் ஷாபிஈ (ரஹ்) (4) இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் (ரஹ்)

**23.** உமையாக்களைத் தொடர்ந்து இஸ்லாமிய ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள்
(1) முகலாயர்கள் (2) உஸ்மானியர்கள்
(3) அப்பாஸியர்கள் (4) பாதிமீக்கள்

**24.** அறபு மொழியை அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்திய உமைய வம்ச கலீபா
(1) கலீபா யஸீத் (2) உமரிப்னு அப்துல் அஸீஸ்
(3) அப்துல் மலிக் (4) வலீத்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

**25.** ஒரு பிரிவினரின் மூலதனமும் மற்றொரு பிரிவினரின் உழைப்பும் இணைந்த பொருளாதாரச் செயற்பாடு
(1) முழாரபா (2) முஷாரகா (3) முஸாரஆ (4) முராபஹா

**26.** 'கியாஸ்' என்ற சட்ட மூலாதாரத்தின் ருகூன்கள்
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

**27.** தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் 'இத்தா'காலம்
(1) 40 நாட்கள் (2) நான்கு மாதங்களும் 10 நாட்களும்
(3) மூன்று சுத்தங்கள் (4) பிரசவம் வரை

**28.** பூமியை வளப்படுத்தும் செயற்பாடு
(1) இமாரத் (2) கிலாபத் (3) த.'.வத் (4) ரிஸாலத்

**29.** திருமண ஒப்பந்தத்திலிருந்து கணவன் மனைவியைச் சட்டரீதியாகப் பிரிவது
(1) பஸ்கு (2) குல்உ (3) ஈலாஉ (4) தலாக்

**30.** கலீபா அபூபக்ர் (ரலி) ஆலோசனைப்படி அல்-குர்ஆனைத் தொகுக்கும் பணியை மேற்கொண்ட நபித் தோழர்
(1) இப்னு அப்பாஸ் (ரலி) (2) ஸைதுபின் ஸாபித் (ரலி)
(3) முஆதுப்னு ஜபல் (ரலி) (4) இப்னு மஸ்ஊத் (ரலி)

**31.** பத்ருப் போரில் கலந்து கொண்ட சஹாபிகளின் எண்ணிக்கை
(1) 300 (2) 313 (3) 1000 (4) 1[illegible]00

**32.** மக்கா வெற்றி இடம்பெற்ற ஆண்டு
(1) ஹிஜ்ரி: 5 (2) ஹிஜ்ரி: 6 (3) ஹிஜ்ரி: 7 (4) ஹிஜ்ரி: 8

**33.** நோன்பு கடமையாக்கப்பட்ட ஆண்டு
(1) ஹிஜ்ரி: 1 (2) ஹிஜ்ரி: 2 (3) ஹிஜ்ரி: 3 (4) ஹிஜ்ரி: 6

**34.** மினா, ஸபா, மர்வா, முஸ்தலிபா ஆகிய இடங்களுடன் தொடர்புபடும் வணக்கம்
(1) உம்ரா (2) ஸவ்ம் (3) ஹஜ் (4) ஸலாத்

**35.** நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலம்
(1) 10 வருடங்கள் (2) 40 வருடங்கள் (3) 53 வருடங்கள் (4) 63 வருடங்கள்

**36.** 'கிதாபுல் ஹயவான்' என்ற நூலின் ஆசிரியர்
(1) அல்ஜாஹிஸ் (2) அர்-ராஸி (3) இப்னு நபீஸ் (4) கலன்

**37.** கீழே 'அ' நிரலில் நூலாசிரியர்கள் சிலரின் பெயர்களும் 'ஆ' நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) - இமாம் ஷாபிஈ (ரஹ்) | A - முஅத்தா |
| (ii) - இமாம் அபூஹனீபா (ரஹ்) | B - ஸஹீஹுல் புஹாரி |
| (iii) - இமாம் புஹாரி (ரஹ்) | C - கிதாபுல் உம்மு |
| (iv) - இமாம் மாலிக் (ரஹ்) | D - பிக்ஹுல் அக்பர் |

மேலே 'ஆ' நிரலிலுள்ள நூல்களின் பெயர்களை 'அ' நிரலிலுள்ள நூலாசிரியர்களின் பெயர்களுடன் ஒழுங்க முறையில் தொடர்புபடுத்தினால் பெறும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) A C B D (2) A C D B (3) B D A C (4) C D B A

● **38** முதல் **40** வரையுள்ள வினாக்களுக்கு கீழ்வரும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

மரணப் படுக்கையில் இருக்கும் ஒருவர் தனக்குச் சொந்தமான ஆறு இலட்சம் ரூபாவிலிருந்து 1/2 பகுதியை தர்மம் செய்யுமாறும் மீதியுள்ள பணத்தை உறவினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்குமாறும் கட்டளையிட்டு விட்டு மரணித்துவிட்டார். இங்கு

**38.** தர்மம் என்பதைக் குறிக்கும் அறபுச் சொல்
(1) நுஸ்ரத் (2) வக்பு (3) ஸதகா (4) தஸ்கியா

**39.** தர்மம் செய்யுமாறு அம்மனிதர் கட்டளையிட்டதைச் சுட்டும் அறபுச் சொல் யாது ?
(1) வராஸத் (2) வஸிய்யத் (3) வகாலத் (4) அமானத்

**40.** இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் அம்மனிதரின் முழுச் சொத்திலிருந்தும் தர்மம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை
(1) ஒரு இலட்சம் ரூபா (2) இரண்டு இலட்சம் ரூபா
(3) இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (4) மூன்று இலட்சம் ரூபா

* *

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
**16 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

※ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) ஈமானியப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) நாம் தினமும் ஓத வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட **இரண்டு** சூராக்களை எழுதுக.

(iii) இரவில் நிறைவேற்றப்படும் சுன்னத்தான தொழுகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) ஸகாத் பெறத் தகுதியான **இரண்டு** பிரிவினரைப் பெயரிடுக.

(v) இஸ்லாம், பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர்கள் **இருவரது** பெயர்களைத் தருக.

(vii) பொருளீட்டலின்போது தடை செய்யப்பட்டுள்ள **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(viii) 'ஷிர்க் அஸ்கருக்கு' **இரண்டு** உதாரணங்கள் தருக.

(ix) ஆண்களுக்கு மணம்முடிக்க ஹராமான **நான்கு** உறவினர்களைப் பெயரிடுக.

(x) அநந்தரச் சொத்தில் பங்கு பெறத் தகுதியான **இருவரைக்** குறிப்பிடுக.

**2.** (i) ஈமானைப் பலவீனப்படுத்தும் காரணிகள் **இரண்டை** எழுதுக.

(ii) நம்பிக்கை சார்ந்த குப்ருக்கு **மூன்று** உதாரணங்கள் தருக.

(iii) 'தயம்மும்' செய்யும் முறையை விளக்குக.

**3.** (i) திருமணத்தின் 'பர்ளுகள்' **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) பிள்ளைகள் தம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் **மூன்றை** எழுதுக.

(iii) தொழுகையின் முக்கியத்துவத்தை விபரிக்க.

**4.** (i) இஸ்லாத்தின் துணை மூலாதாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) ஹதீஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கு ஆதாரங்கள் **மூன்று** தருக.

(iii) ஸகாத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

**5.** (i) ஒரு முஜ்தஹித் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) பிரதான குற்றச்செயல் **மூன்றையும்** அவற்றிற்குரிய தண்டனைகளையும் குறிப்பிடுக.

(iii) ஹுதைபிய்யா உடன்படிக்கையின் நிபந்தனைகள் **ஐந்தைச்** சுருக்கமாக விளக்குக.

**6.** (i) ஒரு வியாபாரம் அங்கீகரிக்கப்படுவதற்கு வியாபாரப் பொருள் பெற்றிருக்க வேண்டிய தன்மைகள் **இரண்டை** எழுதுக.

(ii) இஸ்லாம் தடை விதித்துள்ள உணவு வகைகள் **ஆறைக்** குறிப்பிடுக.

(iii) ஹிஜ்ரத் நிகழ்வை விபரிக்க.

**7.** (i) ஆரம்பத்தில் இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்த இடங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ii) தேசிய நலனுக்கு இலங்கை முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பங்களிப்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) இஸ்லாமிய கிலாபத்தில் உமையாக் காலப்பிரிவில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் **ஐந்தைச்** சுருக்கமாக விபரிக்குக.

※ ※ ※

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

31465

OL/2016/16-T-I, II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2016**

| | |
|---|---|
| ඉස්ලාම් | I, II |
| இஸ்லாம் | I, II |
| Islam | I, II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## இஸ்லாம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதலாவது 'வஹி' இறங்கிய இடம்
(1) ஸபா (2) மர்வா (3) ஹிறா (4) ஸவ்ர்

**2.** ஒரு மு.்.மின் நிறைவேற்ற வேண்டிய பணிகளுள் 'இமாரத்' குறிப்பது
(1) அல்லாஹ்வின் பிரதிநிதியாகத் தொழிற்படுவதனை
(2) பூமியை வளப்படுத்துவதனை
(3) அல்லாஹ்வை வழிபடுவதனை
(4) இறை சட்டங்களை அமுல்நடத்துவதனை

**3.** 'துஆஉல் இஸ்திப்தாஹ்' ஓதப்படும் சந்தர்ப்பம்
(1) அத்தஹிய்யாத்தின் பின்
(2) ருகூஉவிலிருந்து எழுந்ததும்
(3) ஸுஜூத்தின் பின் நடு இருப்பில்
(4) தக்பீர் தஹ்ரீமுக்குப் பின்

**4.** 'இல்ஹாத்' என்ற அறபுப் பதம் எதனைச் சுட்டும் ?
(1) நாத்திகம் (2) நயவஞ்சகம் (3) விசுவாசம் (4) நிராகரிப்பு

**5.** பின்வருவனவற்றுள் நெருக்கமான ஒத்த கருத்தைக் கொண்ட சோடி எது ?
(1) கல்புன் ஸலீம் - கல்புல் முத்மஇன்னா
(2) ஸஹீஹ் - ழஈப்
(3) முஜ்தஹித் - முகல்லித்
(4) துன்யா - ஆகிறா

**6.** பின்வருவோரில் 'அஜ்னபி' ஆனவர் யார் ?
(1) மனைவியின் தாய் (2) செவிலித் தாய் (3) மகனின் மனைவி (4) மாமியின் மகள்

**7.** சட்டத்துறை சார்ந்த விடயங்களைச் சுட்டும் கலை
(1) இல்முல் பராஇழ் (2) இல்முல் அகீதா (3) இல்முல் பிக்ஹ் (4) இல்முன் நப்ஸ்

**8.** தடைசெய்யப்பட்ட வர்த்தக நடவடிக்கை
(1) அல்-முழாரபா (2) அல்-முஷாரகா (3) அல்-இஜாரா (4) அர்-ரிபா

**9.** ஸாலிம், பணத்தால் செய்யப்படும் சுன்னத்தான 'அமல்' ஒன்றை நிறைவேற்ற முயற்சித்தபோது, அவனது அயல் கிராம மக்கள் வெள்ளத்தில் சிக்குண்டு பிறரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இந்நிலையில் ஸாலிமை வழிநடத்தப் பொருத்தமான கூற்றாக அமைவது பின்வருவனவற்றுள் எது ?
(1) கவலைப்படாதே, அனர்த்தங்கள் இயற்கையானவை; நீ உனது விருப்பத்தை நிறைவேற்று.
(2) நீ உனது பணத்தைக் கொடுக்க வேண்டியதில்லை; அரச சார்பற்ற நிறுவனங்கள் ஓடி வந்துவிடும்;அல்லாஹ்வுடைய பாதையில் சென்று வா.
(3) நீ மேற்கொள்ளப் போவது ஒரு சுன்னத்தான விடயம். எமது உடன்பிறப்புகள் கஷ்டத்தில் இருக்கின்றனர்; உனது பணத்தைக் கொண்டு அம்மக்களுக்கு உதவி செய்.
(4) உண்மைதான், இது ஒரு சிக்கலான விடயம். உனது மைத்துனன் நிரந்தரத் தொழிலின்றி அவதிப்படுகிறான். அப்பணத்தை அவனுக்கு வழங்கிவிடு; அந்தக் குடும்பத்தைக் கவனித்தது போல் ஆகிவிடும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

10. "இவ்வுலக வாழ்வு வேடிக்கையும் வீண் விளையாட்டுமாகும். நிச்சயமாக மறுமை வாழ்வே நிலையானது" என்ற கூற்று
(1) அல்-குர்ஆனுடையது. (2) அல்-ஹதீஸுடையது.
(3) ஸஹாபாக்களுடையது. (4) இமாம்களுடையது.

11. கீழே 'அ' பிரிவில் ஹஜ் தொடர்பான செயற்பாடுகளும் 'ஆ' பிரிவில் தரங்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) ஆண்கள் தலையை மறைப்பது | A - வாஜிபு |
| (ii) புத்தி சுயாதீனமாய் இருப்பது | B - பர்ளு |
| (iii) 'தவாபுல் விதாவை' நிறைவேற்றுவது | C - முஹர்ரமாத் |
| (iv) துல்ஹஜ் 9 இல் அறபாவில் தரிப்பது | D - ஷர்த்து |

'ஆ' நிரலை 'அ' நிரலுடன் இணைக்கும்போது கிடைக்கப்பெறும் சரியான விடை
(1) A, C, B, D (2) B, A, D, C (3) C, D, A, B (4) D, B, C, A

12. 'இக்லாஸ்' என்ற சொல்லின் மூலம் உணர்த்தப்படுவது
(1) பேணுதல் (2) பற்றற்ற வாழ்வு (3) உளத்தூய்மை (4) இறையச்சம்

13. முதலில் அருளப்பட்ட அல்-குர்ஆன் வசனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள ஸூரா
(1) அல்-அலக் (2) அல்-கஹ்பு (3) அல்-பலத் (4) அல்-பகரா

14. 'பித்ரா' நிறைவேற்றப்பட வேண்டிய நாள்
(1) ஷவ்வால் 1 (2) துல்ஹஜ் 10 (3) ரஜபு 27 (4) ரமழான் 27

15. நான் யார் ?, எங்கிருந்து வந்தேன் ? போன்ற வினாக்களுக்குச் சரியான விடையைத் தருவது
(1) புலனறிவு (2) பகுத்தறிவு
(3) வஹி அறிவு (4) விஞ்ஞான அறிவு

16. வர்த்தகர் ஒருவர் வர்த்தகத்தை ஆரம்பித்து ஒரு வருட கால இறுதியில் கையிலுள்ள ரூ. 850 000/- இருப்பில் இருப்பதைக் கண்டார். அவ்வருட நிஸாப்பின் அளவு ரூ. 450 000/- ஆக இருந்தது. அவர் செலுத்த வேண்டிய சகாத்தின் அளவு யாது ?
(1) ரூ. 10 000/- (2) ரூ. 11 250/- (3) ரூ. 21 250/- (4) ரூ. 42 500/-

17. கிலாபதுர் ராஷிதாவைத் தொடர்ந்து இஸ்லாமிய ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள்
(1) உமையாக்கள் (2) அப்பாஸியர் (3) உஸ்மானியர் (4) பாத்திமீக்கள்

18. கர்ப்பிணித் தாயொருவரின் இத்தாக் காலம் எவ்வளவு ?
(1) பிரசவம் நிகழும் வரை (2) 4 மாதங்கள் 10 நாட்கள்
(3) 3 மாதங்கள் (4) இத்தா கிடையாது

19. 'ஹனீப்கள்' எனப்பட்டவர்கள்
(1) ஜாஹிலிய்யாக் காலத்தில் வாழ்ந்த இணை வைப்பில் ஈடுபடாதவர்கள்
(2) சுவனம் நன்மாராயம் கூறப்பட்டவர்கள்
(3) ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டவர்கள்
(4) மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்கள்

20. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலில் எழுதியவர்
(1) இபுனு இஸ்ஹாக் (2) இபுனு ஹிஷாம்
(3) இபுனு கஸீர் (4) இபுனு கல்லிகான்

21. ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்களின் இணைப்பைக் கொண்ட கூட்டு வியாபாரம் எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) முழாரபா (2) முஷாரகா (3) முதாரஆ (4) முராபஹா

22. அகீதாவை பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த குழுவினர்
(1) அல்-முஃதஸிலா (2) அல்-முர்ஜிஆ (3) அஷ்-ஷீஆ (4) அல்-ஜபரிய்யா

23. மனிதன், ஏனைய மனிதர்களுக்குச் செய்ய வேண்டியவை
(1) ஹக்குல்லாஹ் (2) ஹக்குன் நப்ஸ் (3) ஹக்குல் இபாத் (4) ஹக்குல் ஜார்

24. பின்வருவனவற்றுள் 'மறுமை நாளைச்' **சுட்டாதது**
(1) யவ்முல் ஆகிறா (2) யவ்முன் நஹ்ர் (3) யவ்முல் கியாமா (4) யவ்முத் தீன்

25. அஹமத் தனது தந்தைக்கு, பாத்திரமொன்றில் தண்ணீர் கொண்டு சென்றான். திடீரென்று தேநீர் கோப்பையுடன் அங்கு வந்த அவனது சகோதரி நஸீமாவுடன் மோதவே அவர் கொண்டுவந்த தேநீர் அஹமதின் தண்ணீர்ப் பாத்திரத்தில் கொட்டியது. இந்த நீர் எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) 'அல்-மாஉத் தாஹிர்' என்றாகும். (2) 'அல்-மாஉத் தஹூர்' என்றாகும்.
(3) 'அல்-மாஉல் முஸ்தஃமல்' என்றாகும். (4) 'அல்-மாஉன் னஜிஸ்' என்றாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

**26.** அல்-குர்ஆனில் 'தர்தீபுன் நுஸூல்' என்பது
(1) அல்-குர்ஆன் தற்போது தொகுக்கப்பட்டுள்ள ஒழுங்கு
(2) அல்-குர்ஆன் நபியவர்களுக்கு அருளப்பட்ட ஒழுங்கு
(3) அல்-குர்ஆன் குறிப்பிடுகின்ற சட்டவிதிகள்
(4) அல்-குர்ஆனை விளங்கிக்கொள்வதற்கான வழிமுறை

**27.** 'தஸ்கியா' எனப்படுவது
(1) பேணுதல் (2) பற்றற்ற வாழ்வு (3) சுத்தம் செய்தல் (4) தூய எண்ணம்

**28.** பின்வருவனவற்றுள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களைச் சுட்டும் தொடர்
(1) ரப்புன்னாஸ் (2) ஹுதன் லின்னாஸ் (3) ரப்புல் ஆலமீன் (4) ரஹ்மதன் லில் ஆலமீன்

**29.** "குல்-ஹுவல்லாஹு அஹத்..." என்ற வசனங்களுடன் அமைந்துள்ள ஸூராவின் பெயர்
(1) ஸூரதுல் கவ்ஸர் (2) ஸூரது யூஸுப் (3) ஸூரதுல் இக்லாஸ் (4) ஸூரதுன்னாஸ்

**30.** 'மஹர்' எனப்படுவது
(1) பெண் தரப்பு ஆண் தரப்புக்கு வழங்கும் நன்கொடை
(2) ஆண் தரப்பு பெண் தரப்புக்கு வழங்கும் நன்கொடை
(3) அடமானமாக வைக்கப்படும் பொருட்கள்
(4) புதுமணத் தம்பதியினருக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட்கள்

**31.** நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இளம்பராயத்தில் 'அல்-அமீன்' என அழைக்கப்பட்டமைக்கான காரணம்
(1) உண்மை உரைத்தமை (2) சமூகப்பணி செய்தமை
(3) அநாதையாக வளர்ந்தமை (4) நம்பிக்கையாக நடந்து கொண்டமை

**32.** கீழே **'அ'** நிரலில் நூலாசிரியர்கள் சிலரின் பெயர்களும் **'ஆ'** நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) இமாம் மாலிக் (ரஹ்) | A - அர்-ரிஸாலா |
| (ii) இமாம் அஹ்மத் (ரஹ்) | B - முஅத்தா |
| (iii) இமாம் ஷாபிஈ (ரஹ்) | C - அல்-பிக்ஹுல் அக்பர் |
| (iv) இமாம் அபூஹனீபா (ரஹ்) | D - முஸ்னத் அஹ்மத் |

மேலே **'ஆ'** நிரலிலுள்ள நூல்களின் பெயர்கள் **'அ'** நிரலிலுள்ள நூலாசிரியர்களின் பெயர்களுடன் ஒழுங்குமுறையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள விடை யாது ?
(1) A, B, D, C (2) B, C, D, A (3) B, D, A, C (4) D, B, C, A

**33.** தயம்முமின் உறுப்புகள் யாவை ?
(1) முகமும் இரு கால்களும் (2) முகமும் இரு கைகளும்
(3) முகமும் தலையும் (4) முகம், தலை, இரு கைகள் ஆகியன

**34.** நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அறபு நாட்டின் கிழக்கு எல்லை
(1) சிரியா பாலைவனம் (2) அறபுக்கடல் (3) பாரசீக வளைகுடா (4) செங்கடல்

**35.** திருமணம் தவிர்ந்த ஈஜாப், கபூல் இடம்பெறுகின்ற பிறிதொரு சந்தர்ப்பம்
(1) அரச ஊழியம் (2) கொடுக்கல் வாங்கல் (3) மக்கள் சேவை (4) குடிசைக் கைத்தொழில்

**36.** அஜ்னபியான ஒருவனுடன் பெண்ணொருவர் தனித்திருப்பது
(1) மக்றூஹ் (2) ஜாஇஸ் (3) ஹறாம் (4) முஸ்தஹப்

**37.** இஸ்லாத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள மூன்று வணக்கஸ்தலங்களுள் **உள்ளடங்காதது**
(1) கஃபதுல்லாஹ் (2) மஸ்ஜிதுல் அக்ஸா (3) மஸ்ஜிதுன்னபவி (4) மஸ்ஜித் கிப்லதைன்

**38.** எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்
(1) உமர் ஹஸரத் (2) காலித் பின் பகாயா (3) ஒறாபி பாஷா (4) இபுனு பதூதா

**39.** கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அதிபராகவும் அரசியல் பிரமுகராகவும் இருந்து நாட்டுக்குப் பணியாற்றியவர்
(1) சித்தி லெவ்வை (2) ஐ. எல். எம். ஏ. அஸீஸ்
(3) கலாநிதி T. B. ஜாயா (4) டபிள்யூ. எம். அப்துர் ரஹ்மான்

**40.** 'கழா-கத்ர்' மீது **அவநம்பிக்கை** கொள்பவனின் நிலை
(1) பாஸிக் (2) முர்தத் (3) முனாபிக் (4) காபிர்

* *

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

* **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) வஹ்யின் பிரிவுகள் **இரண்டையும்** பெயரிடுக.

(ii) தொழுகை மூலம் முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற முடிந்த பாவங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) இஸ்லாம் அனுமதித்துள்ள வர்த்தக முயற்சிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) அலி (ரலி) அவர்களிடம் காணப்பட்ட ஆளுமைப் பண்புகள் **இரண்டை** எழுதுக.

(v) தொழுகையில் 'ஓதுதல்' மூலம் நிறைவேற்றப்படும் பர்ளுகள் **இரண்டையும்** பெயரிடுக.

(vi) கலீபாக்களான அபூபக்ர் (ரலி), உஸ்மான் (ரலி) ஆகியோர் அல்குர்ஆன் தொகுப்பில் ஈடுபடத் தூண்டுதலாக இருந்த **இரண்டு** ஸஹாபிகளும் யாவர் ?

(vii) ஜாஹிலிய்யாக் கால மக்கள் பேணிவந்த நற்பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(viii) ஈஜாப், கபூல் எனும் பதங்கள் சுட்டும் கருத்துக்கள் யாவை ?

(ix) இஜ்மா'வின் பிரதான வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) பொருளீட்டலின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய ஷரீஅத் வழிமுறைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

**2.** (i) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் என்ற தொடரின் மூலம் விளக்கப்படுவது யாது ?

(ii) இல்முல் அகீதாவின் தோற்றத்துக்கான பின்னணியைக் குறிப்பிடுக.

(iii) வழிபிறழ்ந்த அகீதா பிரிவுகள் பற்றி விவரிக்குக.

**3.** (i) நபியவர்களின் மக்கா காலத் த'வாவில் அவருக்குத் துணையாக இருந்தோர் யாவர் ?

(ii) நபியவர்களின் த'வாவைத் தடுக்க, குறைஷியர் கையாண்ட வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

(iii) இரண்டாவது அகபா உடன்படிக்கை பற்றி விவரிக்குக.

**4.** (i) 'பிக்ஹுல் அவ்லவிய்யாத்' உணர்த்தும் கருத்து யாது ?

(ii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் கொண்டுள்ள தனித்துவப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

(iii) நாளாந்த வாழ்வில் ஏற்படக்கூடிய இக்கட்டான நிலையொன்றைக் குறிப்பிட்டு, அதன்போது முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய விடயம் பற்றி விளக்குக.

**5.** (i) "துஆ ஒரு வணக்கம்" என்பதன் மூலம் கருதப்படுவதென்ன ?

(ii) ஸுபஹுத் தொழுகையின் பின் ஓத வேண்டுமென்று நபியவர்கள் கற்றுத் தந்த **மூன்று** துஆக்களையும் குறிப்பிடுக.

(iii) தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் எனும் பதங்களைத் தெளிவுபடுத்துக.

**6.** (i) 'உம்மத்' என்பதன் கருத்தை எழுதுக.

(ii) குடும்ப உறவின் மூலம் உருவாகும் மஹ்ரமீக்களைப் பற்றி விளக்குக.

(iii) அஜ்னபீக்களுடனான கலந்துரையாடலின்போது பேண வேண்டிய ஒழுங்குமுறைகளை விவரிக்குக.

**7.** பின்வருவனவற்றுள் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) நீரின் வகைகளும் அவற்றின் பயன்பாடும்

(ii) இலங்கையில் முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு

(iii) ஈகையின் பயன்பாடுகள்

(iv) நடுநிலை பேணல் (வஸதிய்யா)

* * *

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

40071

OL/2017/16-T-I, II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | | | |
|---|---|---|---|
| ඉස්ලාම් | I, II | | පැය තුනයි |
| இஸ்லாம் | I, II | | மூன்று மணித்தியாலம் |
| Islam | I, II | | *Three hours* |

## இஸ்லாம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதன்முதலாக அருளப்பட்ட வசனம்
(1) பிஸ்மில்லாஹி (2) அலிப் லாம் மீம் (3) இக்ர.:. (4) யாஸீன்

**2.** நபிமார்கள் பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றவர்கள் என்பதைச் சுட்டும் பதம்
(1) மு.:.ஜிஸாத் (2) இஸ்மத் (3) ரஹ்மத் (4) ஹிதாயத்

**3.** முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விடுதலை பெற்ற அடிமை
(1) அம்மார் (ரழி) (2) பிலால் (ரழி)
(3) ஸைத் (ரழி) (4) முஸ்அப் (ரழி)

**4.** கீழே **'அ'** நிரலில் சில சொற்களும் **'ஆ'** நிரலில் அவற்றின் கருத்துக்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) ரிபா | A - முற்பணக் கொடுப்பனவு |
| (ii) ஸலம் | B - வாடகைக்கு விடல் |
| (iii) இஜாரா | C - கூட்டுப்பங்காண்மை |
| (iv) முஷாரகா | D - வட்டி |

இங்கு **'அ'** நிரலுக்கமைய **'ஆ'** நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A B C D (2) B D A C (3) C B D A (4) D A B C

**5.** 'இக்லாஸ்' எனும் பதம் குறிப்பது
(1) பேணுதல் (2) இறையச்சம் (3) உளத்தூய்மை (4) பற்றற்ற வாழ்வு

**6.** சட்டத்துறைசார் விடயங்களோடு தொடர்புபடும் கலை
(1) இல்முல் பராஇழ் (2) இல்முல் பிக்ஹ் (3) இல்முன்னப்ஸ் (4) இல்முல் அகீதா

**7.** இரண்டு விடயங்களைக் கொண்டு தன்னிடம் உதவி கோருமாறு அல்லாஹ் அல்-குர்ஆனில் ஒரு வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். அவற்றுள் ஒன்று தொழுகை, மற்றையது
(1) திலாவதுல் குர்ஆன் (2) ஸதகா (3) பொறுமை (4) நோன்பு

**8.** 'தக்பீரதுத் தஹ்ரீமா' என்பது
(1) அல்லாஹு அக்பர் (2) தொழுகைக்காகக் கட்டப்படும் முதல் தக்பீர்
(3) ஹஜ் காலத்தில் ஓதப்படும் தல்பியா (4) நபியவர்களால் நாளாந்தம் ஓதப்பட்ட துஆக்கள்

**9.** இரத்த உறவுக்குள் அடங்கும் மஹ்ரமி
(1) தந்தையின் சகோதரி (2) மருமகள் (3) மனைவியின் சகோதரி (4) மனைவியின் மகள்

**10.** பின்வருவனவற்றுள் குலபாஉர் ராஷிதூன்கள் தொடர்பான **பிழையான** கூற்று
(1) சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்டவர்கள்.
(2) நபிகளாருடன் திருமண உறவைக் கொண்டவர்கள்.
(3) தனித்தனியாக சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்கள்.
(4) மதீனாவை தமது தலைநகரமாக கொண்டவர்கள்.

**11.** ஸுன்னத்தான நோன்பு நோற்பதற்கு **சந்தர்ப்பம் இல்லாத** மாதம்
(1) றமழான் (2) றஜபு (3) ஷவ்வால் (4) ஷ.:.பான்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**12.** பின்வரும் சந்தர்ப்பங்களில் திருமணம் ஹராமாவது
(1) மூன்று பெண்களை மணம்முடித்து, விவாகரத்துச் செய்த பின் நான்காவது திருமணத்துக்கு முயற்சித்தல்
(2) நான்கு மனைவியர்களோடு வாழும் ஒருவர் ஐந்தாவது திருமணத்துக்கு இணங்குதல்
(3) முதல் மனைவியின் விருப்பத்தைப் பெறாது திருமணம் செய்தல்
(4) மனைவி உயிருடன் இருக்கும் போது அவளது உடன் பிறந்த சகோதரியைத் திருமணம் செய்தல்

**13.** அம்மார், வியாபாரமொன்றை ஆரம்பித்து ஒரு வருட கால முடிவில் ரூ. 200 000 கடனும் ரூ. 850 000 ரூபா மிகுதியும் இருந்தது. அவ்வருடம் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ. 50 000 ரூபாவாக இருந்தது. அம்மார் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு
(1) ரூ. 2500 (2) ரூ. 13 750 (3) ரூ. 16 250 (4) ரூ. 26 250

**14.** 'ஜபீரத்' என்பது
(1) புழுதியுள்ள சுத்தமான மண் (2) காயத்துக்குப் போடப்படும் கட்டு
(3) குற்றப் பரிகாரம் (4) முகத்தை மறைக்கும் துணி

**15.** கீழே 'அ' நிரலில் சில நூலாசிரியர்களும் 'ஆ' நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) சித்திலெப்பை | A - அஜாஇபுல் ஹிந்த் |
| (ii) எமேர்ஸன் டெணண்ட் | B - அஸன்பே சரித்திரம் |
| (iii) இப்னு ஸஹ்ரயார் | C - ஸிலோன் |

இங்கு 'அ' நிரலுக்கமைய 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A B C (2) B C A (3) C A B (4) A B C

**16.** 'பர்ளு' ஐன் எனப்படுவது
(1) ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை.
(2) முஸ்லிம்கள் கூட்டமாக மட்டுமே நிறைவேற்ற வேண்டியவை.
(3) ஒவ்வொருவரும் தமது விருப்புக்கமைய நிறைவேற்ற வேண்டியவை.
(4) சமூகத்தில் ஒரு சாராராவது கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை.

**17.** நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பின் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுத முதல் நபர்
(1) ஸுல்தான் ஸலாஹுத்தீன் ஐயூபி (2) கலீபா அபூபக்ர் (ரழி)
(3) ஸுல்தான் முஹம்மத் அல்-பாதிஹ் (4) கலீபா உமர் (ரழி)

**18.** இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகள்
(1) 10 (2) 30 (3) 40 (4) 50

**19.** 'துஆஉல் இஸ்திப்தாஹ்' இல் "இன்ன ஸலாதீ..." என்ற சொற்றொடரைத் தொடர்ந்து வரும் சொற்றொடர்
(1) வமஹ்யாய வமமாதி (2) வனுஸ்கீ வமஹ்யாய (3) நுஸ்கீ வஸலாதீ (4) வனுஸ்கீ வமமாதீ

**20.** பின்வருவன இஸ்லாத்தின் துணை மூலாதாரங்களுள் சிலவாகும்.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) ஏகோபித்த முடிவு | A - அல்-உர்பு |
| (ii) ஒப்புவமை காணல் | B - அல்-இஜ்மா. |
| (iii) வழக்காறு | C - மஸ்லஹா முர்ஸலா |
| (iv) சமூக நலன் பேணல் | D - அல்-கியாஸ் |

இங்கு 'அ' நிரலுக்கமைய 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A B C D (2) A C B D (3) B D A C (4) C D A B

**21.** திருமணத்தில் ஈஜால், கபூல் ஆகிய இரண்டுக்கும் உரித்தானவர்கள்
(1) மணமகன், மணமகள் (2) வலி, மணமகன் (3) காழி, வலி (4) மணமகன், காழி

**22.** அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது எனக் குறிப்பிடப்பட்ட விடயம்
(1) பலதார மணம் (2) வர்த்தகம் (3) நேர்ச்சை (4) தலாக்

**23.** தரம் 10 ஐச் சேர்ந்த மாணவர் குழாமொன்று சுற்றுலா சென்றுள்ளது. அதில் பகல் முழுவதும் பயணத்திற்கும் இடங்களைப் பார்வையிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இச் சுற்றுலாவில் லுஹர் தொழுகைக்கான நேரம் வந்த போது எவ்வாறு தொழுகைகளை நிறைவேற்றுவது என்ற பிரச்சினை ஏற்பட்டது. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க சரியான தீர்மானம் பின்வருவனவற்றுள் எது?
(1) லுஹர், அஸர் தொழுகைகளை அவ்வவற்றிற்குரிய நேரங்களில் நிறைவேற்றிக் கொள்ளல்
(2) ஜம்உத் தக்தீம் அல்லது ஜம்உத் தஃகீர் செய்து கொள்ளல்
(3) தற்போதைக்கு தேவையான வசதிகள் இல்லாத காரணத்தினால் இரவு தங்குமிடத்தில் கழாச் செய்து கொள்ளல்
(4) பயணத்தைத் தொடர்ந்து இடையில் எங்கேனும் வசதியான இடம் கிடைத்தால் அங்கு தொழுதல்

**24.** "நிச்சயமாக நான் நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்" என்பது,
(1) அல்-குர்ஆன் வசனமாகும். (2) அல்-ஹதீஸ் வசனமாகும்.
(3) ஸஹாபாக்களின் வசனமாகும். (4) இமாம்களின் வசனமாகும்.

**25.** கியாஸின் போது தீர்வு காணப்பட வேண்டிய புதிய பிரச்சினை எவ்வாறு சுட்டப்படும்?
(1) அஸ்ல் (2) பர்உ (3) ஹுக்ம் (4) இல்லத்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

26. 'குல்உ' என்பது
(1) மனைவி கணவரிடம் விவாகரத்து கோருதல்
(2) மூன்று தலாக்கையும் ஒரே தடவையில் மொழிதல்
(3) விவாகம் செல்லுபடியற்ற நிலையை அடைதல்
(4) கணவன் மனைவியை விவாகரத்துச் செய்தல்

27. 'இஜ்திஹாத்' என்பது யாது?
(1) இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்களின் ஒன்று கூடல்
(2) ஆலோசனைச் சபை
(3) பிரச்சினையொன்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்படும் முயற்சி
(4) இஸ்லாமிய சட்டத்துறை நிறுவனங்கள்

28. ஸக்காத்தின் பர்ளுகள் இரண்டில் ஒன்று நிய்யத் வைப்பது, மற்றையது
(1) நிஸாபை அடைந்திருப்பது
(2) கணக்குப் பார்த்து வழங்குவது
(3) தகுதியானவர்களுக்குக் கொடுப்பது
(4) சமூக நலத் தேவைகளுக்கு முன்னுரிமையளிப்பது

29. 'உம்மதன் வஸதன்' என்பதன் மூலம் நாடப்படுவது
(1) நடுநிலையான சமூகம்
(2) விட்டுக்கொடுத்து வாழல்
(3) தீவிரக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
(4) மௌனமாக இருத்தல்

30. ரிஸானா, கர்ப்பிணியாக இருந்த போது அவளது கணவர் 10. 10. 2014 இல் மரணமானார். அவள் 10. 06. 2015 இல் பிள்ளையொன்றைப் பெற்றெடுத்தாள். அவள் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய காலம்
(1) 10. 10. 2015 வரை
(2) 10. 06. 2015 வரை
(3) 20. 02. 2015 வரை
(4) 10. 01. 2015வரை

31. நீரின் வகைகளுள் 'அல்மா உத் தஹுர்' எனப்படுவது
(1) அதிகளவான நீர்
(2) சுத்தமான நீர்
(3) மிகச் சுத்தமான நீர்
(4) உபயோகப்படுத்தப்பட்ட நீர்

32. 'மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி' என்பதைச் சுட்டும் சொல் யாது?
(1) கலீபதுல்லாஹ்
(2) ஹபீபுல்லாஹ்
(3) ரஸூலுல்லாஹ்
(4) கலீமுல்லாஹ்

33. ஹதீஸ் ஒன்றில் முஃமினுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு எனக் குறித்துக்காட்டப்பட்டிருப்பது
(1) அறபு மொழியை அறிந்திருப்பது
(2) தொழுகையை விடுவது
(3) ஸலாம் கூறுவது
(4) அநியாயத்துக்கெதிராகக் குரலெழுப்புவது

34. நபிகளாரின் இஸ்லாமிய அழைப்பு முயற்சியைக் கடுமையாக எதிர்த்த நபிகளாரின் குடும்பத்தைச் சேர்ந்த நபர் யார்?
(1) வலீத் பின் முகீரா
(2) உபை பின் கலப்
(3) அப்துல்லாஹ் பின் அபீ ரபீஃ
(4) அபூலஹப்

35. 'வியாபாரத்தில் பரகத்தை அழித்துவிடச் செய்யும்' என நபியவர்களால் எச்சரிக்கப்பட்ட விடயம்
(1) அளவையில் மோசடி செய்தல்
(2) பொய்ச் சத்தியம் செய்தல்
(3) பொருட்களைப் பதுக்குதல்
(4) ஊழியர்களின் சம்பளத்தைக் காலம் தாழ்த்துதல்

36. 'குப்ர்' என்பதன் கருத்து
(1) அல்லாஹ்வுக்கு நிகராக, மற்றொன்றை வணக்கத்துக்குத் தகுந்ததாகக் கருதுதல்
(2) அல்லாஹ்வை வணக்கத்துக்குரியவனாக ஏற்க மறுத்தல்
(3) மதம் மாறுதல்
(4) இறைவன் இல்லை என மறுத்தல்

37. நுஸ்ரி, கிராம மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்த வாலிபனாவான். லுஹர்த் தொழுகைக்காக மஸ்ஜித் நோக்கி வரும்போது, பாதையில் மோட்டார் சைக்கிலால் மோதுண்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த ஒருவனைக் காண்கிறான். இச்சந்தர்ப்பத்தில் அவன் முன்னுரிமை கொடுக்க வேண்டியது
(1) வேகமாகப் பள்ளிக்குச் சென்று தொழுதுவிட்டு, நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்
(2) எவரேனும் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லட்டும் எனக்கருதி பள்ளிக்குச் செல்லல்
(3) உடனடியாக நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்
(4) நோயாளியை அழைத்துச் செல்லும் பொறுப்பை மற்றொருவரிடத்தில் கையளித்தல்

38. முஹத்திஸ் என்பவர்
(1) ஹதீஸ் துறை அறிஞராவார்.
(2) பிக்ஹுத்துறை அறிஞராவார்.
(3) அல் - குர்ஆன் விளக்கவுரையாளராவார்.
(4) மஸ்ஹப் ஒன்றைப் பின்பற்றியவராவார்.

39. தூய இஸ்லாத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இமாம் அஹமத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் கடுமையான எதிர்ப்பைப் பெற்ற சிந்தனைப் பிரிவு யாது?
(1) முஃதஸிலா
(2) ஷீஆ
(3) காரிஜி
(4) முர்ஜிஆ

40. அல்-குர்ஆனைத் தொகுக்கும் முயற்சியில் கலீபாக்களான அபூபக்ர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகிய இருவரது காலங்களிலும் பிரதான பங்கேற்ற ஸஹாபி
(1) ஹுதைபதுல் யமானி (ரழி)
(2) ஸைத் பின் ஸாபித் (ரழி)
(3) ஸஃத் பின் அபீவக்காஸ் (ரழி)
(4) முஆவியா பின் அபீ சுப்யான் (ரழி)

* *

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

※ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) நஜீஸின் **இரண்டு** பிரிவுகளைக் குறிப்பிடுக.

(ii) பிக்ஹுக் கலைக்குப் பங்காற்றிய **இரண்டு** இமாம்களது பெயர்களை எழுதுக.

(iii) குப்ரை ஏற்படுத்தும் வழிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) ஹஜ், உம்ரா ஆகிய அமல்களில் பேணப்பட வேண்டிய பர்ளான விடயங்கள் **இரண்டை** எழுதுக.

(v) இஜ்திஹாத் அனுமதிக்கப்பட்டது என்பதைச் சுட்டும் அல்-குர்ஆன் வசனமொன்றைக் குறிப்பிடுக.

(vi) 'லிஹார்', விவாகரத்தில் முடிவடையும் சந்தர்ப்பத்தைத் தெளிவாகக் குறிப்பிடுக.

(vii) இஸ்லாத்தின்படி, விதியை விசுவாசிப்பதன் மூலம் கிடைக்கும் **இரண்டு** பயன்பாடுகளைத் தருக.

(viii) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ள **இரண்டு** அறபு நூல்களைப் பெயரிடுக.

(ix) ஷரீஆவின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) பொருளீட்டலை வணக்கமாக்கிக் கொள்வதற்கான **இரண்டு** வழிகாட்டல்களை எழுதுக.

**2.** (i) முஃஜிஸாத் என்றால் என்ன?

(ii) ரஸூல்மார்களுக்குக் கிடைக்கப்பெற்ற அற்புதங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) அல்-குர்ஆன் குறிப்பிடும் **ஐந்து** அற்புதங்களைப் பட்டியலிடுக.

**3.** (i) 'ஹதீஸ்' என்பதன் இஸ்லாமியப் பரிபாஷைக் கருத்தைக் குறிப்பிடுக.

(ii) ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்காகக் கையாளப்பட்ட **மூன்று** வழிமுறைகளை எடுத்துக்காட்டுக.

(iii) இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களது ஹதீஸ் துறைப் பங்களிப்பைச் சுருக்கமாக விவரிக்குக.

**4.** (i) இஸ்லாத்தில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் யாது?

(ii) ஸூரா லுக்மான் குறிப்பிடும் **மூன்று** ஒழுக்கப் பண்புகளைக் குறிப்பிடுக.

(iii) அபூபக்ர் (ரழி) அவர்களது கிலாபத்தின் போது மேற்கொண்ட **ஐந்து** பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

**5.** (i) ஸகாத் ஒரு கட்டுக்கடமை என்பதை உறுதிப்படுத்துவதற்கான அல்-குர்ஆன் ஆதாரம் அல்லது ஹதீஸ் **ஒன்றை** முன்வைக்குக.

(ii) பொறுமைக்குரிய சந்தர்ப்பங்கள் **மூன்றையும்**, அதன்போது கடைப்பிடிக்க வேண்டிய பொறுமையின் வடிவங்கள் **மூன்றையும்** எடுத்துக்காட்டுக.

(iii) தொடர்பாடல் ஊடகங்கள் கொண்டிருக்க வேண்டிய **ஐந்து** பண்புகளை விளக்குக.

**6.** (i) மஸ்ஜிதுல் அக்ஸாவை அறிமுகப்படுத்துக.

(ii) ஆண் ஒருவருக்கு, ஏக காலத்தில் திருமணம் முடிக்கத் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்ட **மூன்று** நபர்களைக் குறிப்பிடுக.

(iii) உள ஆரோக்கியத்தைப் மேம்படுத்திக் கொள்வதற்கான **ஐந்து** ஆலோசனைகளை முன்வைக்குக.

**7.** பின்வருவனவற்றுள் **இரண்டுக்கு** சிறுகுறிப்பு எழுதுக.

(i) தஸ்கியதுன்னப்ஸ்

(ii) உழைப்பின் முக்கியத்துவம்

(iii) அபூபக்ர் (ரழி) கால அல்-குர்ஆன் தொகுப்பு

(iv) உலக வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கு

* * *

Department of Examinations Sri Lanka

**4.** (i) இயேசுவானவரின் அற்புதச் செயல்களை எந்தெந்தப் பிரிவுகளில் வகைப்படுத்தலாம் ?

(ii) அப்பிரிவுகளில் **மூன்றைத்** தெரிவுசெய்து, அவை ஒவ்வொன்றின் மூலமும் இயேசுவானவரின் அதிகாரம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதென்பதைக் காண்பிப்பதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(iii) நீர் அல்லது நீர் அறிந்த ஒருவர் அனுபவித்த ஓர் அற்புதத்தைக் குறிப்பிட்டு, அதன் மூலம் ஒருவருக்குள் இறையரசு பற்றிய எவ்வாறான துலங்கல்கள் (பிரதிச்செயல்கள்) இருக்க வேண்டுமென இயேசு எதிர்பார்க்கிறார் என்பதை விளக்குக.

**5.** (i) "பொன்னும் வெள்ளியும் என்னிடமில்லை, ... இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்."

(அ) இவ்வாறு கூறியது யார் ?

(ஆ) இதன் பின்னணி என்ன ?

(ii) அவ்வேளையில் சுகமடைந்த நபர் முழுமையான சுகத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதற்கு அவரின் எச்செயல்கள் சாட்சியாகின்றன ?

(iii) இச்சம்பவத்தைப் போன்று இதற்குச் சமனான ஒரு சவாலுக்கு நீர் காண்பிக்கக்கூடிய வெவ்வேறு துலங்கல்களை (பிரதிச்செயல்களை) விளக்குக.

**6.** "இன்று நாம் வாழ்வது ஒரு பன்மைச் சமுதாயத்திலாகும்."

(i) பவுல் தமது மூன்றாவது திருத்தூதுப் பயணத்தின்போது எபேசு நகரில் எதிர்கொண்ட வெவ்வேறு சமய நம்பிக்கைகள், கொள்கைகள் யாவை ?

(ii) எபேசுவில் காணப்பட்ட இவ்வாறான சமய நம்பிக்கைகள், கொள்கைகள் ஆகியன ஏற்படுத்திய சவாலின் மத்தியில் பவுலின் துலங்கல்கள் (பிரதிச்செயல்கள்) எவ்வாறு அமைந்தன ?

(iii) மேற்படி நிலைமைகளின்போது பவுல் காண்பித்த துலங்கல்களுக்கு ஏற்ப இன்று இலங்கையில் நீர் காணும் அவ்வாறான நிலைமைகளுக்கு உமது துலங்கல்கள் எவ்வாறு அமைய வேண்டும் ?

**7.** பின்வருவனவற்றுள் **இரு** தலைப்புகளைத் தெரிவுசெய்து, அவற்றிற்குத் திருமறையின் உதாரணங்களுடன் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இன்றைய திருச்சபைகளுக்கு ஆதித் திருச்சபையின் பெறுமதிகளின் முக்கியத்துவம்

(ii) கிறிஸ்தவத் திருமுழுக்கு

(iii) சமாதானத்திற்கு அர்ப்பணிப்போம்

(iv) எருசலேம் சங்கம்

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

OL/2018/16-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

03.12.2018 / 0830 - 1140

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## இஸ்லாம் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** அல்லாஹ்வின் திருநாமங்களில் 'அர்-ரஹீம்' என்ற சொல் சுட்டும் பொருள்
(1) மிகவும் தூய்மையானவன் (2) அதிகம் மன்னிப்பவன்
(3) நிகரற்ற அன்புடையவன் (4) அனைத்தையும் அறிந்தவன்

**2.** இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைபவை,
(1) அல் - குர்ஆனும் சுன்னாவும் (2) இஜ்மாவும் கியாஸும்
(3) அல் - குர்ஆனும் இஜ்மாவும் (4) கியாஸும் உர்பும்

**3.** ப.்ஸ், மஹ்ஷர், ஹிஸாப், ஜன்னா போன்ற மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கும் பிரிவு
(1) அல் - இலாஹிய்யாத் (2) அன் - நுபுவ்வாத்
(3) அஸ் - ஸம் இய்யாத் (4) அர் - ருஹானிய்யாத்

**4.** 'வரஉ' என்பது பேணுதலைக் குறிப்பது போல 'தக்வா' என்பது எதனைக் குறிக்கும்?
(1) பாவமன்னிப்பு (2) இறையச்சம்
(3) பற்றற்ற வாழ்வு (4) பொறுப்புச் சாட்டல்

**5.** இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்), அபுமன்ஸூர் அல் - மாதுருதி (ரஹ்) ஆகிய இருவரும்,
(1) அகீதாக் கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(2) ஹதீஸ் கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(3) சட்டக் கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(4) தப்ஸீர் கலை தொடர்பான அறிஞர்களாவர்.

**6.** இமாம் மாலிக் (ரஹ்) அவர்களது சிறப்புப் பெயர்
(1) இமாமுல் அ.்ழம் (2) ஆலிமுல் குறைஷ்
(3) ஸைபுல்லாஹ் (4) இமாமுல் மதீனா

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

7. நபி (ஸல்) அவர்களது காலத்தில், தான் ஒரு நபி என்று வாதிட்டவர்
   (1) துலைஹா  (2) ஸஜா  (3) முஸைலமா  (4) அஸ்வத் அன்ஸி

8. 'குத்தாபுல் வஹி' எனப்படுவோர்
   (1) அல் - குர்ஆனை மனனமிட்டோர்
   (2) அல் - குர்ஆனுக்கு விளக்கமளித்தோர்
   (3) அல் - குர்ஆனை தனிப்பட்ட முறையில் எழுதி வைத்தோர்
   (4) வஹி அருளப்பட்டதும் நபி (ஸல்) அவர்களது மேற்பார்வையில் அதனை எழுதிப் பதிவு செய்தோர்

9. சுன்னத்தான நோன்பு நோற்பதற்குப் பொருத்தமான வார நாட்கள்
   (1) வெள்ளி, சனி  (2) திங்கள், வியாழன்
   (3) ஞாயிறு, திங்கள்  (4) வியாழன், வெள்ளி

10. தொழுகையின் பர்ளுகளில் **அடங்காதது**
   (1) முதல் தக்பீர் சொல்லல்  (2) பாதிஹா சூரா ஓதுதல்
   (3) இரு சுஜூதுகள் செய்தல்  (4) தொழும் இடம் சுத்தமாக இருத்தல்

11. 'அ.்.லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்' எனப்படுவோர்
   (1) ஹதீஸ் கிரந்தங்களைத் தொகுத்தோர்
   (2) நபி (ஸல்) அவர்களையும் ஸஹாபாக்களையும் பின்பற்றி வாழ்வோர்
   (3) நான்கு இமாம்களையும் பின்பற்றுவோர்
   (4) இஸ்லாமிய அகீதாவுக்கு முரண்பட்டோர்

12. ஒரு மு.்.மினிடம் இரு பண்புகள் இருக்கவே கூடாது என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்விரு பண்புகளும் யாவை?
   (1) வட்டியும் சூதும்
   (2) பொய்யும் நாணயமின்மையும்
   (3) பொய்யும் களவும்
   (4) போதைப் பொருள் பாவனையும் நாணயமின்மையும்

13. பெரிய நீர்த்தடாகமொன்றில் பாசி படர்ந்ததனால் நீரின் நிறமும் சுவையும் மாற்றமடைந்துள்ளது. இந்நீரில்
   (1) வுழு செய்யலாம்.
   (2) வுழு செய்யலாகாது.
   (3) வுழு செய்யாதிருப்பது நல்லது.
   (4) வுழு செய்து தொழலாம். ஆனால் சுத்தமான நீர் கிடைத்ததும் வுழு செய்து மீள தொழ வேண்டும்.

14. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்லும் ஒருவர் ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்தார். இச்செயற்பாடு
   (1) அத்தமத்துஉ எனப்படும்.  (2) அல் - இப்ராத் எனப்படும்.
   (3) அல் - கிரான் எனப்படும்.  (4) அல் - இத்லாக் எனப்படும்.

15. சீகிரியா ஓவியத்தைப் பார்வையிடுவதற்காக மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர், அவர்களை சுமார் ஐந்து மணியளவில் ளுஹர் தொழுகையை அஸருடன் சேர்த்துத் தொழ வைத்தார். இம்முறையானது
   (1) ஜெம்உ எனப்படும்.  (2) கஸ்ரு எனப்படும்.
   (3) ஜெம்உ தக்தீம் எனப்படும்.  (4) ஜெம்உ த.்.ஹீர் எனப்படும்.

16. மஸ்ஜிதுல் கிப்லதைன் அமைந்துள்ள இடம்
   (1) மக்கா  (2) தாயிப்  (3) மதீனா  (4) ஜித்தா

17. ஒருவரிடம் வருடம் முழுவதும் ஏழு இலட்சம் ரூபாய் இருந்தது. அவ்வருடத்தில் ஸகாத்தின் நிஸாப் ரூ. [illegible] ஆகும். அவர் செலுத்த வேண்டிய கடன் ஒரு இலட்சம் ரூபா எனில், வருட முடிவில் அவர் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு
   (1) ரூ. 12,000  (2) ரூ. 13,000  (3) ரூ. 14,000  (4) ரூ. 15,000

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**18.** அல் - குர்ஆனில் இடம்பெற்றுள்ள நீண்ட சூரா
(1) அல் - கஃபு (2) ஆல இம்ரான் (3) அல் - பகரா (4) அல் - முல்க்

**19.** இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ள பிரபலமான இமாம்களுள் ஒருவர்
(1) இமாம் ஷாபிஈ (ரஹ்) (2) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
(3) இமாம் இப்னு கஸீர் (ரஹ்) (4) இமாம் புஹாரி (ரஹ்)

**20.** இறந்த கணவனுக்காக இத்தா அனுஷ்டிக்கும் ஒரு பெண் கட்டாயம் **தவிர்த்துக்** கொள்ள வேண்டிய ஒரு விடயம்
(1) திருமணம் முடித்தல் (2) உழைப்பதற்காக வெளியே செல்லல்
(3) தொலைக்காட்சி பார்த்தல் (4) வைத்தியரிடம் செல்லல்

**21.** "அறபு மொழி ஒவ்வொரு முஸ்லிமினதும் வீட்டு மொழியாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன்" எனக்கூறிய நம் நாட்டு அறிஞர்
(1) டீ.பி ஜாயா (2) அறிஞர் சித்திலெப்பை
(3) ஏ.எம்.ஏ அஸீஸ் (4) சேர் மாகான் மாகார்

**22.** கீழே **X, Y** எனும் நிரல்களில் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதோவொரு வகையில் ஒன்றுடனொன்று தொடர்புடையவை. அதன்படி **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்தும்போது சரியான ஒழுங்குமுறையில் அமையும் விடையினைத் தெரிவுசெய்க.

| | **X** | | **Y** |
|---|---|---|---|
| (i) | இபாதத் | A | - கைவெட்டுதல் |
| (ii) | முஆமலாத் | B | - ஈகை |
| (iii) | அஹ்லாக் | C | - ஸகாத் |
| (iv) | ஹுதூத் | D | - கூட்டு வியாபாரம் |

(1) A B C D (2) B C D A (3) C D B A (4) D C B A

**23.** ஜனாஸா தொழுகையில் மூன்றாம் தக்பீருக்குப் பின்னர் ஓதவேண்டியது
(1) ஸூரதுல் பாதிஹா (2) நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து
(3) ஜனாஸாவுக்காக பிரார்த்தித்தல் (4) ஸலாம் கூறல்

**24.** குளிப்புக் கடமையானவர் தண்ணீரைப் பயன்படுத்த முடியாது என்பதற்காக தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்ற மறுக்கிறார். அவருக்கு நீர் கூறும் ஆலோசனை யாது?
(1) நீங்கள் குளித்து கட்டாயம் தொழுகையை உடன் நிறைவேற்ற வேண்டும்.
(2) நீங்கள் தயம்மும் செய்து தொழ வேண்டும்.
(3) தொழுகையை தவிர்க்க உங்களுக்கு அனுமதி உண்டு.
(4) நீங்கள் தொழுகையை பின்னர் கழா செய்ய வேண்டும்.

**25.** மனைவியை மீட்டுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் விவாகரத்து முறை
(1) ரஜஈ (2) [illegible] (3) ழிஹார் (4) ஈழாஉ

**26.** மார்க்கரீதியில் அனுமதிக்கப்பட்ட பயணத்தை மேற்கொண்டு நிர்க்கதியான நிலையில் ஸகாத் பெறுவதற்கு உரித்துடையவர்
(1) காரிமூன் (2) இப்னு ஸபீல் (3) பீஸபீல் (4) முஸாபிர்

**27.** ஸகாத், ஸகாதுல் பித்ரா ஆகியன தொடர்பான மிகச்சரியான கூற்று
(1) ஸகாத் பர்ளு, ஸகாதுல் பித்ரா சுன்னத் ஆகும்.
(2) இரண்டும் ரமழான் மாதத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(3) இரண்டும் ஒரே நேரத்தில் கடமையாக்கப்பட்டவை.
(4) ஸகாதுல் பித்ரா முன்பும் ஸகாத் அதன் பின்பும் கடமையாக்கப்பட்டவை.

**28.** திருமணத்தில் வலியாக இருப்பதற்குப் **பொருத்தமற்றவர்**
(1) தந்தை (2) தந்தையின் தந்தை
(3) தாயின் சகோதரன் (4) தந்தைவழிச் சகோதரனின் மகன்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

47825

**29.** நபி (ஸல்) அவர்கள் இறுதியாக மணம்முடித்த விதவைப் பெண்
(1) மைமூனா (ரழி) (2) ஸபிய்யா (ரழி) (3) ஸைனப் (ரழி) (4) உம்மு ஹபீபா (ரழி)

**30.** 'ஹய்ய அலஸ் ஸலாஹ்' என்பதன் பொருள்
(1) தொழுகை ஆரம்பமாகிவிட்டது.
(2) தொழுகைக்கு விரைந்து வாருங்கள்.
(3) வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்.
(4) தொழுகை தூக்கத்தைவிடச் சிறந்தது.

**31.** மனோ இச்சைக்கு ஆட்பட்டு பாவங்களைச் செய்துகொண்டிருந்த ஒரு மாணவன் 'தஸ்கியதுன் நப்ஸ்' என்ற பாடத்தைக் கற்ற பின்னர் மனம் நொந்து தன்னை மாற்றிக்கொள்ள எண்ணினான். இவ்வாறு எண்ணும் உள்ளம்,
(1) நப்ஸுல் முத்ம இன்னா எனப்படும். (2) நப்ஸுல் லவ்வாமா எனப்படும்.
(3) நப்ஸுல் அம்மாரா எனப்படும். (4) நப்ஸுன் ஸலீம் எனப்படும்.

**32.** இலங்கையில் இஸ்லாம் பற்றிக் குறிப்பிடும் 'புதூஹுல் புல்தான்' எனும் நூலின் ஆசிரியர்
(1) இப்னு ஷஹ்ரயார் (2) இப்னுல் அரபி (3) இப்னு ஹிஷாம் (4) பலாதூரி

**33.** ஹுகூகுல் இபாதில் அடங்கும் விடயம்
(1) அல் - குர்ஆன் ஓதல் (2) சுன்னத்தான தொழுகையை நிறைவேற்றல்
(3) சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல் (4) ஹதீஸ்களை மனனம் செய்தல்

**34.** அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவராகக் கருதப்படும் நபித்தோழர்
(1) அனஸ் (ரழி) (2) தல்ஹா (ரழி) (3) உமர் (ரழி) (4) அபூஹுரைரா (ரழி)

**35.** 'கியாமுல்லைல்' என்பது
(1) ரமழான் மாத இரவில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல்
(2) ரமழான் மாத 27ஆம் இரவில் வணக்கத்தில் ஈடுபடுதல்
(3) இரவு நேரத்தை நல்லமல்களில் கழித்தல்
(4) ரமழான் மாத இரவில் பிந்திய பகுதியை வித்ர் போன்ற வணக்கங்களில் கழித்தல்

**36.** 'தர்தீபுந்நுஸுல்' என்பது
(1) அல் - குர்ஆன் ஓதும் முறை
(2) அல் - குர்ஆன் எழுதப்பட்ட ஒழுங்குமுறை
(3) அல் - குர்ஆன் இறங்கிய ஒழுங்குமுறை
(4) அல் - குர்ஆன் பாதுகாக்கப்பட்ட ஒழுங்குமுறை

**37.** அவதூறு கூறிய ஒருவருக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை
(1) 10 கசையடிகள் (2) 40 கசையடிகள் (3) 60 கசையடிகள் (4) 80 கசையடிகள்

**38.** இஸ்லாத்தைப் போதிப்பதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட சமயப் போதகர்
(1) காலித் இப்னு பகாயா (2) ஒறாபி பாஷா
(3) இப்னு பதூதா (4) வஹப் இப்னு அபிஹப்ஸா

**39.** நஜீஸ் கலந்த ஆடைகளைச் சலவை இயந்திரத்திலிட்டுக் (Washing Machine) கழுவும்போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம்
(1) நன்றாகக் கழுவுதல்
(2) மணமான சலவைத்தூளை உபயோகித்தல்
(3) மூன்று முறை கழுவுதல்
(4) சலவை இயந்திரத்திலிருந்து வெளியில் எடுத்து ஒவ்வொரு ஆடையையும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது நீரை ஓடவிட்டுக் கழுவுதல்

**40.** 'முஹாஸபா' என்பதன் மூலம் கருதப்படுவது
(1) சுய விசாரணை (2) உளத்தூய்மை
(3) இறை திருப்தி (4) பொறுமையைக் கடைப்பிடித்தல்

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**16 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

✳ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் எறியப்பட்டபோது கூறிய வாசகம் யாது?
(ii) ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட சந்தைகள் **இரண்டினைப்** பெயரிடுக.
(iii) தற்காலிக மஹ்ரமிகளுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.
(iv) அர்கானுல் கியாஸைக் குறிப்பிடுக.
(v) சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகள் **இரண்டை** எழுதுக.
(vi) தவ்பா அங்கீகரிக்கப்படுவதற்குத் தேவையான நிபந்தனைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(vii) வியாபாரப் பொருட்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் **இரண்டினை** எழுதுக.
(viii) இஸ்லாம், பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் **இரண்டினைத்** தருக.
(ix) நோன்பின் பர்ளுகள் **இரண்டினையும்** குறிப்பிடுக.
(x) பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2.** (i) 'ஈமான் முபஸ்ஸல்' என்றால் என்ன?
(ii) ஷிர்க் அக்பரின் வகைகள் **இரண்டையும்** உதாரணங்களுடன் குறிப்பிடுக.
(iii) ஈமான் ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**3.** (i) தவாபின் வகைகளில் **இரண்டினைப்** பெயரிடுக.
(ii) ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் பயன்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) ஹஜ்ஜின் வாஜிபுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**4.** (i) ஷீஆ, கவாரிஜ் ஆகிய பதங்களை வேறுபடுத்துக.
(ii) மக்கா வெற்றியின் விளைவுகள் **மூன்றினைத்** தருக.
(iii) ஒரு வாலிபன் தன்னைத் தீமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளாக இஸ்லாம் குறிப்பிடும் **ஐந்து** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

**5.** (i) 'தஃவா' என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
(ii) மக்கா கால தஃவாவின்போது நபி (ஸல்) அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) ஹிஜ்ரத் பயணத்தின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

6. (i) பெரும்பாவங்களில் **நான்கினைத்** தருக.

(ii) பலதாரமணம் அனுமதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் **ஐந்தினைத்** தெளிவுபடுத்துக.

7. பின்வருவனவற்றுள் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) அல் - குர்ஆன் அருளப்படல்

(ii) கஸ்ரு - ஜம்உத் தொழுகை

(iii) தேசப்பற்று

(iv) மஸ்ஜிதுன் நபவி

***

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka